www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1-15 மே '91 6/12 விலை ரூ.2



அம்பேத்காருக்கு நூற்றாண்டு விழா 'அரிசனங்'களுக்கு தூக்குமரம்

## தேர்தல் அறிக்கைகள்: சர்வகட்சி மோசடி!




படிப்பகம்

www.padippakam.com

# அபலை கற்பழித்து கொலை:
# கொலைகாரர்களுக்கு போலீசு காவல்!
# நியாயம் கேட்ட வி.வி.மு. மீது தாக்குதல்!

கூலிவிவசாயி வீரையா, தனது 17 வயது மகள் தங்கம்மாளுடன் மதுரை - உத்தம பாளையம் பண்ணைபுரம் கிராமத்தில் வசித்து வருகிறார். உடல்நிலை மோசமான வீரையா ஆபரேசன் செய்ய வேண்டி வந்து ஒருமாத காலமாக மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றார். அப்பொழுதெல்லாம் தங்கம்மாள்தான் கூலிவேலைக்குச் சென்று இவரை பேணி வந்தாள். 21.3.91 அன்று வீரையா மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய பொழுது தனது வீட்டு வாசலிலே கூட்டம் கூடியிருப்பதைக் கண்டு பதறியடித்துக் கொண்டு விரைகிறார். வந்து பார்த்தால், தங்கம்மாள் தூக்கிலே தொங்குகிறாள். துடிதுடிக்கிறார்; அடித்துக் கொண்டு கதறியழுகிறார்.

கொஞ்ச நேரத்தில் போலீசு வந்து சோதனை நடத்துகிறது. தங்கம்மாள் ஆடை கிழிந்திருக்கிறது. கால்களில் பாவாடையில் ரத்தம் அப்பி, கால்கள் தரையில் மோதியபடி துக்கிலே தொங்குகிறாள். அருகே ஒரு ஆணின் ஊதா நிற சட்டையும், சில சிகரெட் துண்டுகளும் கிடக்கின்றன. அப்பட்டமாக தெரிகிறது; யாரோ கற்பழித்து கொலை செய்திருக்கிறார்கள்! போலீசும் வேறுவழியில்லாமல் இது கொலைதான் என ஒத்துக்கொள்கிறது. தக்க நடவடிக்கை எடுக்கிறோம் எனக் கூறி பிணத்தை மருத்துவப் பரிசோதனைக்கு எடுத்துச் செல்கிறது. வீரையா இன்னும் கதறி அழுது கொண்டிருக்கிறார்.

தங்கம்மாளுக்கும் எதிர்வீட்டு செந்திலுக்கும் (சினிமா கிறுக்கன்) தொடர்பு இருந்ததாக தெரிகிறது. செந்தில், செந்திலின் அண்ணன் ஜெய்பால், தெருக்காரர்கள் கோபால், மாரியப்பன், இன்னும் சிலரும் செந்திலின் அண்ணி வள்ளி உதவியுடன் தங்கம்மாளை கற்பழித்து கொலை செய்ததாக ஊர்மக்கள் பேசுகிறார்கள். பெரிதும் நம்புகிறார்கள். இதற்கு அடிப்படையும இருக்கிறது.

வீரையாவின் வீட்டை முதலில் திறந்து பார்த்தவர் தங்கம்மாளின் சித்தப்பா காளிதாஸ்! உடன் (20.3.91 அன்று இரவு) இவர் கோம்பை போலீசு நிலையத்திற்கு தகவல் தரச் சென்ற பொழுது அங்கு ஏற்கனவே ஜெயபால், கோபால் இன்னும் சிலரும் வந்து இது விசயமாக பேசியுள்ளது தெரிய வந்தது. போலீசும் அலட்சியமாக மறுநாள் காலை வந்து பார்ப்பதாக கூறியது.

21-ந் தேதி பிணத்தை போஸ்ட் மார்டத்திற்கு எடுத்துச் சென்ற போலீசு, கையோடு பத்திரிக்கைகளுக்கு தற்கொலை என செய்தி கொடுத்தது. வறுமையின் கொடுமையால் தங்கம்மாள் தற்கொலை செய்து கொண்டாள் என தினத்தந்தி மறுநாள் செய்தி வெளியிட்டது.

உள்ளூர் பெரும்புள்ளியான தியாகராஜ தியேட்டர் பங்குதாரர் சுப்புராஜ், போலீசு நிலையத்தை அடிக்கடி சுற்றி வந்து குற்றவாளிகளை தப்பிவிக்க பெரிதும் முற்சியெடுத்தார். இக்கொலையில் இவருக்குள்ள தொடர்பு வெளிவராமல் அமுக்கப்பட்டது.

தங்கம்மாள் போலவே பண்ணைபுரத்தில் பல தாழ்த்தப்பட்ட பெண்கள் பலியாகி இருக்கிறார்கள். வடிவேல் கவுண்டர் என்ற நிலப்பிரபு செய்த கற்பழிப்புகளுக்கும் கொலைகளுக்கும் கணக்கே கிடையாது.

வடிவேல் கவுண்டர் வழியில் சுப்புராஜ் போன்றவர்கள் இன்று புறப்பட்டு இருக்கிறார்கள். இப்பிரச்சினையையும் எக்கட்சியும் கண்டு கொள்ளவில்லை. இந்நிலையில் விவசாயிகள் விடுதலை முன்னணி இப்பிரச்சினையில் தலையிட்டு குற்றவாளிகளை அம்பலப்படுத்தியது. கொலையாளிகளையும், மருத்துவ பரிசோதனை செய்த அதிகாரி கருணாகரனையும் கைது செய்யக்கோரி தட்டி எழுதி வைத்தது. பின்னர் போலீசு கண்துடைப்பிற்காக ஊரில் சிலரை விசாரித்தது. மறுபுறம் வி.வி.மு. தட்டிகளை எடுத்துச் சென்று பகிரங்கமாகவே உடைத்து கிழித்து போட்டது.

எனவே, இது தொடர்பாக கண்டனக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டு கோம்பை போலீசு நிலையத்தில் வி.வி.மு.வினர் மனு கொடுத்தனர். கூட்டத்திற்கு அனுமதி மறுக்க நேரடியான காரணம் எதுவுமில்லாததால் கொல்லைப் புறவழியில் கூட்டம் நடக்காதபடி செய்ய முதலில் முயன்றது. கூட்டத்திற்கு பிரசுரம் அடிக்க முடியாதவண்ணம் சுற்று வட்டாரத்திலுள்ள அச்சக உரிமையாளர்களை மிரட்டியது. இதேபோல் ஒலி பெருக்கி உரிமையாளர்களையும் மிரட்டியது. ஆனால் வி.வி.மு. பிரசுரம் அடித்து; ஒலி பெருக்கி ஏற்பாடு செய்தது.



பொதுக் கூட்டத்திற்கு பேசவந்த தோழர்கள் கே.பி.ராமசாமி, மோகன் ஆகியோரை பண்ணைபுரம் பேருந்து நிறுத்தத்திலேயே மறித்து, கூட்டம் நடத்த அனுமதியில்லை என தெரிவித்தார், இன்ஸ்பெக்டர் நடராஜன். பேச்சாளர்களை பஸ் ஸ்டாண்டிலேயே திருப்பி அனுப்பிவிட்டால் அவர்களாகவே கூட்டத்தை நிறுத்தி விடுவார்கள் என எதிர்பார்த்து கோமாளித்தனமாக முயற்சித்தது. ஆனால் தோழர்கள், கூட்டம் ஏற்பாடு செய்தவர்களை பார்த்து பேசிக் கொள்கிறோம் என்று கூறிவிட்டு ஊருக்குள் நுழையவே ஏமாந்தது போலீசு.

அப்படியும் விடுவதாக இல்லை, கூட்ட அறிவிப்பு போஸ்டர் தட்டிகளை எல்லாம் கிழித்துப் போட்டது. கூட்டத்திற்கு மின்சாரம் கொடுத்து உதவிய வி.வி.மு. ஆதரவாளரை மிரட்டியது. ஆனால் அவர் தக்க சூடு கொடுக்கவே முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு போனது. கூட்டம் நடத்தும் இடத்தில் காலைமுதலே போலீசு கும்பல் 'பாரா' போட்டு, மக்களுக்கு பீதியூட்டியது. மதியம் முதல் இன்ஸ்பெக்டர் நடராஜன் 'டேபிள்-சேர்' போட்டு உட்கார்ந்து கொண்டார். இப்படி பண்ணைபுரத்தையே பதட்டநிலைக்கு கொண்டு வந்தது போலீசு!

மாலை ஐந்தரை மணியளவில் ஊரில் இரண்டு இடங்களில் கூட்ட அறிவிப்பு பிரச்சாரம் செய்துவிட்டு கூட்டத் திடலுக்கு தோழர்கள் வந்தபொழுது அனுமதியில்லை என தடுத்தது போலீசு. ஒலிபெருக்கிக்குத் தான் சட்டப்படி உங்கள் அனுமதி; எனவே ஒலிபெருக்கி இல்லாமல் தெருமுனைக் கூட்டம் நடத்திக் கொள்கிறோம் என்றதற்கு எந்த கூட்டமும் நடத்தக் கூடாது என தடுத்தார் இன்ஸ்பெக்டர் நடராஜன். ''நாங்கள் உண்மையை மக்களிடம் சொல்லியே தீருவோம்'' எனக் கூறிவிட்டு 'தப்பு' அடித்து பிரச்சாரத்தை தொடங்கினர் வி.வி.மு.வினர்!

இஞ்சித் தின்ற குரங்காக தவித்த நடராஜன், தோழர்களை கைது செய்ய வேன் கொண்டு வர ஏற்பாடு செய்தார். அதற்குள் தோழர்கள் பேசவேண்டியதை பேசிமுடித்தனர். 10 வயது இளந்தோழர் சுமதி உட்பட 8 பேரை போலீசு கைது செய்தது. போலீசு நிலையம் வரை போலீசை அம்பலப்படுத்தி தோழர்கள் போட்ட முழக்கம் மேலும் நல்ல பிரச்சாரமாக அமைந்தது. கூட்டத் திடலில் கூடியிருந்த 300-க்கும் மேற்பட்ட மக்கள் தோழர்களின் உறுதிகண்டு பாராட்டினார்.

போலீசு நிலையத்திலிருந்து வெளி வந்த தோழர்கள் (போலீசு உடனே விடுவித்துவிட்டது) மறுநாள் அதே இடத்தில் தெருமுனைக்கூட்டம் நடத்தினர். ''மேற்கண்ட போலீசின் நடவடிக்கை, தங்கம்மாள் கற்பழித்து கொலை செய்யப்பட்டதையும் அதற்கு உடந்தையாக போலீசு செயல்படுவதையும் எடுத்துக்காட்ட ஆதாரமாகி நிற்கிறது'' என அம்பலப்படுத்தினர். அடுத்தக் கட்ட நடவடிக்கைக்கு மக்களை தயார்ப்படுத்தி வருகின்றனர்.

— தகவல்: வி.வி.மு. உத்தமபாளையம்.

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

12

1-15 மே'91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:



செ.மதியழகன்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


# நாறுது நாடாளுமன்ற - சட்டமன்ற ஆட்சி
# நாடு காக்கப் புதிய ஜனநாயகப் புரட்சி

பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான பிரச்சாரம் சூடுபிடித்துவிட்டது. ஆனால் இத்தேர்தல்களில் வாக்காளர்களுக்கு அவ்வளவு ஆர்வம் கிடையாது; பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளின் மீதும் வாக்காளர்கள் நம்பிக்கை இழந்து, வெறுப்படைந்து இருக்கிறார்கள்; வாக்குப்பதிவு கூட மந்தமாகவும் குறைவாகவும் இருக்கும் என்று பத்திரிக்கைகளும் அரசியல் விமர்சகர்களும் கூறுகின்றனர். தேர்தலுக்குத் தேர்தல் இந்தப்போக்கு வளர்ந்து கொண்டே போகிறது; ஒரு கட்டத்தில் இந்திய நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயக ஆட்சியின் மீதே மக்கள் நம்பிக்கை இழந்துபோய் விடுவார்களோ என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

ஆகவே இந்திய நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயக ஆட்சியின் மீது, குறிப்பாக ஓட்டுரிமையின் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் நோக்கத்தோடு பல வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றிலே முக்கியமானது, ''ஓட்டுரிமை ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமை. இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பதற்கு நமக்குள்ளே அதிகாரம். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நம்மை யார் யார், எந்தக் கட்சி ஆளுவது என்பதை முடிவு செய்வதற்குள்ள அரிய வாய்ப்பு. எனவே இந்த வாய்ப்பைத் தவறாது பொறுப்போடும் விவேகத்தோடும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நமது கடமை'' என்று பிரச்சாரம் செய்கிறார்கள். இந்திய ஜனநாயகத்தில் இன்னமும் நம்பிக்கை வைத்துள்ள சில 'அறிவாளி'களும் கூட இதையே எதிரொலிக்கின்றனர். இது உண்மையா? இல்லை.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கு யார் யார், எந்தக் கட்சி ஆளுவது என்பதைத் தீர்மானிப்பதற்கு மட்டுத்தான் ஓட்டுரிமை உள்ளது! அவர்கள் எப்படி ஆள வேண்டும், எப்படி ஆளக்கூடாது என்பதைத் தீர்மானிப்பதற்கான உரிமையோ, அதிகாரமோ நமக்குக் கிடையாது. தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் தரும் வாக்குறுதிகளை மட்டுமல்ல; தேர்தல் அறிக்கைகளையே கூட நிறைவேற்ற வேண்டும், அந்த அடிப்படையில்தான் ஆள வேண்டும் என்கிற கட்டாயம், கட்டுப்பாடு, ஒப்பந்தம், நிர்ப்பந்தம் எதுவும் கிடையாது. நாமும் சட்ட பூர்வமாக செல்லுபடியாகும் நிபந்தனையோடு ஓட்டுப்போடும் உரிமை கிடையாது. ஆகவே ஓட்டுப்போடுவது என்பது ஒரு வெற்றுத்தாளில் கையொப்பமிட்டு நம்மை எப்படி வேண்டுமானாலும் ஆளுவதற்கான முழு உரிமையையும் அதிகாரத்தையும் தாரைவார்த்துத் தருவதுதான்.

தேர்ந்தெடுக்கும் மக்களாகிய நமது நலன்களுக்காகப் பாடுபடும் வரையில்தான் எம்.எல்.ஏ., எம்.பி.க்களும் மந்திரிகளும் அவர்களுடைய கட்சிகளும் மக்கள் பிரதிநிதிகள்; அவர்கள் தமது சொந்த நலன்களுக்காக நமக்கு எதிராகவே அடக்குமுறை, லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளில் ஈடுபடும் போது எப்படி மக்கள் பிரதிநிதிகளாக முடியும்? அது மட்டுமல்ல நமக்கு எதிராக தரகு அதிகார முதலாளிகளும், நிலப்பிரபுக்களும், ஏகாதிபத்திய வாதிகளும் கொள்ளையிடவும் ஒடுக்கவும் அவர்களது ஆட்சி சேவை செய்கிற போது அவர்கள் எப்படி மக்கள் பிரதிநிதிகளாக முடியும்? அப்படிப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கோ, பதவி நீக்கம் செய்வதற்கோகூட தேர்ந்தெடுத்த மக்களுக்கு அதிகாரம் கிடையாது. அதற்கான அதிகாரமும் மற்ற பிற எம்.எல்.ஏ., எம்.பிக்களுக்கும், அவர்களாலேயே நியமிக்கப்பட்ட கமிஷன் அல்லது வழக்குமன்ற அதிகாரிகளுக்குத்தான் உண்டு. எனவே என்ன குற்றம் வேண்டுமானாலும் செய்துவிட்டு எளிதில் அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.

எனவேதான், ''ஓட்டுப்போட்டதோடு உங்கள் வேலை முடிந்து போனது. இனிநான் என்னவேண்டுமானாலும் செய்வேன். ஐந்தாண்டுகளுக்கு எனக்கு ஆட்சி உரிமை இருக்கிறது என்னை ஒன்றும் நீங்கள் அசைக்க முடியாது'' என்று திமிரோடு நடக்கிறார்கள், நாம் தேர்ந்தெடுக்கும் எம்.எல்.ஏ., எம்.பிக்கள் மந்திரிமார்கள். இதை மீறி அவர்களுக்கு எதிராக மக்கள் ஏதாவது நடவடிக்கையில் இறங்கினாலோ அவர்களது பணிகளை கடமைகளைச் செய்யவிடாமல் தடுத்ததாக மக்களையே தண்டிக்கும் அதிகாரம் அவர்களுக்குண்டு. பிறகு நாம் என்ன செய்ய முடியும்? ஓட்டுப்போடுவது என்பதே நமக்கு எதிராக நாமே அடிமை சாசனம் எழுதிக் கொடுத்து நமது எஜமானர்களைத் தேர்ந்தெடுப்பது ஆகிவிடுகிறது.

கடைசியில் அவர்களுடைய லஞ்ச, ஊழல், பேரம் பேசி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்துவது வரையிலான எல்லா அக்கிரமங்கள், அயோக்கியத் தனங்களுக்கும் தேர்ந்தெடுத்த நம்மீதே பழிபோடுகிறார்கள். தகுதி - திறமையும், நேர்மை - சேவை உணர்வும் மிக்க நபர்களையும் சரியான, கட்சியையும் பார்த்து ஓட்டுப்போடத் தவறிவிட்டோம் என்று நம்மையே காரணமாக்குகிறார்கள். கள்ளச்சந்தை, கள்ளச்சாராயம், கடத்தல் - கறுப்புப்பண முதலைகள், தொழிற்சங்கத் தரகர்கள், நிலப்பிரபுக்கள் மட்டுமல்ல; பள்ளி - கல்லூரிப் பேராசிரியர்கள், டாக்டர்கள், பொறியியல் வல்லுநர்கள், ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். அதிகாரிகள், வக்கீல்கள், விளையாட்டு வீரர் - சினிமாக் கலைஞர்களும்தான் இன்றைய ஆபாச, கிரிமினல், பொறுக்கி - கழிசடை அரசியலின் ஊற்று மூலங்களாகவும், விஷச்செடிகளாகவும் விளங்குகின்றனர். இவர்கள் தமது பழைய தொழில்களை விடப் பன்மடங்கு வருமானம் பார்ப்பதற்கே அரசியலில் குதிக்கின்றனர்.

எனவே இன்றைய அரசியல் கட்சிகள், தலைவர்கள் அனைவர் மீதும் மக்கள் வெறுப்படைவதும், இந்த நாடாளுமன்ற - சட்டமன்ற போலி ஜனநாயகத்தின் மீதே நம்பிகை இழப்பதும், இந்தத் தேர்தல்களில் ஆர்வம் காட்டாததும் நியாயமானதுதான். ஆனால் நாம் இதோடு நிற்கக் கூடாது. இவை அனைத்தையும் புறக்கணித்துவிட்டு, நம்மை ஆளுவதற்காக வேறொருவரைத் தேர்ந்தெடுப்பதைக் கைவிட்டு அதிகாரம் முழுவதையும் நாமே கையில் எடுத்துக் கொள்வதற்கான புதிய ஜனநாயகப் புரட்சியில் இறங்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் அறிக்கைகள்: சர்வகட்சி மோசடி!

**இந்த அரசியல் கட்சிகள் மோசடியானவை, நம்பிக்கைத் துரோகமானவை என்பதை அம்பலப்படுத்துவதற்கு குறைந்த பட்சம் அவற்றின் தேர்தல் அறிக்கைகள் பயன்படுகின்றன.**

ஒவ்வொருமுறை தேர்தல் திருவிழா வரும்போதும் தவறாமல் நடக்கும் சடங்குதான், அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கைகள் வெளியிடுவது. இருந்தபோதும், அவற்றால் எந்தவிதப் பயனும் இல்லை என்று கூறிவிட முடியாது.

ஒவ்வொரு கட்சியும் தமது தேர்தல் அறிக்கையில் தரும் வாக்குறுதிகளை எப்படி, எப்போது நிறைவேற்றப் போகிறதெனக் குறிப்பிட வேண்டிய கட்டாயம் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது தொழில், வர்த்தகச் சட்டத்தில் உள்ளதைப் போல வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதற்காக ஒப்பந்தத் துரோகமென அரசியல் கட்சிகளின் தலைவர்களைத் தண்டிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள் - தேர்தல் அறிக்கைகளே யாரும் வெளியிட மாட்டார்கள். இவை இரண்டுமே இப்போது இல்லை.

மேடைக்கும் நேரத்துக்கும் ஏற்ப ஆளுக்கொன்றைப் பொறுப்பற்ற முறையில் பேசி, 'பழரசம்' குடித்து ஏப்பம் விட்டுவிட்டுப் போய்விடும் அரசியல் தலைவர்கள்; கேட்டு ரசித்துவிட்டு ஒட்டிக்கொண்ட மண்ணைத் தட்டி விட்டுவிட்டு வந்துவிடும் பார்வையாளர்கள் - இந்த வழக்கத்துக்குச் சற்று மாறுதலானது தேர்தல் அறிக்கைகள் வெளியிடுவது.

இந்த அரசியல் கட்சிகள் மோசடியானவை, நம்பிக்கை துரோகமானவை என்பதை அம்பலப்படுத்துவதற்குக் குறைந்தபட்சம் பயன்படுகின்றன, இந்தத் தேர்தல்கள் அறிக்கைகள். இது தவிர,

நாடும் மக்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை எவையென அரசியல் கட்சிகள் கருதுகின்றன? அவற்றிலே இந்தக் கட்சிகளின் நிலைப்பாடுகள், தீர்வுகள் என்ன? - இவற்றையாவது தேர்தல் அறிக்கைகள் மூலம் ஒவ்வொரு கட்சியும் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கின்றன.

ஆனால், அனைத்துத் தேர்தல் அறிக்கைகளையும் அலசி ஆராயும் அரசியல் விமர்சகர்கள், ஒப்பிட்டுப் பார்த்துப் புரிந்து கொள்ளும் மிகச் சிலரான வாக்காளர்கள் - இவர்களுக்குத்தான் இவையும் பயன்படுகின்றன.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, ஐந்தாவது நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக இந்திரா காந்தி சில தேர்தல் அரசியல் உத்திகளைப் புகுத்தினார். அவைதாம் இப்போது தீர்மானகரமான காரணிகளாக உள்ளன.

அப்போதே தேர்தல் பிரச்சாரம் என்பதைத் தேர்தல் விளம்பரமாக இந்திரா மாற்றிவிட்டார். அதாவது கட்சிக் கொள்கையில் பிடிப்புள்ள தொண்டர்களை வைத்துப் பிரச்சாரம் செய்வதற்குப் பதிலாக கோடிக்கணக்கில் ஒப்பந்தம் பேசித் தொழில்முறை விளம்பரக் கம்பெனிகளிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டார். இப்போது அதே உத்தியை வளர்த்து எல்லா அரசியல் கட்சிகளும் ஒலி - ஒளி காட்சிகளை நடத்துவது வரை போய்விட்டன.

இந்திராகாந்தி புகுத்திய இன்னொரு உத்தி மக்களைக் கவருவதற்குப் பொருத்தமான பிரச்சினையைக் கண்டுபிடித்து கவனத்தையெல்லாம் அதன்மீது திருப்புவதன் மூலம் ஓட்டுப் பொறுக்குவதற்குத் தகுந்த முழக்கத்தையும், தேர்தல் அறிக்கையையும் தயாரிப்பது. அதன் விளைவுதான், ''வறுமையை ஒழிப்போம்!'' என்கிற முழக்கம்; அப்புறம் 20 அம்சத் திட்டம் போன்றவை.

இதே உத்தியைத்தான் இப்போது எல்லாக் கட்சிகளும் பின்பற்றுகின்றன. ''மண்டல் அறிக்கை அமலாக்கம்'' தேசிய முன்னணி, ஜனதா தளத்தின் முழக்கம். ''ராமர் கோவில்'' பாரதீய ஜனதாவின் முழக்கம். ''நிலையான ஆட்சி'' காங்கிரசின் முழக்கம். ''மண்டல் அறிக்கை, மதச்சார்பின்மை, தேசிய ஒருமைப்பாடும் ஐக்கியமும்'' 'இடதுசாரி' கூட்டணியின் முழக்கம்.

இந்த முழக்கங்களுக்கு முக்கியத்துவமளித்து அந்தந்த அரசியல் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

அனைத்துப் பெரிய - 'தேசிய' அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் அவற்றுக்கிடையே பெரும்பாலான விவகாரங்களில் வேறுபாடுகளைக் காணமுடியாது. குறிப்பாக நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் - தீர்வுகள், 'தேசிய ஒருமைப்பாடு ஐக்கியத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து' ஆகிய இரண்டு விவகாரங்களிலும் வலதுசாரிக் கடைக்கோடிக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சிமுதல் இடதுசாரி எனக் கூறிக் கொள்ளும் இரு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள் வரை அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கின்றன.

அஜீரணம் ஏற்படுமளவுக்கு போட்டி போட்டுக் கொண்டு கவர்ச்சித் திட்டங்களை எல்லாக் கட்சிகளுமே தமது அறிக்கையில் சேர்த்துள்ளன. இந்தவகையிலே முன்னிலை வகிப்பது இந்திராகாங்கிரசுதான். ஆட்சிக்கு வந்தால் 100 நாட்களில், 350 நாட்களில், 730 நாட்களில், 1000 நாட்களில் என்னென்ன சாதிப்போம் என நீண்ட பட்டியலே போடுகிறது, காங்கிரசு.

மற்ற கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் இருந்து திருடுவதையே வழக்கமாக்கிவிட்ட காங்கிரசு, கருணாநிதியின் கைரிக்சா ஒழித்து - சைக்கிள் ரிக்சா வழங்கும் திட்டத்தை 20 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அறிவித்துள்ளது. எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அகில இந்தியாவுக்கு அமுலாக்குவதாகக் கூறுகிறது. இவை தவிர எம்.ஜி.ஆரின் ''நாடோடி மன்னன்'' பாணித் திட்டங்கள் பலவும், ராஜீவ் அறிவித்துள்ளார்.

100 நாட்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்திக் குறைப்பது; 365 நாட்களில் ஆண்டுக்கு 100 கோடி மனித உழைப்பு நாள் அளவுக்கு கிராமப்புற வேலை வாய்ப்பு, ஆண்டுக்கு ஒருகோடி வீதம் 2000- மாவது ஆண்டுக்குள் 100 கோடி வேலை வாய்ப்புகள் உருவாக்குவது; 730 நாட்களில் பயிர், கால்நடைக் காப்பீட்டுத் திட்டம்; விவசாய விளைபொருட்களுக்கு விலை நிர்ணயிப்பதற்குப் புதிய நெறிமுறை; 1000 நாட்களில் ஆண்டுக்குப் 10 லட்சம் விவசாயக் கிணறுகள்; ஆண்டுதோறும் 1000 நகர இரவு தங்குமிடங்களும் கட்டணக் கழிப்பறைகளும்; ஆண்டுதோறும் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கு 10 லட்சம் வீடுகளும், பிற்பட்ட மக்களுக்கு 10 லட்சம் வீடுகளும்.

நிறைவேற்றப் போவதில்லை என்று நிச்சயம் தெரிந்தும் இவையும், இவை போன்ற பல திட்டங்களையும் காங்கிரசு அறிவித்துள்ளது. காங்கிரசுக் கட்சியைப் போல எண்ணிக்கையும், காலக்கெடுவும் வைக்காவிட்டாலும் வார்த்தைகள், வடிவங்

**மார்க்சிஸ்டு கட்சியின் தேர்தல் அறிக்கை – சிவப்புச் சாயம்**





படிப்பகம்

www.padippakam.com


களில் மட்டுமே மாறுதலான கவர்ச்சிவாதத் திட்டங்களைத்தான் ஜனதாதளம் - தேசிய முன்னணி மற்றும் 'இடது'சாரி கட்சிகள் அறிவித்துள்ளன.

குறிப்பாக தேசிய முன்னணி எம்.ஜி. ஆரின் திட்டமொன்றை வரித்துக் கொண்டுவிட்டது. அதாவது, விவசாயக் கூலிகள், கட்டிடத் தொழிலாளர்கள், தினக்கூலி மற்றும் கொத்தடிமைகளுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருமாம். அதோடு கிராமப்புற ஏழைகளுக்கு பக்கா - வீடுகள் கட்டித் தரப்படும்; பணவீக்கத்தைத் தடுத்து விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும்; சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் பேணப்படும்; 'சமூகத்தில் கொந்தளிக்கும்' மக்கள் பிரிவினருக்கு மானிய - மலிவு விலையில் உணவுதானியங்கள் முதலிய அவசியப் பண்டங்கள் வழங்கப்படும்.

இவைதவிர கருணாநிதியின் சில திட்டங்களையும் கூட தேசிய முன்னணி ஏற்றுக் கொண்டுள்ளது. பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடும், பிரசவ காலத்திலும், பிறகும் பராமரிப்புத் தொகையும் வழங்கப்படும். மீனவர்களின் கட்டுமர மீன்பிடிப்புக்குப் பாதுகாப்பு. குழந்தை உழைப்பை ஒழித்து, குழந்தை வளர்ப்புக்கு நிதி தரப்படும். 10 ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படும் என்கிற தேசிய முன்னணி கடந்த தேர்தலில் வேலைவாய்ப்பை அடிப்படை உரிமையாக்குவதாக வாக்களித்து ஆட்சிக்குப் போனபின் கிடப்பில் போட்டுவிட்டது; இந்தமுறை மீண்டும் அந்த வாக்குறுதியை அறிவித்துள்ளது.

தேசிய முன்னணியுடன் வைத்துக் கூடிக்குலாவும் போலிக் கம்யூனிஸ்டுகளின் தேர்தல் அறிக்கைகளோ இதே கவர்ச்சிவாதத் திட்டங்களுக்கு இலட்சிய - கொள்கை முலாம் பூசித் தருகின்றன. நிலச்சீர்திருத்தம், மோசடியான நிலஉடமை மாற்றங்களை ரத்து செய்வது, நிலவெளியேற்றத்தைத் தடுப்பது, வேலைவாய்ப்பை அடிப்படை உரிமையாக்குவது ஆகியன தேசிய முன்னணியின் திட்டங்களோடு சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைதவிர நலிவுற்ற ஆலைகளையும் சணல், பருத்தித்துணி ஆலைகளையும் அரசுடமையாக்குவது போன்ற அரசு முதலாளித்துவ திட்டங்களுக்கே முற்போக்கு சாயம் பூசிச் சேர்த்திருக்கின்றன. ஆனால், தானே ஆளும் தனது அதிகார வரம்புக்குட்பட்ட மாநிலங்களில் இவைபற்றி மூச்சுவிடுவதில்லை.

ஆளும் சமாஜவாதி ஜனதா கட்சி எனப்படும் கிரிமினல்-மஃபியா கும்பலோ இன்னும் கூடுதலான கவர்ச்சிவாதத் திட்டங்களை அறிவித்துள்ளது. எட்டாம் ஐந்தாம் ஆண்டுத்திட்ட இறுதிக்குள் எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர்; நகர சுத்தித்தொழில்களை ஒழித்து அத்தொழிலாளருக்கு மறுவாழ்வு; கல்லாமை ஒழிப்பு; கூடுதலாக 370 லட்சம் ஹெக்டேர் நிலத்துக்குப் பாசன வசதி; ஒரு கோடி வேலைவாய்ப்பு; மருத்துவம், சத்துணவு, பிரச்சாரம் இணைந்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்; மாவட்டத்துக்கு 10 வீதம் 4500 மாதிரி பூரண வளர்ச்சியுடைய கிராமங்கள் என்று பல திட்டங்களை அறிவித்துள்ளது.



தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கை - சமூக நீதி காகிதத்தில்!

இம்மாதிரியான கவர்ச்சி - இலவசத் திட்டங்களை வைத்து ஓட்டுப் பொறுக்குவதில் முன்னோடியாய் விளங்குவன தமிழ்நாட்டிலுள்ள இரண்டு திராவிடக் கட்சிகள். ஆட்சிக்கு வருமுன்பாகவே வசூல் ராணியாகிவிட்ட ஜெயலலிதாதான் எல்லோருக்கும் முன்பாக ஊழல் இல்லாத ஆட்சி அமைப்பதாகத் தேர்தல் அறிக்கை வைத்தார். சாராயப் பேரரசர்களான ராமசாமி உடையார், விஜய் மல்லையாவின் பினாமியாகிய ஜெயலலிதா முழு மதுவிலக்கை அமுலாக்கி, மலிவு விலை மதுவை ஒழிப்பதாக வாக்களித்தார்.

பித்தலாட்டங்கள் பல செய்து மறுபடியும் சாராயக் கடையைத் திறந்து விட்டது, எம்.ஜி.ஆர் ஆட்சி. ஊழல் பெருச்சாளியான எம்.ஜி.ஆர்.தான் மூட்டை மூட்டையாக லஞ்சஊழல் - கருப்புப் பணத்தை ராமாவரம் தோட்டத்தில் புதைத்து வைத்தார். அப்படியிருக்கும்போது மதுவிலக்கை அமுல்படுத்தும், லஞ்ச ஊழலற்ற எம்.ஜி. ஆர். ஆட்சியை மீண்டும் அமைப்பதாக ஜெயலலிதா கட்சி கூறுவது வேடிக்கைதான்!

தி.மு.க. ஆட்சியில் சத்தமில்லாமல் போன சத்துணவை மீண்டும் சத்தோடு தருவது; அரசு ஊழியர் இறந்தால் கருணைத் தொகை 60,000 ரூபாயாக உயர்த்துவது; பெண்கள் - குடும்ப நலம், பெண்கள் - ஊனமுற்றோருக்குத் தனிச் சிறப்பான கல்வி, நெசவாளர், மீனவருக்கு சிறப்புத் திட்டங்கள் — இப்படிப் பொதுவான அறிவிப்புகளை மட்டுமே வைத்து எம்.ஜி.ஆர்.ஜெயலலிதா மோகத்தை மூலதனமாக்கி ஆட்சியைப் பிடித்துவிட முடியும் என்று அக்கட்சி நம்புகிறது.

ஆனால், தேர்தல் அரசியலில் பழம்பெருச்சாளியான கருணாநிதி அடுக்கடுக்காகப் பல க்வர்ச்சி இலவசத் திட்டங்களை அறிவித்துள்ளார். அடுத்த ஐந்தாண்டுகளில் ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு 4 லட்சம் 'கான்கிரீட்' இலவச வீடுகள்; பிற்பட்டவர்களிலேயே ஏழைகள், ஆதிதிராவிடர்கள், பழங்குடிகள் மற்றும் ஏழைப் பெண்களுக்கு இலவசத் தொழிற்கல்வி; மூன்று லட்சம் இறவை இயந்திரங்களுக்கு இலவச மின்சாரம்; அரசு ஊழியர் இறந்தால் வழங்கப்படும் கருணைத் தொகை ஒரு லட்சம் ரூபாயாகும். மாணவருக்கு விபத்து நிவாரண நிதி 1000 ரூபாய்.

மீனவருக்கும் விவசாயிகளின் தக்காவி கடனும் ரத்து செய்யப்படும்; மீனவருக்கு ஆண்டுதோறும் 10,000 இலவச 'கான்கிரீட்' வீடுகள்; சத்துணவுக்குரிய குழந்தைகளின் வயது ஆறாக உயர்த்தப்படும். ஏழைப் பெண்களின் திருமணச் செலவு நிதி 5000 ஆகவும், பிரசவச் செலவு நிதி 500 ஆகவும், அனாதைகளாகும் குடும்ப உதவி நிதி 5000 ஆகவும் உயர்த்தப்படும். 10000 நெசவாளிகளுக்குத் தறியுடன் இலவச வீடுகள்; ஆசிரியருக்கு 10,000 வீடுகளும் புதிதாக 10,000 ஆசிரியர் நியமனமும், மாணவருக்கான பேருந்து சலுகை 75 சதவீதமாக உயர்த்தப்படும்.

பஞ்சம் பீடித்த 45 ஒன்றியங்களில் ஆண்டுக்கு 150 நாட்கள் வேலை உத்திரவாதம்; கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு, ஆசிரியர், முதியோர் கல்வி, துணை மருத்துவ வேலைகள்; 25000 மக்கள் நல ஊழியர் பணிகள்; மூடிய ஆலைகளைத் திறக்கவும், குறைந்தபட்ச ஊழியமும் சமூக உத்திரவாதமும் தரப்படும். விலைவாசியைக் கட்டுப்படுத்த பதுக்கல், கடத்தலை ஒழிப்பதோடு மலிவுவிலை அரிசியும் தரப்படும். இப்படிக் கடந்த தேர்தலில் அறிவித்து மறந்துபோன கைவிட்ட திட்டங்கள் ஏராளம். என்றாலும் மீண்டும் அறிவித்துள்ளது கருணாநிதி கட்சி.

இத்தனை கவர்ச்சித் திட்டங்களுக்கு வாக்குறுதி தருகின்றனவே இந்தக் கட்சிகள், இவற்றை நிறைவேற்றத் தகுந்தவகையில் தான் நாட்டின் பொருளாதாரம் இருக்கிறதா? மரணப்படுக்கையில் இந்தியப் பொருளாதாரம்; அரசே திவாலாகிப் போனதை அறிவிக்காத குறைதான் நிலவுகிறது. அன்றாடத் தேவைக்கே பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் அந்நியச் செலாவணி பற்றாக்குறை; உள்நாட்டு - வெளிநாட்டு கடன் வகையில் எந்த நேரமும் சிக்கிக் கொள்ளும் அபாயம் - அப்புறம் கடனுக்கான தவணை, வட்டி செலுத்தக்கூட வருமானமின்றி அதற்கே கடன் வாங்கவேண்டிய நிர்பந்தம் தான்.



படிப்பகம்

www.padippakam.com



காங்கிரசின் தேர்தல் அறிக்கை - செல்லாத நோட்டு!

இதற்கு இந்த அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் கூறும் தீர்வுகள்தாம் என்ன?

காங்கிரசு, பா.ஜ.கட்சி, சமாஜவாதி ஜனதா கட்சி ஆகியன பகிரங்கமாக அறிவிக்காமலேயே கூறும் தீர்வு; சர்வதேச நிதி நிறுவனமும் உலக வங்கியும் விதிக்கும் எல்லா நிபந்தனைகளையும் ஏற்று அந்நியக் கடன் பெறுவதுதான்! இதிலிருந்து மாறுபட்டதைப்போல தோற்றமளிப்பவை தேசிய முன்னணி — போலிக்கம்யூனிஸ்டுகளின் அறிக்கைகள். ஐ.எம்.எஃப் - உலக வங்கி நிபந்தனைகளை ஏற்பதில்லை; பொருளாதார சுதந்திரத்தையும் சுய சார்பையும் பாதுகாப்பது; நேர்முக வரிவிதித்தும் கருப்புப் பண வேட்டையாடியும், இறக்குமதிகளைக் குறைத்தும், அரசு வீண் செலவுகளை நிறுத்தியும், பொருளாதார - நிதி நெருக்கடிகளைத் தீர்க்க வேண்டும் என்கின்றன தேசிய முன்னணி - 'இடது'சாரிகளின் அறிக்கை. ஆனால், இதே தேசிய முன்னணிதான் எந்த நிபந்தனை என்றாலும் ஏற்று ஐ.எம்.எஃப் - உலக வங்கிக் கடன் பெறுவதற்கு ஆட்சியிலிருந்தபோது இரகசிய பேரங்கள் நடத்திக் கொண்டிருந்தது. இதே 'இடது'சாரிகள் தாம் ஆளும் மாநிலங்களில் ஐ.எம்.எஃப் - உலக வங்கித் திட்டங்களை வரவேற்று அமுலாக்கிக் கொண்டிருக்கின்றன.

போலிக் கம்யூனிஸ்டுகளின் உதவியோடு முற்போக்கு பட்டயம் கட்டிக் கொண்டு திரிந்த காங்கிரசு இப்போது பகிரங்கமாகவே பிற்போக்கான பொருளாதார - நிதிக்கொள்கைகளை அறிவித்துள்ளது. சில இராணுவத்துறை தவிர எந்தத் தொழிலிலும், எந்தத் துறையிலும் ஏகபோகத்தை ஒழிப்பார்களாம்; சுதந்திரப் போட்டிக்குத் திறந்து விடுவார்களாம். இதன் பொருள் என்ன?

இதுவரை அரசுத் துறை ஏகபோகமாக இருந்த கனரக, மூலதன அழுத்தமுடைய அடிப்படைத் தொழில்கள் அனைத்திலும் தனியார் மூலதனம் - தொழில் அனுமதிக்கப்படும். மருந்துவத் துறையிலிருந்து சாலைகள் - பாலங்கள் கட்டி வரிவசூலிப்பதுவரை சகலமும் தனியார் தரகு அதிகார முதலாளிகளுக்குத் திறந்துவிடப்படும். அரசுத்துறை ஆலைகளேகூட அவர்களுக்குத் தாரை வார்க்கப்படும்.

பாரதீய ஜனதாவும், சமாஜவாதி ஜனதாவும் இதே தொழில் - நிதிக் கொள்கைகளை பகிரங்கமாக அறிவித்துள்ளன. ஆனால், முற்போக்கு சோசலிச முகமூடி மாட்டிக் கொண்டு திரியும் போலிக் கம்யூனிஸ்டுகளும் தேசிய முன்னணியும் இதற்கு மாறுபட்டதாகத் தோன்றும் தொழில் - நிதிக் கொள்கைச் சவடால் அடித்துள்ளன.

நலிவுற்ற ஆலைகளையும், சணல் - பருத்தித் துணி ஆலைகளை அரசுடைமையாக்குவதோடு, பொதுத்துறையை அடிப்படையாக வைத்துப் பொருளாதார - தொழில் அமைப்பை உருவாக்குவார்களாம், ஏகபோகக் கட்டுப்பாட்டு சட்டத்தை கடுமையாக்குவார்களாம். உணவுதானிய மொத்த வர்த்தகத்தைக்கூட அரசு ஏற்குமாம். முக்கியமான சில துறைகளில் மட்டுமே அந்நியத் தொழிற் கூடங்கள் - முதலீடுகளை அனுமதிப்பார்களாம். தனியார் தரகு அதிகார முதலாளிக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் கதவை அகலத் திறந்துவிடும் தொழில் - நிதிக் கொள்கையில் ராஜீவுக்கு மூளையாக இருந்து செயல்பட்ட வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணிதான் இப்படிப் புளுகுகிறது. ஹால்டியா பெட்ரோ கெமிக்கல் ஆலைகள் உட்பட பலவற்றையும் கோயங்கா, டாடா, அம்பாணிக்குத் தாரை வார்த்ததோடு பிர்லா முதலிய தரகு முதலாளிகளுக்கு சிகப்புக் கம்பளம் விரிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள் தான் இப்படி வாக்குறுதியளிக்கின்றனர்.

காங்கிரசுடன் சங்கமமாகிவிட்ட ஜெயலலிதா கட்சியும் சரி, தேசிய முன்னணியின் தூணாகிவிட்ட கருணாநிதி கட்சியும் அரசியல் பொருளாதார, தொழில், நிதிக் கொள்கைகள் எதையும் அறிவிக்க வேண்டியதில்லை என மவுனம் சாதித்துவிட்டன. இவர்களுக்கென்று வேறுவிதமான கொள்கை எதுவும் கிடையாது என்பது இன்னொரு காரணம்.

பரந்துபட்ட பாமர மக்களுக்குப் பல இலவச கவர்ச்சித் திட்டங்கள் ஒருபுறம்; தரகு அதிகார முதலாளிகளுக்குத் தாராள பொருளாதார, தொழில் நிதிக் கொள்கைகள் மறுபுறம் - இதுதான் நாட்டின் பெரிய, 'தேசிய'க் கட்சிகளின் தேர்தல் அறிக்கையின் முக்கியமானதொரு பொது அம்சம். இன்னொன்று இந்தக் கட்சிகள் பெருங்கூச்சல் போடும் தேசிய ஒருமைப்பாடு ஐக்கியத்துக்கு நேர்ந்துள்ள ஆபத்து பற்றியது.

பஞ்சாப், அசாம், காஷ்மீர், ''பிரிவினைவாதி''கள் மட்டுமல்லாது பாரதீய ஜனதாவின் வகுப்புவாதமும், ஜனதா தளத்தின் சாதிய வாதமும் நாட்டைப் பிளவுபடுத்தும் சக்திகளாகி இருப்பதாக ஓலமிடுகிறது. பாசிச ராஜீவ் கும்பல். ''பிரிவினை வாதிகளைத் தூண்டிவிட்ட காங்கிரசும் பாரதீய ஜனதாவின் வகுப்புவாதமும்தான் காரணமென்று கூப்பாடு போடுகின்றன, தேசிய முன்னணியும் ''இடது''சாரி கூட்டணியும். ''பிரிவினைவாதி''களோடு காங்கிரசு, ஜனதா, ''இடது''சாரிகளின் போலி மதச் சார்பின்மையும், சாதியவாத - மண்டல் அறிக்கை அமலாக்கமும் தான் காரணமென்கிறது, பாரதீய ஜனதா. இந்த மூன்று அணியையும் காரணமாகக் கூறுகிறது சமாஜவாத ஜனதா கும்பல்.

தேசிய ஒருமைப்பாடு - ஐக்கியத்துக்கு நேர்ந்துள்ள ஆபத்து எனவும் காரணங்கள் வேறுவேறாகவும் இந்தக் கட்சிகள் என்னதான் சித்தரித்தாலும் தீர்வுகள் ஏறக்குறைய ஒன்றுதான். பஞ்சாப், அசாம், காஷ்மீரில் தேர்தல்கள் வைப்பதா வேண்டாமா என்பதில்தான் இவர்களுக்கிடையே வேறுபாடு. மற்றபடி நாட்டின் ஒருமைப்பாடு ஐக்கியத்துக்குப் பாதிப்பின்றி அரசியல் நிர்ணய சட்டத்துக்குட்பட்டு தீர்வுகாண்பதென ஒருபுறம் கூறிக்கொண்டு, அரசு பயங்கரவாதத்தை ஏவி அங்குள்ள ''தீவிரவாத'' இயக்கங்களையும் மக்களையும் ஒடுக்குவதுதான் இக்கட்சிகள் அனைத்தினதும் நிலைப்பாடு.

குறிப்பாக காங்கிரசு, பாரதீய ஜனதா, இரு போலிக் கம்யூனிஸ்டுகள் இணைந்தது பஞ்சாப் விவகாரத்தை அணுகுவதே இவர்களது அரசு பயங்கரவாத ஆதரவைக் காட்டிக் கொடுத்து விடுகிறது.

மேற்கண்டவாறு இலவச - கவர்ச்சித் திட்டங்கள், பொருளாதார - தொழில் - நிதிக் கொள்கைகள், ஒருமைப்பாடு - ஐக்கியம் மீதான அக்கறை ஆகியவற்றில் இந்தக் கட்சிகள் அனைத்தினதும் தேர்தல் அறிக்கைகள் ஏறக்குறைய வேறுபாடின்றி இருக்கின்றன. இதனாலும், இதைவிட முக்கியமாகவும் இந்தக் கட்சிகள், அணிகள் ஒவ்வொன்றும் தனக்கென வேறுசில விவகாரங்களை நம்பி தேர்தல் அறிக்கைகள் - முழக்கங்களை முன் வைத்துள்ளன. காங்கிரசுக்கு நிலையான ஆட்சி; பாரதீய ஜனதாவுக்கு ராமர் கோவில்; தேசிய முன்னணி - ''இடது''சாரி கூட்டணிக்கு மண்டல் அறிக்கை அமலாக்கம். ஆனால் இவற்றில்கூட ஒவ்வொரு கட்சியும், அணியும் வேறுபாடுகளைக் குழப்பி ஆதாயம் தேடுவதையே இவர்களது தேர்தல் அறிக்கையில் காட்டுகின்றன. இவை பற்றி அடுத்த இதழில் அலசுவோம்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com



# அம்பேத்காருக்கு நூற்றாண்டு விழா 'அரிசனங்'களுக்கு தூக்குமரம்

## இந்தியாவில் பத்தாயிரம் தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் இருந்தும் கூட, மேல் சாதி வெறியர்களின் அட்டூழியம் தொடர்வது ஏன்?

உ.பி. - மெஹ்ரனா கிராமத்தில் மார்ச் 27-ந் தேதி மேல் சாதி வெறியர்களால் இரண்டு தாழ்த்தப்பட்ட இளைஞர்களும் ஒரு மேல்சாதிப் பெண்ணும் தூக்கிலிடப்பட்டார்கள். தூக்கிலிடப்பட்ட பின்னும் இவர்களில் இருவர் சாகாத நிலையில் உயிரோடு வைத்து கொளுத்தப் பட்டார்கள். இதுவன்றி தூக்கிலிடுவதற்கு முன் இளைஞர்கள், மேல்சாதி வெறியர்களின் மிருகத்தனமான சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டனர்.

தாழ்த்தப்பட்ட ஜாதவ் சாதியைச் சேர்ந்த பிரிஜேந்திரனும் (20) ஜாட் சாதி ஜமீந்தார் மகள் ரோஷ்ணியும் (16) காதலர்கள். இவர்கள் காதலுக்கு உதவி செய்தார் ஜாதவ் சாதிக்காரர், ராம் கிஷன் (22)! மூவரும் ஊரைவிட்டு ஓடிப்போய் 3 நாள் கழித்து திரும்பினார்கள் என்பதாலேயே இக்கொடுந்தண்டனை.

பஞ்சாயத்து தலைவர் மங்கத்து ராம் உட்பட பஞ்சாயத்துக்காரர்கள் அனைவரும் மேல்சாதி வெறியர்கள். பஞ்சாயத்தைக் கூட்டி விசாரித்தார்கள். ரோஷ்ணிக்கு முடிவை மாற்றிக் கொள்ள அவகாசம் கொடுத்தார்கள். இளைஞர்கள் இருவரையும் பஞ்சாயத்து தலைவரின் வீட்டிற்கு (சித்திரவதை கொட்டடிக்கு) இழுத்துச் சென்றார்கள்.

இளைஞர்களின் கையையும் காலையும் ஜாட் சாதி முரடர்கள் சிலர் பிடித்துக் கொள்ள ஒருவன் காலால் பலமாக எட்டி உதைத்தான்; அவனுக்கு கால் வலிக்கும் போது உருட்டுக் கட்டையால் ஓங்கி தாக்கினான்.

பின்னர் அக்காட்டுமிராண்டி கும்பல் இருவரையும் அம்மணமாக்கி தலைகீழாக கட்டி தொங்கவிட்டு தோல் சிவந்து தழும் பேறும் வரை தடியால் தாக்கியது. இளைஞர்கள் நெருப்பிலிட்ட புழுபோல் துடிதுடித்தார்கள்! அலறினார்கள்! இச்சித்திரவதை 3 மணிநேரமாக நடந்தது.

இதன் பின்னும் அக்காட்டுமிராண்டிகளுக்கு சாதிவெறி அடங்கவில்லை. இருவரது உதடும் கிழிந்து கருகித் தொங்கும்வரை தீப்பந்தத்தை வாயிலே விட்டு எடுத்தார்கள். மேலும் இளைஞர்களின் ஆண்குறிகளை தீப்பந்தத்தாலேயே தாக்கினார்கள். இளைஞர்களின் மரண ஓலம் கிராமத்தையே ஆக்கிரமித்தது. ஜாதவ் சாதியினர் கூட பஞ்சாயத்துக் கட்டுப்பாட்டிற்கு, சாதியக் கட்டுப்பாட்டிற்கு அடிமைப்பட்டு மனம் வெம்பிக் கொண்டிருந்தார்களே ஒழிய தட்டிக்கேட்க எவரும் முன்வரவில்லை. இளைஞர்கள் சுயநினைவு இழக்கும்வரை இச்சித்திரவதை தொடர்ந்து, பின்னர்தான் ஓய்ந்தது.

பஞ்சாயத்துக்காரர்கள் மறுநாள் அவசர அவசரமாக பஞ்சாயத்தைக் கூட்டினார்கள். அரைமயக்கத்திலிருக்கும் இளைஞர்களை வெற்று உடம்புடன் மட்டையைப் போல், கட்டி தெருவிலே இழுத்துவந்து பஞ்சாயத்தில் நிறுத்தினர். இருவருக்கும், ரோஷ்ணி முடிவை மாற்றிக் கொள்ளாததால் அவளுக்கும் மரணதண்டனை விதிக்கப்படுகிறது. கிராம வழக்கப்படி மூவரின் பெற்றோர்களையே தூக்கிலிடும்படி மிரட்டி, அடித்து - உதைத்து இழுத்து வந்து பஞ்சாயத்து தீர்ப்பை நிறைவேற்றினர். தூக்கிலிட்ட சிறிது நேரத்திலேயே ராம்கிஷன் இறந்து விட்டார். பிரிஜேந்திரனும் ரோஷ்ணியும் இறப்பதற்கு வெகுநேரமாகவே இருவரையும் உயிரோடே எடுத்துச் சென்று சுடுகாட்டில் கொளுத்தினார்கள்.

''பத்து வருடத்திற்கு முன்பு ஜாட் சாதிப் பெண் யசோதா (திருமணமானவள்), மெஹ்ரனாவிலுள்ள தன் தாய் வீட்டிற்கு வந்து தங்கியிருந்த பொழுது அதே சாதிக்காரன் ரத்தனுடன் ஓடிப்போனாள். அப்பொழுது பஞ்சாயத்தார், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை'' என்று நினைவு கூர்ந்தார் ஒரு முதியவர்.

ஆக ஒன்றுமட்டும் தெளிவாகிறது. மேல்சாதிக்காரர்கள் ஒழுக்கம் தவறினால் அல்லது தாழ்த்தப் பட்டவர்களைக் கொன்றால் கூட கோயிலில் சென்று பாவம் கழித்து விட்டால் போதும்; மன்னிப்பு உண்டு. ஆனால், தாழ்த்தப்பட்டவன் ஒழுக்கம் தவறினால்... தவறுதலாகக் கூட மேல்சாதிக்காரர்களைத் தொட்டுவிட்டால்... மன்னிப்பு கிடையாது; சவுக்கடிதான், சித்திரவதைத்தான். மரணதண்டனைதான்! - என்ற சாதிய ஆதிக்க வெறிதான் மெஹ்ரனாவில் நடைமுறையாகியுள்ளது.

☆ ☆ ☆

கடந்த ஏப்ரல் 14-ந் தேதி அம்பேத்காரின் நூறாவது ஆண்டு பிறந்தநாள் விழா, அரசாலும், ஓட்டுக்கட்சிகளாலும், அம்பேத்கார் அமைப்புகளாலும் இந்தியாவெங்கும் 'கோலாகலமாக' கொண்டாடப்பட்டன.

அம்பேத்கார் பிறந்த மத்திய பிரதேசம் - காலிபல்தான் பகுதியைத்தான் காங்கிரசு, பாரதீய ஜனதாகட்சி, பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவை முகாமிட்டன. இதுவரை சீண்டுவார் இல்லாமல் இருந்த இப்பகுதி போட்டி விழாக்களால், ஜனத்திரளால் திணறியது. அண்டை மாநிலங்களிலிருந்து திரட்டப்பட்ட கட்சித் தொண்டர்கள் 30,000 பேர் அடங்கிய ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் நடத்தி 'செல்வாக்கை' காட்டினார் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் கன்சிராம். ராஜீவ்காந்தியோ இந்தூர் நகரிலிருந்து 23 கி.மீ. தொலைவு 'பிரச்சாரப் பயணம்' செய்து காலிபல்தானிற்கு வந்து மாலையணிவித்து அம்பேத்காருக்கு மரியாதை செலுத்தினார்.





படிப்பகம்

www.padippakam.com

பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த முதல்வர் சுந்தர்லால் பட்வா, காலிபல்தானில் 1.25 கோடி ரூபாய் செலவில் அம்பேத்கார் நினைவு தூண் ஒன்று எழுப்பிட அடிக்கல் நாட்டினார். பின் நடந்த பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் அம்பேத்கார் உடன் பணியாற்றிய லக்ஷ்மிபாய் கர்தாக் என்பவருக்கு மாலையணிவித்து காலில் விழுந்து வணங்கி கௌரவித்தார்! ''பாராளுமன்ற கட்டிடத்தில் அம்பேத்கார் படத்தை முந்தைய வி.பி.சிங். அரசு வைத்ததற்கு தூண்டுதலாக இருந்தவர்களேநாங்கள்தான்!" (தமிழ்நாட்டில் தி.மு.க. கட்சியினரும் இப்படித்தான சொல்கிறார்கள்) என்றார் வாஜ்பாய். ஆனால் ஓட்டுக்காகப் போட்ட தலைவர்களின் இவ்வேடத்தைக்கூட ராமபக்தர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தலைவர்கள், அம்பேத்கார் பற்றி பேசும்போதும் சரி, படத்தை திறந்து வைத்தபோதும் சரி 'ஜெய் ராம்' என்று கூச்சல் எழுப்பி பேச முடியாதபடி செய்தார்கள்.

மிகப்பெரிய, உயரமான அம்பேத்கார் 'கட் அவுட்' செய்து இழுத்து வந்த அக்னி பரிட்சா' ஊர்வலத்தையும், டில்லி போட்கிளப்பில் பொதுக்கூட்டத்தையும் நடத்தியது ஜனதாதளம். ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற முதலாளிகளிடம் ஒரு நயாபைசா கூட வாங்காமல் பணியாற்றுவோம்'' என்று வாக்குறுதி(!) தந்தார் வி.பி.சிங்.

சந்திரசேகர் மட்டும் சளைத்தவரா என்ன? பாராளுமன்ற கட்டிடத்தில் நடந்த விழாவில் அம்பேத்கார் உருவம் பதித்த ஒரு ரூபாய் அஞ்சல் தலையையும் நாணயத்தையும் வெளியிட்டு ''இவ்வருடம் மட்டுமல்ல அடுத்த வருடம் வரை நூற்றாண்டு விழாவை கொண்டாடுவோம்'' என்றார். மேலும், ''அம்பேத்கார் ஆய்வு மையம் 5 கோடி ரூபாய் செலவில் டில்லியில் அமைக்கப்படும்'' என்றார். மத்திய அமைச்சர் ராம் ஜிலால் சுமன், தம்பங்கிற்கு ''அம்பேத்கார் எழுதியவை அனைத்தும் அரசால் அனைத்து இந்திய மொழிகளிலும் வெளியிடப்படும். அம்பேத்கார் வாழ்க்கை மற்றும் தியாகங்களைப் பற்றி 3 கோடி ரூபாயில் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்படும்'' என்றார். இவையின்றி ஒவ்வொரு மாநில ஆளுநர்களும், முதல்வர்களும் ஓட்டுக்கட்சி தலைவர்களும் அம்பேத்காரின் சிலைக்கு மாலை அணிவித்து விழாவைக் கொண்டாடினார்கள்.

- இப்படி காந்தி, காமராஜர், பெரியார் போன்று அம்பேத்காரும் சர்வகட்சி தலைவராக்கப்பட்டு விட்டார். வசதியாக அம்பேத்கார் பிறந்தநாள் தேர்தல் நேரத்தில் வந்து அமையவே பாரதீய ஜனதாவும், காங்கிரசும் கூட விமர்சையாக விழா கொண்டாடி தாழ்த்தப்பட்டவர்களின் ஓட்டைப் பொறுக்க கனவு காணுகிறார்கள். அம்பேத்கார் செய்தது சீர்திருத்தம் என்றாலும் உண்மையில் களத்திலிறங்கி தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பாடுபட்டார். ஆனால், அம்பேத்காரை சொந்தம் கொண்டாடியே, போற்றியே, புகழ்ந்தே, சிலை வைத்து படம் வைத்து மாலை போட்டே தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர்களாகிவிட எத்தனிக்கிறார்கள், ஓட்டுப்பொறுக்கிகள்.



சரி, ஓட்டுக் கட்சிகளை விட்டுத் தள்ளுங்கள்! இது அவர்களது பிறவிக் குணம்! அம்பேத்கார் பெயரில் இயங்கும் அமைப்புகள் - தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் என்ன செய்கின்றன? இத்தனை ஆண்டுகளாக இவ்வமைப்புகள் சாதித்த சாதனைகள் என்ன? இந்தியாவில் கிராமங்கள் வரை மூலை முடுக்கெல்லாம் பத்தாயிரக் கணக்கில் இவ்வமைப்புகள் இருந்தும், தாழ்த்தப்பட்டவர்கள் மீதான அநீதிகள் - படுகொலைகள் 'மெஹ்ரனா' போன்று இன்னும் தொடர்கிறதே ஏன்?

ஆண்டாண்டு காலமாக மிகவும் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதிகள், தனிச்சிறப்பான கவனம் கொடுத்து முன்னேற்றப்பட வேண்டியவர்களே. ஆனால், இச்சமூக அமைப்புக்குள்ளேயோ, இன்றைய ஆளும் வர்க்கத்திடம் கோரிக்கைகள் வைத்தோ, இதைச் சாதிக்க முடியாது; சாதிய ஆதிக்கத்தையும் ஒழிக்க முடியாது. ஆனால், அம்பேத்கார் இதைத்தான் செய்தார். இச்சாதிய அமைப்புக்குள்ளேயே மாறறம் காண விழைந்தார். சாதியத்தை ஒழிக்க இவ்வமைப்பு முறைக்கு எதிராகப் போராடவில்லை. இதுவே இன்று சாதி - மதக் கட்சிகள் கூட அம்பேத்காரை சொந்தம் கொண்டாட அடிப்படையாகி உள்ளது.

அம்பேத்கார் - தாழ்த்தப்பட்டோர் அமைப்பினர் அம்பேத்காரை விமர்சன ரீதியாக பார்க்கவே மறுக்கிறார்கள். இதன்மூலம் இதுவே அவர்களது முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதையும் உணர முடியாதவர்களாகிறார்கள். அம்பேத்காரை சீர்திருத்தவாதி என்றால், ''தாழ்த்தப்பட்டவர்களின் விரோதிகள்; மேல்சாதிக்காரர்கள்'' என கண்மூடித்தனமாக முத்திரை குத்தி நம்மை தாக்குகிறார்கள். அம்பேத்காரை விமர்சிப்பவர்களை எதிர்க்கும் அளவிற்குக்கூட சாதிய ஆதிக்க சக்திகளை அம்பேத்காரின் தொண்டர்கள் எதிர்ப்பதில்லையே ஏன்? சாதியக் கொடுமைகளுக்கு எதிராக வெகுண்டெழவில்லையே ஏன்?





படிப்பகம்

www.padippakam.com

# மே தின சூளுரை!

★ அமெரிக்க வல்லரசின் உலக மேலாதிக்கத்தை வீழ்த்துவோம்!

★ ராஜீவ் கும்பலின் பாசிச சதிகளை முறியடிப்போம்!

★ படர்ந்து வரும் இந்துமதவெறி பாசிசத்தை வேரறுப்போம்!

★ புதிய ஜனநாயகப் புரட்சி ஓங்குக!

மே முதல் மாத இதழாக
வெளி வருகிறது

புதிய கலாச்சாரம்

இந்த இதழில்......

★ விளம்பர நிறுவனங்களின் தயவில் ஓட்டுக்கட்சிகள்

★ 'இன்று ஒரு தகவல்' திண்ணைப் பேச்சுக்கு இன்னொரு வடிவம்.

விலை ரூ.2

தாழ்த்தப்பட்டோர் பொதுக்கிணற்றில் நீர் எடுக்க கூடாது; கோயில்களில் நுழைய கூடாது; செருப்பு போட்டுக்கொள்ளக் கூடாது; மேல்சட்டை போடக்கூடாது; துண்டைக்கூட கக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்; ஊருக்கு ஒதுக்குப்புறம்தான் வாழ முடியும்... இப்படி எத்தனை அநீதிகள்? இன்னும் நிலவத்தானே செய்கின்றன?

தாழ்த்தப்பட்டவர்கள் 'தீண்டத்தகாதவர்கள்; அடிமைகள்' எனும் வர்ணாசிரம கண்ணோட்டம்தான் கிராமம், நகரம், படித்தவன், படிக்காதவன் என எங்கும் ஆதிக்கம் புரிகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனி குடியிருப்பு, பள்ளியில் தனி இருக்கை, தனிவிடுதி, டீக்கடையில் தனி கிளாஸ் என இன்னும் அவமானப்படுத்தப் படுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் நிலங்கள் கையகப் படுத்தப்படுகின்றன. குடிசைகள் கொளுத்தப்படுகின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் ஆதிக்க சக்திகளால் கொலை கொலையாக வெட்டப்படுகிறார்கள். உயிரோடு வைத்து கொளுத்தப்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட பெண்கள் மேல்சாதி வெறியர்களின் காம வெறிக்கு பலியாவது தினமும் நடக்கிறது. இன்னும் பல பகுதிகளில் தாழ்த்தப்பட்ட பெண்களை மேல்சாதிக்காரர்கள் முதலில் பெண்டாளுகிற கொடுமையும் நடக்கிறது.

இவற்றிற்கு எதிராக தாழ்த்தப்பட்ட இயக்கங்கள் நடைமுறையில் என்ன சாதித்தார்கள்? ஒன்றும் இல்லை. சாதியக் கொடுமைகளுக்கு எதிராக அல்ல;சாதியச் சலுகைகளுக்காகத்தான் போராடுகிறார்கள். அதுவும் தாழ்த்தப்பட்டவர்களிடையே அரசாங்க பதவிகளில் உள்ள நடுத்தர வர்க்கப் பிரிவினர் நலனுக்காகப் போராடுவதைத் தான் நடைமுறையாகக் கொண்டுள்ளனர். ஏற்கனவே பதவியிலிருக்கும் தனிப்பட்ட தாழ்த்தப்பட்ட ஊழியர்களின் பதவி உயர்வுக்கு, ஊதிய உயர்வுக்கு, இடமாற்றத்திற்கு, இட ஒதுக்கீடுக்குப் போராடுவது; அவர்களுக்கு அரசாங்க சலுகைகளைப பெற்றுத் தருவது; பட்டா, மின் இணைப்பு, குடி நீர் குழாய் இணைப்பு போன்றவை பெற்றுத் தருவது... இவையே அம்பேத்கார் இயக்கங்களின் பிரதானப் பணிகளாக இருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்களின் ஒருசிலர் டாக்டராக, கலெக்டராக, போலீசு அதிகாரியாக வந்துள்ளதைக் காட்டி நம்பிக்கையூட்டி தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கே விடுதலை கிடைத்துள்ளதுபோல் பிரமையை ஏற்படுத்துகிறார்கள். தாழ்த்தப்பட்ட சாதி கலெக்டர், டாக்டர் போன்றவர்களையே தமது இயக்கத்திற்கு தலைவராக போட்டுக்கொண்டு பெருமைப்படுகின்றனர். அவர்கள் கைகொடுத்து உதவ மாட்டார்களா என காத்திருக்கின்றனர்.

அதே சமயம் ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சமூகத்திற்காக அம்பேத்கார் இயக்கங்கள் செய்வதெல்லாம்... அம்பேத்கார் பிறந்த நாளை நினைவு நாளை ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்திக் கொண்டாடுவது; ஊருக்கு, பிள்ளைக்கு பெயர் சூட்டுவது, அம்பேத்கார் சிலை வைப்பது, படம் திறப்பது போன்றவைதான்! ஓட்டுக்கட்சிகள் போலவே அம்பேத்கார் இயக்கங்களும் அம்பேத்கார் புகழ் பரப்புவதையே தாழ்த்தப்பட்டவர்களுக்காக செய்யும் முன்னேற்றமாக கொண்டுவந்து நிறுத்துகிறார்களே ஒழிய நடைமுறையில் தாழ்த்தப்பட்ட சமூக இழிவை அகற்ற எதுவும் செய்வதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வோ, சமூக அந்தஸ்தோ பின்னுக்குத்தான் செல்கிறது. மாற்றத்தை விரும்பி சிலர் மதம் மாறுகிறார்கள். சிலர் கிராமத்திலிருந்து நகரத்திற்கு ஓடி வருகிறார்கள். ஆனால், எங்கும் சாதிய அவமானமும், அடிமை வாழ்வும், வறுமையும்தான் அவர்களுக்கு மிஞ்சுகிறது.

இன்னும் சொல்லப்போனால், நாடார் சாதிக்கு ஒரு தலைவர், வன்னியர் சாதிக்கு ஒரு தலைவர், செட்டியாருக்கு ஒரு தலைவர் என்பதுபோல் தாழ்த்தப்பட்ட சாதிக்கு அம்பேத்கார் தலைவர் என அம்பேத்காரையே இழிவுபடுத்தும் செயல்களைத்தான் அம்பேத்கார் இயக்கங்கள் செய்து வருகின்றன.

இச்சமூக அமைப்புக்குள்ளேயே அதற்கு எதிராக இல்லாமல் மாற்றம்காண போராடுவதன்மூலம் தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலையை ஆளும் வர்க்கத்திடம் அடகு வைக்கின்றன. சாதிய அமைப்புமுறையை ஒழிப்பதற்குப் போராடாமல் சாதியச் சலுகைகளுக்காகப் போராடுவதன் மூலம் சாதிய அமைப்பு நீடிப்பதற்கே உதவி செய்கின்றன.

எனவே, சாதியம் புரையோடி வேரோடிக் கிடக்கும் இச்சமூக அமைப்பு முறையை தகர்த்தெறிந்தாலே தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலை சாத்தியமாகும். தாழ்த்தப்பட்ட இயக்கங்களில் உள்ள சுயமரியாதைக்காரர்களும், தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை விரும்புபவர்களும் வர்க்கப் பார்வை பெறுவதற்கும் புரட்சிகர அமைப்புகளில் செயலாற்றுவதற்கும் முன் வரவேண்டும். அதுவரை தஞ்சை - கீழ வெண்மணி, நெய்க்குப்பை பீகார் - பெல்ச்சி, இன்று உ.பி - மெஹ்ரனா... என தாழ்த்தப்பட்டவர்களின் படுகொலைகள் தொடரத்தான் செய்யும்.

● ராசு

## தோல் தடித்த அதிகாரிகளுக்கு எதிராக

திருச்சி காந்திபுரம் மற்றும் செட்டித் தெருவிற்கு பொதுவாக உள்ள நகராட்சி கழிப்பிடம் மலம் மணக்கும் சோலையாக காட்சியளிக்கிறது! சுத்தம் செய்வதே கிடையாது. கொசுக்களும், பன்றிகளும்தான் வாசம் செய்கின்றன. 5000 குடும்பங்களுக்கு 10 சிறிய அறைகளை கொண்ட இக் கழிப்பிடம்தான் கதி! நகராட்சியிடமும் சரி, ஓட்டுக்கட்சி தலைவர்களிடமும் சரி பல முறை மனுக்கள் மூலமும் நேரிலும் முறையிட்டு ஆகிவிட்டது. ம்ஹூம்! எவ்வித நடவடிக்கையும் இல்லை.

எனவே புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியும் காந்திபுரத்தைச் சேர்ந்த சாக்ரடீஸ் நற்பணி இளஞ்சேனையும் இணைந்து 25-3-91 அன்று நகராட்சி அலுவலகம் வரை ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டம் நடத்தின. சாக்ரடீஸ் நற்பணி இளஞ்சேனை செயலர் துரைராஜ் ஊர்வலத்திற்கு தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி செயலர் ஜெகதீசன் உரை நிகழ்த்தினார். மலத்தில் கிடக்கும் புழுக்களைப்போல் சொரணையற்று இருக்கும் இந்த அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் புரியும் மொழியில் அடுத்தகட்ட போராட்டத்தை நடத்துவோம் என எச்சரித்தார்.

தகவல்: பு.மா.இ.மு. (RSYF) திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

# வெளியே காவியுடை! உள்ளே ரத்தவெறி!

*நேரடியாக இந்து வெறியூட்டும் பிரச்சாரத்தில் ஈடுபட்டால் சட்டச் சிக்கல் வருமென்று சாதுக்கள், சன்னியாசிகளை முன்னிறுத்தி இந்து ஓட்டுக்களைக் கைப்பற்ற பாரதீய ஜனதா எத்தனிக்கிறது.*

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதை மட்டுமே தனது லட்சியமாகக் கொண்ட இந்துவெறி பாரதீய ஜனதா - சிவ சேனா கூட்டணி, இத்தேர்தலில் ''ராம் - ரொட்டி - இன்சாப்'' (ராமர் - உணவு - நீதி) என்ற மைய முழக்கத்துடன் ஓட்டு வேட்டைக்குக் கிளம்பியுள்ளது. சென்ற தேர்தலைப் போல அயோத்தி விவகாரத்தை மட்டும் முன்வைத்து ஓட்டுப்பொறுக்க முடியாது என்று தனது கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளதாக அரசியல் நோக்கர்கள் இதைச் சித்தரித்தனர். பாரதீய ஜனதாவின் வகுப்பு வாதத் தன்மை மாறிவிட்டதாகக் கூட சில பத்திரிக்கைகள் இட்டுக்கட்டின

ஆனால் இந்த ஊகங்களையும் மதிப்பீடுகளையும் ஏப்ரல் 4-ந் தேதியன்று டெல்லியில் நடத்திய மிகப்பெரிய பேரணி - பொதுக்கூட்டத்தின் மூலம் நிராகரித்து, அப்பட்டமாக இந்துவெறியைக் கக்கியது பாரதீய ஜனதா. விசுவ இந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ்; பஜ்ராங்தளம் ஆகிய பாரதீய ஜனதாவின் துணை அமைப்புகள் மூலம் நடத்தப்பட்ட இப்பேரணியில் ஏறத்தாழ 3 லட்சம் பேர் கலந்து கொண்டு டெல்லியையே ஸ்தம்பிக்கச் செய்தனர். அதற்கு முந்தைய நாளில் நாடெங்குமுள்ள மதப்பண்டாரங்கள், சன்னியாசிகள், சாதுக்கள், மடத்தலைவர்களின் நாடாளுமன்றம் (சீக்கிய மதத்தைப் போல) கூட்டப்பட்டது. 'முஸ்லிம் ஆக்கிரமிப்பாளர்'களால் கைப்பற்றப்பட்ட அயோத்தி, மதுரா, வாரணாசியிலுள்ள வழிபாட்டுத் தலங்களை ''விடுதலை'' செய்வது; ராஜீவ் - வி.பி.சிங் - சந்திரசேகர் ஆகிய ''மூவர் கும்பலுக்கு'' எந்த ஒரு இந்துவும் வாக்களிக்கக் கூடாது; ராம ராஜ்ஜியத்தை நிறுவ பாரதீய ஜனதாவுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று மூன்று முக்கிய முடிவுகளை அக்கூட்டத்தில் நிறைவேற்றினார்.

இம் முடிவுகளை அடுத்த நாள் நடந்த பேரணியும் பொதுக்கூட்டமும் எதிரொலித்தது. ● இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள நாட்டில் அவர்கள் நலனைத்தான் அரசு பிரதிபலிக்க வேண்டும். ● எமது பாதையில் தடையாக இருப்பவர்கள் நாட்டை விட்டு துரத்தப்படுவார்கள். ● அயோத்தியில் கோயில் கட்டியதும் பாக். வசமுள்ள காஷ்மீர் இந்தியாவின் பகுதியாக மாறிவிடும். ● அயோத்தியில் கோயில் இருந்ததா, இல்லையா என்று நிரூபிக்கத் தேவையில்லை; இதுபெரும்பான்மை இந்துக்களின் மதநம்பிக்கை விவகாரம் ● இந்து ராஷ்டிரம் தான் உண்மையான மதச்சார்பின்மை. ராமராஜ்ஜியத்தை நிறுவுவது தன் உண்மையான தேசியத்தையும் தேச ஒற்றுமையையும் சாதிக்கும் — என்று சாதுக்களும் சன்னியாசிகளும் வெறியூட்டினர்.

### சன்னியாசிகளை முன்னிறுத்தி ஓட்டு வேட்டை

''பெற்ற தகப்பனையே தீயிட்டுக் கொளுத்திய ஔரங்கசீப்பின் ஆட்சி அமைய வேண்டுமா அல்லது தனது சகோதரனைக் காக்கப் போராடிய ராம ராஜ்ஜியம் வேண்டுமா?

நாம் புனிதமாக வழிபடும் பசுவைக் கறியாக்கித் தின்னும் முஸ்லிம்களை இன்னுமா சகித்துக் கொண்டிருக்க வேண்டும்? பலதார மணமுறையுடன் சந்ததிகளைப் பெருக்கும் தேச 'விரோத முஸ்லிம்களுக்கு 'இந்துக்கள் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும்'' என்று சாதுக்களும் சன்னியாசிகளும் வன்முறை வெறியூட்டிய போது லட்சக்கணக்கான இந்து வெறியர்கள் சூலாயுதங்களை உயர்த்தி வரவேற்றுக் கூச்சலிட்டனர்.

உமாபாரதி - இந்துவெறியூட்டும் ஆபாசப் பெண் பேச்சாளர்



மறுபுறம் ஆபாச சைகை காட்டிப் பேசும் 'அனல் கக்கும்' பெண் பேச்சாளர்களான உமாபாரதி, ரிதம்பரா ஆகியோர் இன்னும் கொச்சையான முறையில் இதர சிறுபான்மை மதத்தவரைக் கேவலப்படுத்தி இந்து வெறியூட்டினர். ''மெக்கா - மெதினாவில் பஜ்ராங்தளம் செயல்பட்டால், அங்கே சிறுபான்மையினரான நம்மிடம் மசூதியை ஒப்படைப்பார்களா? அதே போலத்தான், இங்கே சிறுபான்மையினரான முஸ்லிம்கள் அயோத்தியைப் பற்றிப் பேச உரிமையில்லை. பாபர் மசூதியை முஸ்லிம்கள் இனி மறந்துவிட வேண்டும்'' என்று உமாபாரதி எச்சரித்த போது, காட்டமான சாராயம் குடித்த போதையில் கூட்டம் எக்காளமிட்டது.

விசுவ இந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ். பஜ்ராங் தளம் ஆகிய இந்துவெறி அமைப்புகள் நடத்திய இப்பேரணி - பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட பாரதீய ஜனதாவின் 'மிதவாத' தலைவரான வாஜ்பாய், ''அயோத்தி விவகாரத்தை தேர்தலுக்குப் பயன்படுத்துவதாக நம்மைக் குற்றம் சாட்டுகிறார்கள்; தேர்தலுக்கு முன்னரே ராமர் கோயிலைக் கட்டியிருந்தால் நாங்கள் ஏன் பேசப் போகிறோம்?'' என்று தமது கட்சியின் இந்துவெறிக் கொள்கைக்கு வக்காலத்து வாங்கினார். தீவிரவாதத் தலைவரான அத்வானி இன்னும் ஒரு படி மேலே போய், ''ராம பக்திதான் உண்மையான தேசபக்தி'' என்றார்.

### இந்துவெறியர்களின் பதவி பறிபோனது

இப்படி சாதுக்களையும் சன்னியாசிகளையும் முன்னிறுத்தி பாரதீய ஜனதா ஓட்டுப் பொறுக்குவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. டெல்லி பேரணிக்கு சில நாட்கள் முன்னர்தான் மகாராஷ்டிராவில் சிவசேனா கட்சி எம்.எல்.ஏவான சுபாஷ் தேசாயின் தேர்தல் வெற்றி செல்லாது என்று பம்பாய் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சுபாஷ் தேசாய், தேர்தல் விதிமுறைகளை மீறி வகுப்புவாத வெறியூட்டும் வகையில் பிரச்சாரம் செய்துள்ளார் என்று இவருடன் போட்டியிட்டு தோல்வியடைந்த காங்கிரசு வேட்பாளர் தொடுத்த வழக்கின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது. அடுத்த சில நாட்களிலேயே விமல்நந்த கிஷோர் முண்டாடா என்ற பாரதீய ஜனதா எம்.எல்.ஏ. மற்றும் சூரியகாந்த் மகாதிக் என்ற சிவசேனா எம்.எல்.ஏ. ஆகியோரின் தேர்தல் வெற்றிகளை இதேபோல உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. இதுதவிர, இந்து வெறியூட்டி தேர்தலில் வெற்றி பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டு சிவசேனாவின் 6 எம்.எல்.ஏ.க்கள் பாரதீய ஜனதாவின் 4 எம்.எல்.ஏ.க்கள் மற்றும் ஒரு சிவசேனா எம்.பி. ஆகியோர் மீதான வழக்குகள் விசாரணையில் உள்ளன.

எனவேதான் பாரதீய ஜனதா வேறு, இந்துமத அமைப்புகளான விசுவ இந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ். முதலானவை வேறு என்று காட்டிக் கொண்டு, தாங்கள் நேரடி



படிப்பகம்

www.padippakam.com

யாக இந்து வெறியூட்டும் பிரச்சாரத்தில் ஈடுபடாமல், மத அமைப்புகள், சாதுக்கள், சன்னியாசிகள் மூலம் அதைச் செய்கிறது பாரதீய ஜனதா. அதன் மூலம் இந்து ஓட்டுக்களை முழுவதுமாக கைப்பற்ற முயற்சிக்கிறது. மகாராஷ்டிர தீர்ப்பிற்குப் பிறகு, இப்போதைய தேர்தலில் பாரதீய ஜனதா - சிவ சேனா வேட்பாளர்கள் வெளிப்படையாக அயோத்தி விவகாரத்தைப் பற்றி பிரச்சாரம் செய்யக் கூடாது; மேடைகளில் மதச் சின்னங்களுடன் வேட்பாளர் பேசக்கூடாது; சுவரொட்டி மற்றும் பிறவற்றில் மதச்சின்னங்கள் இருக்கக்கூடாது என்று பாரதீய ஜனதா எச்சரித்துள்ளது.



டெல்லி பேரணி: காவியுடையுக்குள் கொலைவெறியர்கள்.

### காவியும் கவர்ச்சியும்

காங்கிரசைப் போலவே ''நிலையான ஆட்சி'' என்ற முழக்கத்தை பாரதீய ஜனதா இப்போது சேர்த்துக் கொண்டுள்ளது. எனவே ஆகப் பெரும்பான்மையான தொகுதிகளில் வெற்றி பெறும் நோக்கத்தோடு ஒருபுறம், சாமியார்களை கட்சித் தொண்டர்களாக்கி இந்து ஓட்டுக்களைக் கைப்பற்ற முயற்சிக்கிறது. மறுபுறம், இதர ஓட்டுக் கட்சிகளைப் போல சினிமா நடிகை - நடிகையரைக் கொண்டு கவர்ச்சி காட்டி ஓட்டுப்பொறுக்கத் தீர்மானித்துள்ளது.

தேவ் ஆனந்த், மனோஜ்குமார், சத்ருகன் சின்ஹா, ஹேமமாலினி, மிதுன் சக்ரவர்த்தி முதலான பிரபல இந்தி சினிமா நட்சத்திரங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு இறக்கி விடப்பட்டுள்ளனர். இது தவிர கிரிக்கெட் விளையாட்டு வீரர் சேட்டன் சௌகான் மற்றும் தொலைக்காட்சி ராமாயண துணை நடிகர்கள் பலர் பாரதீய ஜனதாவின் தேர்தல் பிரச்சாரத்துக்குச் செல்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக நேற்றுவரை பாரதீய ஜனதாவுடன் தொடர்பில்லாத, முன்னாள் அரசுப் பொதுக்கணக்கு - கட்டுப்பாட்டுத் தலைவரான டி.என்.சதுர்வேதி, ராமாயணத் தொடரில் சீதையாக நடித்த தீபிகா மற்றும் ராவணனாக நடித்த திரிவேதி ஆகியோர் பாரதீய ஜனதாவின் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

உமாபாரதி, ரிதம்பரா ஆகியோரின் ஆபாச, இந்து வெறியூட்டும் உரைகளைக் கொண்ட காசட்டுகளோடு, ரவீந்திர ஜெயின், நரேந்திர சன்சால் ஆகியோரின் பாடல்களைக் கொண்ட காசட்டுகளையும் பாரதீய ஜனதா வெளியிட்டுள்ளது இளைஞர்களைக் கவர் ''டிஸ்கோ'' பாணியிலான பாடல்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இது தவிர ஜே.கே.ஜெயின் தயாரித்துள்ள - அத்வானியின் ரத யாத்திரையிலிருந்து அயோத்தி துப்பாக்கிச் சூடு வரை சித்தரிக்கும் வீடியோ சினிமாவை கிராமந்தோறும் திரையிட்டு ஓட்டுப் பொறுக்குகின்றனர்.

தங்களது இந்துவெறி தோற்றத்தை மறைத்துக் கொள்ள, முக்தியார் அப்பாஸ் நக்வி என்ற முஸ்லிம் இளைஞர் மாநாட்டுக் கட்சித் தலைவரை தமது கட்சியில் பாரதீய ஜனதா சேர்த்துக் கொண்டுள்ளது. தமது சாதி வெறியை மறைத்துக் கொண்டு அம்பேத்கார் நூற்றாண்டு நிறைவு விழாவை தமது கட்சி ஆளும் மாநிலங்களில் நடத்தியுள்ளது.

### சேஷனுடன் லடாய்

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட அத்வானி நடத்திய ரத யாத்திரையின் போது, பாரதீய ஜனதாவின் தாமரைச் சின்னம் மதவெறி நோக்கங்களுக்காக கேடாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதால், அச்சின்னத்தை முடக்க வேண்டும் என்று முன்னாள் மத்தியப் பிரதேச காங்கிரசு முதல்வரான அர்ஜுன் சிங் தேர்தல் கமிஷனிடம் ஏற்கனவே ஒரு புகார் மனு கொடுத்திருந்தார். அம்மனுவை ஏற்றுக் கொண்டு ஆரம்ப விசாரணை நடத்துமாறு உத்திரவிட்டார் தேர்தல் கமிஷனர் சேஷன்.

இதன் விளைவாக தாமரைச் சின்னம் முடக்கப்படுமோ என்று அஞ்சிய பாரதீய ஜனதா, சேஷனுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி, விளைவுகள் கடுமையாக இருக்கும் என்று எச்சரித்தது. காங்கிரசின் ஏற்பாட்டின்படி முறைகேடாக சேஷன் இப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார் என்று ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயுள்ளதால், அவர் தேர்தல் சின்னத்தை முடக்கும் நடவடிக்கை எடுத்தால் அது 'புனிதமான' தேர்தல் கமிஷனை மதிப்பிழக்கச் செய்துவிடும்; மேலும் பாரதீய ஜனதா இதன் காரணமாக தேர்தலைப் புறக்கணித்துவிட்டு கலவரத்தில் இறங்கினால், அது விபரீத விளைவுகளை ஏற்படுத்தி விடும் என்பதால் தேர்தல் கமிஷன் இந்த விவகாரத்தை தேர்தலுக்குப் பின்னர் பரிசீலிப்பதாக தள்ளிவைத்துள்ளது. இப்படி, சேஷன் ஒரு காங்கிரசு விசுவாசி என்பதை சாதகமாக்கிக் கொண்டு, தம்மீது நடவடிக்கை எடுக்க முடியாதபடி பாரதீய ஜனதா நிர்ப்பந்தித்துள்ளது.

### படரும் இந்துவெறி பாசிச அபாயம்

ஆனால் இந்துவெறி பாசிசத்தைச் சுமந்து வரும் பாரதீய ஜனதாவும் அதன் துணை அமைப்புகளும் நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான சட்டவிரோத - கிரிமினல் கும்பல். இக்கும்பலின் கடந்த கால - நிகழ்கால நடவடிக்கைகளைக் காட்டியே அவற்றைத் தடை செய்ய வேண்டும். இருப்பினும் இது பெரும்பான்மை இந்துக்களின் உணர்வுக்கு எதிரான செயலாகிவிடும் என்று அரசும் சட்டமும் அனுசரித்தே போகின்றன. அதைச் சாதகமாக்கிக் கொண்டு இந்து வெறியர்கள் தேர்தலுக்கு முன்னரே ராமராஜ்ஜியத்தை நிறுவத் துடிக்கின்றனர். சீக்கியர்களைப் போல சூலாயுதங்களையும் வானொளியும் ஏந்தி வெளிப்படையாகவே இந்துவெறி - வன்முறை முழக்கமிட்டு பேரணி நடத்துகின்றனர். டெல்லி பேரணிக்கு முன்பு டெல்லி கோகுல் புரியிலுள்ள முஸ்லிம் குடியிருப்புகளைத் தாக்கினார். ''ஜெய் ஸ்ரீராம்'' என்று கோஷம் போட மறுத்த முஸ்லீம் காரோட்டிகளை நடுவீதியில் வைத்து உதைத்தனர். டெல்லியில் இந்துக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில், அவர்கள் பாரதீய ஜனதாவை ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் வலுக்கட்டாயமாக அவர்கள் வீடுகளில் காவிக் கொடியை ஏற்றினர். கொடியை இறக்கிய இந்துக்களை தாக்கவும் செய்தனர். இப்போது குஜராத் பரோடாவில் மீண்டும் கலவரத்தைத் தூண்டி ஆதாயமடையத் துடிக்கின்றனர்.

இந்நிலையில் சூலாயுதங்களுடன் மனித ரத்த வேட்டைக்குத் தயாராக உள்ள இந்து வெறியர்களை இன்றைய அரசியல் கட்டமைப்பின் மூலம் அழித்துவிட முடியாது. தேர்தலில் பாரதீய ஜனதாவைத் தோற்கடிப்பதன் மூலம் படர்ந்து வரும் இந்து வெறி பாசிச அபாயத்தை முறியடித்து விடவும் முடியாது. நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே சக்திவாய்ந்த மக்கள்திரள் இயக்கங்கள் மூலமே அதை வேரறுக்க முடியும். புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் திரண்டு போராடுவதன் மூலமே அதைச் சாதிக்க முடியும்.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# நீலகிரியின்
# வித்தியாசமான கலெக்டர்!

**திமிர் பிடித்த அதிகார வர்க்கம் மத்தியில் பழங்குடி மக்களிடம் பரிவுடன் பணியாற்றிய அதிகாரி! அதை சகிக்காத அரசு! ஒடுக்குமுறை எந்திரத்திடம் மனிதாபிமானத்திற்கு இடமேது?**

அம்பேத்கார் ராஜ்குமார், ஐ.ஏ.எஸ். நீலகிரி மாவட்ட கலெக்டர். இவரை கடந்த மார்ச்சு மாதம் இறுதியில் பதவி மாற்றம் செய்தது தமிழக கவர்னர் ஆட்சி. ஏறக்குறைய 2000க்கும் மேற்பட்ட பழங்குடிகள் ஒன்று திரண்டு ''நீலகிரி ஆட்சித் தலைவர் அம்பேத்கார் ராஜ்குமார் அவர்களை மாற்றம் செய்யாதே! இந்த அநியாயத்திற்கு எதிராக போராடுவோம்'' என்று ஆர்ப்பாட்டங்களில் இறங்கினார்கள்.

இவர்கள் ஓட்டுக்கட்சி பாணியில் கூலிக்கு கொண்டு வரப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் அனைவரும் கலெக்டரை தங்கள் குடும்பத்தின் மூத்தவராக மரியாதையோடு பார்ப்பவர்கள். கலெக்டர் ராஜ்குமாரும் அப்படித்தான் இப்பழங்குடிகளான கூலி ஏழைகளிடம் பரிவோடு பணியாற்றியவர். அவர்களின் பிரச்சினைகளை அக்கரையோடு கேட்டறிந்து உதவிகளை செய்தவர். ஆனால், மறுபுறம் நீலகிரி மாவட்டத்தின் இயற்கைச் செல்வங்களை குறிப்பாக காட்டுவளங்களை அழித்தும் ஆக்கிரமித்துக் கொண்டு கொட்டமடித்த கும்பல்களை ''சட்டப்படி'' கண்காணித்தவர். இதனால் பலகோடி ருபாய் வருமானம் இழந்து எரிச்சல் அடைந்த அக்கும்பல் தங்கள் அதிகாரத்தை காண்பித்தது. நீலகிரி மாவட்ட காங்கிரசு எம்.பி.யும், முன்னாள் ராஜீவ் ஆட்சியின் மத்திய மந்திரியும் 'சவுத் இந்தியா விஸ்கோஸ்' செயற்கை துணி இழை ஆலை அதிபருமான (நீலகிரி மலையில் வெட்டப்படும் காட்டு மரங்கள் இவ்வாலைக்கு கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது) ஆர்.பிரபு மூலம் கலெக்டரை பதவி மாற்றம் செய்தனர்.

கேண்ட அம்பேத்கார் ராஜ்குமார் என்ற ஜி.ஏ.ராஜ்குமார் ஐ.ஏ.எஸ், ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டம் மேடப்பேடு கிராமத்தைச் சேர்ந்தவர். தாழ்த்தப்பட்ட கூலி ஏழைக் குடும்பத்தில் நான்கு மகன்களில் ஒருவராகப் பிறந்தவர். தற்போது 37 வயதான இவர், தன் குடும்பத்துக்கு நேர்ந்த வறுமையையும் சாதிய அவமானத்தையும் நினைவு கூர்கிறார். ''சிறுவயதில் தண்ணி சோறும் காய்ஞ்ச மிளகாயும் தவிர நான் வேறு எதையும் பார்த்தது இல்லை'' என்கிறார்.

''படித்த என் அம்மாவுக்கு அரசு மூலம் ஆசிரியை வேலை கிடைத்தபோதும், தீண்டத்தகாத சாதி என்பதால் மேல்சாதிக்காரர்கள் வேலையில் சேர்க்கவேயில்லை. கடைசியில் விவசாய கூலி வேலை செய்து எங்களை காப்பாற்றினார்'' என்று சாதிய கொடுமைகளை விவரிக்கிறார்.

இவர், ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் முறையாக வெற்றி பெற்றும்கூட வரிசைப்படி கலெக்டர் பதவியை அரசு கொடுக்கவில்லை. '78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ். தேறிய இவர், ஏறக்குறைய 10 ஆண்டுகள் அரசுத்துறையின் பல்வேறு பதவிகளுக்கு மாற்றப்பட்டு '90 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நீலகிரி மாவட்ட கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

அதிகார தோரணை இல்லாமல் சாதாரண மக்களிடம் இவர் பழகிய முறை, இயல்பாக இவருடைய மதிப்பை உயர்த்தியது. காலம் காலமாக அதிகார வர்க்கத்தால் ஏமாற்றப்பட்ட அம்மக்கள் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளை அவரிடம் மனம் விட்டு பேசினர். குடும்பப் பிரச்சினை முதல் கிராமப் பிரச்சினைவரை கூறினர்.

பரம்பரை பரம்பரையாக அம்மண்ணின் மைந்தர்களான பழங்குடிகள், தாழ்த்தப்பட்டவர்கள் இன்றளவும் ஒரு குடிசை கட்டுவதற்கு கூட சொந்த நிலமில்லாதவர்கள்.

அரசு அறிவிக்கும் எந்த உதவிகளையும் இதுவரை அவர்கள் கண்ணால்கூட கண்டதில்லை. 'நியாய' விலை ரேஷன் அட்டைகளைக்கூட அவர்களுக்கு வழங்கவில்லை. இன்னும், கூடலூர், புத்தூர் வயல் போன்ற ஆதிவாசிகள் கிராமங்களில் அவர்களின் சுடுகாட்டு நிலத்தைக்கூட மேல்சாதியினர் பிடுங்கிக் கொண்டனர்.

கலெக்டர் ராஜ்குமார், பதவியேற்றதிலிருந்து உரிய குற்றவாளிகள் யாரும் தண்டிக்கப்படவில்லை; ஆனாலும், அக்குற்றங்களை அவர் மேலும் ஊக்குவிக்கவில்லை. மாறாக, அவ்வாறான உள்ளூர் ஆதிக்க சக்திகள், ஊழல் அரசு அலுவலர்களுக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுத்தார்; அரசு அறிவிக்கும் சலுகைகள் சம்மந்தப்பட்ட ஏழைகளுக்கு கிடைப்பதற்கு முயற்சிகள் செய்தார்.

பழங்குடிகள், தாழ்த்தப்பட்டவர்கள், இந்திய அரசால் கொண்டு வரப்பட்ட இலங்கை மலையக தமிழர்கள் ஆகியவர்களுக்கு 3400 குடியிருப்பு நிலப் பட்டாக்கள் வழங்கப்பட்டது. 3 ஆண்டுகாலமாக வழங்காமலிருந்த ரேஷன் அட்டைகள் சம்மந்தப்பட்ட 4192 பேர்களுக்கு வழங்கப்பட்டது. மலையக கிராமங்களில் புதிதாக 22 ரேஷன் கடைகள் திறக்கப்பட்டன. அரசு சார்பில், சுவரொட்டி, பிரசுரம் வாயிலாக ஒவ்வொரு அட்டைக்கும் வழங்கப்படும் ரேஷன் பொருட்கள் – விலையுடன் மலையக மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பஞ்சாயத்து தலைவர்கள், சமூக சேவை நிறுவனங்கள், கிறிஸ்துவ ''தொண்டு'' நிறுவனங்கள், தொழிற்சங்க அமைப்புகள், உள்ளூர் அரசியல் கட்சி தலைவர்கள் அடங்கிய கூட்டங்கள் கலெக்டர் தலைமையில் அடிக்கடி நடந்தது. இதில் பகுதி மக்களின் பிரச்சனைகள், கோரிக்கைகள் வைக்கப்பட்டு தீர்வுகள், அக்கறையுடன் ஆராயப்பட்டது. ''புதிய சாலைகள், பள்ளிகள், சுகாதார நிலையங்கள் என்பவை அதற்கு முன் வெறும் பேப்பரில் மட்டுமே இருந்தது. இப்

ஆதிவாசி பெரியவரிடம் பரிவுடன் குறைகேட்கும் கலெக்டர்; பிரமைக்கு ஊன்றும் விதை!





படிப்பகம்

www.padippakam.com

'போதுதான் உண்மையிலேயே இயங்க ஆரம்பித்திருக்கின்றன'' என்று பகுதி மக்கள் நன்றியுடன் கூறுகிறார்கள்.

மேலும், அதிகார வர்க்கத்தின் லஞ்ச. லாவண்யங்களை, அதிகார திமிர்த்தனத்தை பார்த்துப் பழகிப்போன ஏழை மக்களுக்கு கலெக்டர் ராஜ்குமாரின் அணுகுமுறைகள் அவர்மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியது. மக்களின் குறைகளை கேட்க வரும்போது, உள்ளூர் பெரிய மனிதர்களின் வீடுகளில் சாப்பிடாமல், தான் கையோடு எடுத்து வரும் உணவை சாப்பிடுவது, மேஞ்சூர் என்ற கிராமத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு 35 கூலி ஏழைகள் இறந்தபோது, 3 நாட்கள் பெரும் மழையில் இரவும் பகலும் அங்கேயே தங்கி நிவாரண வேலைகள் செய்தது போன்ற பல காரணங்களால் மக்கள் அவரை மதிப்புடன் பார்க்கின்றனர்.

மறுபுறம், பெரும் மரக்கடத்தல் புள்ளிகள், ஊட்டியில் இடங்களை ஆக்கிரமித்துள்ள நட்சத்திர ஓட்டல் அதிபர்கள், அதிகார உள்ளூர் ஆதிக்க சக்திகள் போன்ற மிகப்பெரும் அதிகார அடக்குமுறை கும்பல் கலெக்டர் ராஜ்குமாரின் சட்டப்பூர்வ கண்காணிப்பு எச்சரிக்கை நடவடிக்கைகளை சகிக்க முடியாமல் துள்ளி குதித்தன. அவர் மீது ஏராளமான புகார்களை அரசுக்கு அனுப்பின. அவரை பதவியைவிட்டு தூக்க பல முறை முயற்சித்து ஒரே ஆண்டிற்குள் இப்போது வெற்றியும் பெற்றுவிட்டனர். இவர்கள் சார்பாக, மிகப்பெரும் 'எஸ்டேட்' முதலாளியும், பல தொழிற்சாலைகளுக்கு அதிபரும், காங்கிரசு தலைவருமான ஆர்.பிரபு தமிழக கவர்னர் பீஷ்ம நாராயணன் சிங் மூலம் வேலையை முடித்துவிட்டார்.

ஆக, சட்டத்தை மீறி அல்ல சட்டப்பூர்வ அடிப்படையில் கூட சாதாரண அடிமட்ட மக்களுக்கு பணிபுரிவதைவிட அரசு எந்திரம் சகித்துக்கொள்ளாது என்பதைத் தான், கலெக்டர் ராஜ்குமாருக்கு நேர்ந்த பதவி மாற்றம் சொல்கிறது. அரசு எந்திரத்தின் பார்வையில் கலெக்டர் ராஜ்குமார், ஒரு வேலிதாண்டிய வெள்ளாடு! மீண்டும் அதை பட்டியில் அடைக்க நம்பிக்கையோடு முயற்சிக்கிறது அரசு எந்திரம். எனவே, சாதாரண மக்களிடம் மருந்துக்கும் தொடர்பில்லாத பெரும் முதலாளிகளிடம் மட்டும் பழகவும், தொடர்பு கொள்ளவும் வாய்ப்பான இடமான தமிழ்நாடு தொழிற்துறை வளர்ச்சி கழகத்தின்(TIDCO) இணை நிர்வாக இயக்குநர் என்ற தொடைக்கறி பக்கம் அவரை இடம் மாற்றியுள்ளது.

சமூக சேவை நிறுவனங்கள் செய்யும் தொண்டின் வரம்புமீறி கலெக்டர் ராஜ்குமாரின் சிந்தனை, செயல்பாடு இல்லை. அரசு சலுகைகளை சிதறாமல் எப்படி உரியவர்களிடம் ஒப்படைப்பது (பிரமையில் ஆழ்த்துவது) என்ற தொழில் ரீதியான கடமையுணர்ச்சிதான் அவரிடம் மேலோங்கி இருந்தது. சமூக நல அரசு என்று சொல்லிக்கொண்டு இயங்கும் அரசு எந்திரம் மொத்த மக்களுக்கும் எப்படி விரோதமாகச் செயல்படுகிறது என்ற உண்மை கண்ணெதிரே தெரிந்திருந்தும் அதற்காக அவர் கோபப்படவில்லை.

இன்னும் சிந்தனை ரீதியில் பெரும்பான்மை மக்களை அப்பட்டமாக ஏமாற்றும் பல்வேறு ஆளும் வர்க்க கருத்துக்களை தலைமைதாங்கி பிரச்சாரம் செய்தார். சென்ற குடியரசு தினத்தன்று, மத நல்லிணக்கம், சகல சமூகத்தினற்கிடையேயும் ஒற்றுமை என்று ஊட்டியில் 2 லட்சம் கூலி ஏழைகளுக்கு ஆளும் வர்க்க நபர்களை தலைமை தாங்க வைத்து ஊர்வலம் நடத்தினார். சுருக்கமாக சொல்வதனால், அரசு எந்திரத்தை இயக்கும் அதில் அங்கம் வகிக்கும் ஏதாவது ஒரு நபருக்கு அல்லது கும்பலுக்கு விசுவாசமாக செயல்படும் மற்ற அதிகாரிகளைவிட, இவர் ஆளும் வர்க்கத்தின் மொத்த அரசு எந்திரத்துக்கும் விசுவாசமாக இருப்பதில் தான் தனது நன்றியைக் காட்டியுள்ளார். இதன்மூலம் அவர் விரும்பியோ, விரும்பாமலோ, அரசு எந்திரத்திடம் மக்கள் என்றும் கையேந்திக் கொண்டுதான் வாழ வேண்டும் என்ற கருத்தைத் தாங்கி நிற்கிறார்.

ஆளும் வர்க்கமும் அரசு எந்திரமும் மூர்க்கமாகத் தங்கள் மீது திணித்த மிருகத்தனமான ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் தங்களுக்கான அரசியல் அதிகார அமைப்புகள் மூலமே தகர்த்தெறிய முடியும். இதை, அரசு சலுகைகளும் சம்பளமும் கொடுத்து இயக்கும் கலெக்டர்களால் அல்ல; அரசு எந்திரத்தையே அழித்தொழிக்கப் போராடும் புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் தான் சாதிக்க முடியும்.

## கலெக்டருக்கு அரிவாள் வெட்டு... ஏன்?

*தஞ்சை கலெக்டர் விவேக் நாராயணனை ஒரு பட்டதாரி இளைஞர் 25-2-91 அன்று அரிவாளால் வெட்டி காயப்படுத்தினார் என்ற செய்தியை பத்திரிக்கைகள் பரபரப்பாக வெளியிட்டன. இச் சம்பவத்துக்கு பின் உள்ள சில பின்னணி தகவல்கள்.*

*திங்கட்கிழமை தோறும் அனைத்து மாவட்ட ஆட்சி அலுவலங்களிலும் மக்கள் குறை கேட்பதற்காக ஒதுக்கப்படுகிறது.*

*பட்டதாரி இளைஞர் மகாலிங்கம் தனது கஷ்டங்களைச் சொல்லி வாழ்க்கைக்கு ஒரு வழி ஏற்படுத்தி தரும்படி ஜூலை மாதமே மனுக் கொடுத்தார். அதன் பிறகும் தொடர்ந்து மனுகொடுத்த பொழுதும் கலெக்டர் 'பார்க்கலாம்' என்று வாங்கி வைத்துக் கொண்டாரே ஒழிய எவ்வித பயனும் இல்லை. 'மக்கள் குறை கேட்கும் நாள்' என்பதெல்லாம் வெறும் கண்துடைப்பு வேலைகள் என்பதை நேரடியாக உணர்ந்து விரக்தியடைந்த மகாலிங்கம் 25-2-91 அன்று கலெக்டரை அரிவாளால் வெட்டினார்.*

*இச் செயல் பிரச்சினைக்கு தீர்வில்லை என்றாலும் அந்த இளைஞரின் நியாயமான கோபத்தை ஓரங்கட்டிவிட முடியாது.*

*போலி கம்யூனிஸ்டுகளோ, கலெக்டருக்கு வக்காலத்து வாங்கி நின்றார்கள். 'மார்க்ஸிஸ்டு' கட்சியினர், அரசு பணியாளர் சங்கப் பத்திரிக்கையான சங்கக்குரலில் கலெக்டரும் ஒரு அரசு ஊழியர்தான் என்று கூறி இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து செய்தி வெளியிட்டார்கள். கலெக்டர் அலுவலகங்களில் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி, சிவப்பு நாடா முறையை ஒழித்துக் கட்டி, மக்கள் அடிக்கடி வந்து போகும்படி இல்லாமல் செய்ய வேண்டும்; இல்லையெனில் இத்தகு வன்முறைகள் தொடரவே செய்யும் என்றுவேறு ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள்.*

கலெக்டரை, அரசு இடம் மாற்றியதற்கு எதிராக கூடலூர் பகுதி பழங்குடிகளின் போராட்டம்! வர்க்கப்பார்வை பெறாத அப்பாவிகள்!





படிப்பகம்

www.padippakam.com

பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல்களில் ஓட்டுப் பொறுக்குவதற்கான நாய்ச் சண்டையில் அரசியல் கட்சிகள் இறங்கிவிட்டன. இந்தக் கட்சிகளிடையே ஏதோ அடிப்படை இலட்சியம் - கொள்கை வேறுபாடுகள் இருப்பதைப்போல ஆவேசக் கூச்சல் போடுகின்றன. மக்களுக்குச் சேவை செய்வதில் யார் முன்னுரிமை பெறுவது என்பதற்கான போட்டிதானோ இத்தேர்தல்கள் என அவை சித்தரிக்கின்றன. 15, 20 ஆண்டுகள் உழைக்கும் ஊழியர்களுக்குக் கூட ஓய்வூதியம் மறுக்கப்படும்போது, ஓராண்டு எம்.பி.யாக இருந்தாலே ஓய்வூதியம் உட்பட பலவசதிகள் வேண்டுமென அவசர அவசியமாக, ஒருமனதாக தீர்மானம் போட்டுக் கொண்டார்கள். இதற்கு இவர்கள் தகுதியானவர்கள் தானா? இந்தக் கட்சிகளின் கடந்தகால சாதனைகள், நாடாளுமன்ற நடவடிக்கைகள் தாம் எத்தகையவை?

மக்களுக்கு எதிராக அரசு பயங்கரவாதத் தாக்குதல் நடத்த கருப்புச் சட்டங்களை இயற்றி, ஏவிவிடுவதில் இலட்சியம், கொள்கை, கருத்து - கட்சி வேறுபாடின்றி இவர்கள் அனைவருமே ஒன்றுபட்டுச் செயல்பட்டிருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கும் இக் கருப்புச் சட்டங்களை நாடாளுமன்றம் விவாதித்து, நிறைவேற்றிய பலசமயங்களில் அவையின் பத்திலொரு அங்கத்தினர் (கோரம்) கூடவரவில்லை. வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டு, படியை வாங்கிக் கொண்டு ஐந்து நட்சத்திர விடுதிகளிலும், தூதரகங்களிலும், டெல்லி பண்ணை மாளிகைகளிலும் குடித்துக் கும்மாளமிடப் போய்விட்டார்கள். அற்ப விவகாரங்களுக்காக அமளி துமளி, அடிதடி சண்டை, ஆபாச கூச்சல், சமிக்கைகள் என்று பல நாட்கள், பல மணிநேரம் வீணடிக்கும் எம்.பி.க்கள் மக்களது வாழ்வைப் பறிக்கும் கருப்புச்சட்டங்களை நிறைவேற்றுவதற்கு சில மணிநேரம்கூட இல்லை; சில நிமிடங்களிலே கைதூக்கித் தலையாட்டினார்கள்.

இவ்வாறு மக்களை அடக்கி ஒடுக்கும் பயங்கரவாத, கருப்புச் சட்டங்களை இயற்றுவதிலும், அமுலாக்குவதிலும் விதிவிலக்கின்றி அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு நிற்பதை டில்லி மக்கள் ஜனநாயக உரிமை சங்கத்தின் ஒரு பிரசுரம் அம்பலப்படுத்துகிறது. 1989 நவம்பரில் வெளியான இப்பிரசுரம் காலதாமதமானாலும், இப்போதும் ஓட்டுக் கட்சிகளைப் புரிந்து கொள்ளப் பயன்படும் என்பதால், 'புதிய ஜனநாயகம்' இதழ்களில் தொடராக வெளியிடுகிறோம்.

# சர்வகட்சி முழக்கம்:

# ''பயங்கரவாத வன்முறைக்கு ஐக்கியப்படுவோம்!''

## — அரசியல் கட்சிகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதும்

இந்திய அரசியல் நிர்ணய சட்டம், மூன்றாவது பிரிவு பின்வருமாறு கூறுகிறது:

(அ) மாநிலங்களில் அடங்கியுள்ள பிரதேசங்கள்,

(ஆ) முதற்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள யூனியன் பிரதேசங்கள், மற்றும்

(இ) எதிர்காலத்தில் கையகப்படுத்தும் இம்மாதிரியான பிரதேசங்கள்.

— ஆகியவை இந்தியாவின் பிரதேசமாக அமைகிறது.

இவ்வாறு நமது அரசியல் நிர்ணய சட்டத்தின் தந்தைமாரால் வரையறுக்கப்பட்ட இந்தியா இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் நுழைந்துள்ளது. விரிந்து சுருங்கும் தன்மையுடைய இந்த நாட்டின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் எப்போதும் தொடர்ச்சியான ஆபத்தின் கீழ் இருக்கிறது என்று நம்மை நம்பச் சொல்கிறார்கள். இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கென்று காட்டிக் கொண்டு ஒவ்வொரு நாடாளுமன்றமும் புதிய சட்டங்களை இயற்றுகிறது. இம்மாதிரியான எட்டு சட்டங்களை எட்டாவது நாடாளுமன்றம் (1985-89) நிறைவேற்றி இருக்கிறது. அல்லது விரிவாக்கமாகவும், திருத்தமாகவும் கொண்டு வந்திருக்கிறது. அச்சட்டங்களின், 'நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அறிக்கை' எனப்படும் முன்னுரையில் ஏதாவது சில வடிவங்களில் நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணுவதன் அவசியம் குறிப்பிடப்படுகிறது.

நமது சமூக வாழ்வில் நாம் அன்றாடம் சந்தித்து வரும் வன்முறையின் அளவையும், கனபரிமாணங்களையும் பார்க்கும் போதும், பத்திரிக்கைகள் போன்ற செய்தித் தொடர்பு சாதனங்களும், வானொளியின் நேரடி ஒளிப்பரப்புகளும் தரும் சித்திரங்களையும் காணும் போதும் நம்மில் பலருக்கு இந்த அபாயம் உண்மைதானோ எனத் தோன்றுகிறது. பலவந்தமாய் நமது பார்வைக்குக் கொண்டுவரப்படும் இந்த பொருளற்ற வன்முறை சம்பவங்கள் - காட்சிகள் உடனடியாக அரசின் தலையீட்டை அவசியமாக்குகின்றன. சட்டபூர்வமற்ற நிறுவனங்களுக்கு வெளியே சமூக முரண்பாடுகள், மோதல்கள்,எந்த அளவுக்கு இப்படி நடக்கின்றனவோ அந்த அளவிற்கு தனது நடவடிக்கைகளுக்கான சமூக அங்கீகாரம் — ஒப்புதலை அரசு பெற்றுக் கொள்கிறது. சொல்லப் போனால், இந்தியக் குடியரசின் மதச் சார்பின்மை, ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயம் அதன் முற்றுமுழு அதிகாரத்துக்கு ஏற்பட்டுவிடவில்லை.

1950களின் ஆரம்பத்தில் அதாவது முதலாவது நாடாளுமன்றத்தின் கீழ் நாகாலாந்து மற்றும் மிஜோரம் ஆகிய இரண்டு பகுதிகள் மட்டுமே 'கலவரப் பகுதி'களாக அறிவிக்கப்பட்டிருந்தன. எட்டாவது நாடாளுமன்ற ஆட்சிக் காலத்தில் முழுமையாகவோ, பகுதி பகுதியாகவோ பத்து மாநிலங்கள் கலவரப் பகுதிகள். இந்தப் பகுதிகளில் இரண்டரைக் கோடி மக்கள் வாழ்கின்றனர்.

1950களின் ஆரம்பத்தில் வடகிழக்குப் பிராந்தியத்துக்கு வெளியே நடந்த குடிமக்களுக்கிடையிலான சண்டை - சச்சரவுகளில் இராணுவம் அரிதாகவே தலையிட்டது. 1970 - 85 ஆகிய பதினைந்தாண்டு கால கட்டத்தில் 35 குடிமக்கள் சண்டை - சச்சரவுகளில் இராணுவமோ, துணை இராணுவமோ தலையிட்டது. 1985 - 89 ஆகிய ஐந்தாண்டுகளில் அவை 68 சம்பவங்களில் தலையீடு செய்தன. மொத்தமுள்ள 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 22-இல் அவை தலையீடு செய்தன. முடிவற்றதாகத் தோன்றும் இலங்கைப் போரில் தலையீடு செய்தது இந்தக் கணக்கில் வரவில்லை. இவற்றோடு மாநில அரசாங்கங்களின் கீழுள்ள ஆயுதப் படையினர் ஏராளமான தலையீடுகள் செய்துள்ளனர்.

இம்மாதிரியான தலையீடுகளுக்கு இணையாகவே ஓசையின்றி, பரபரப்பின்றி, இலைமறைவு காய் மறைவாக பல மாற்றங்களும் வந்திருக்கின்றன. புதிய சட்டங்கள், அடுக்கடுக்கான புதிய வழக்குமன்றங்கள், புதிய வழிமுறைகள் - நெறிமுறைகள், போலீசுக்கு புதிய சாதனங்கள் - ஆயுதங்கள், மக்களது வாழ்விற்கும் சுதந்திரத்திற்கும் புதிய கட்டுப்பாடுகள் வந்தன; சுருங்கச் சொன்னால் ஜனநாயகத்துக்கு ஒரு புதிய கட்டமைப்பே வந்துவிட்டது. இந்தப் புதுக் கட்டமைப்பின் பயமுறுத்தும் அம்சம் என்னவென்றால் அதன் ஏராளமான அதிகாரங்கள் மட்டுமல்ல, இந்தக் கட்டமைப்பே எவ்வளவு கலபமாக கொண்டுவரப்பட்டது என்பதுதான். பின்வரும் விவரங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

**பயங்கரவாத சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஆந்திரா | 2143 |
| 2. | அருணாசலப்பிரதேசம் | 24 |
| 3. | அசாம் | 1270 |
| 4. | பீகார் | விவரமில்லை |
| 5. | சண்டிகார் (யூ.பி) | 400 |
| 6. | டெல்லி (யூ.பி) | 160 |
| 7. | குஜராத் | 4491 |
| 8. | அரியானா | 275 |
| 9. | இமாசலப்பிரதேசம் | 19 |
| 10. | ஜம்மு-காஷ்மீர் | 559 |
| 11. | கர்நாடகா | 10 |
| 12. | மத்தியபிரதேசம் | 110 |
| 13. | மராட்டியம் | 379 |
| 14. | மணிப்பூர் | 654 |
| 15. | மேகாலாயா | விவரமில்லை |
| 16. | மிஜோரம் | விவரமில்லை |
| 17. | நாகாலாந்து | விவரமில்லை |
| 18. | பஞ்சாப் | 7969 |
| 19. | ராஜஸ்தான் | 59 |
| 20. | திரிபுரா | விவரமில்லை |
| 21. | உத்திரப்பிரதேசம் | 130 |
| 22. | மேற்குவங்கம் | 524 |
| | ஆகமொத்தம் | 19286 |

(1989 நவ ஆதாரம்: நாடாளுமன்ற அதிகார பூர்வ அறிக்கைகள்)



'அரசுக்கு எதிராகப் போராடுபவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள்!'

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 59-வது திருத்தம் பஞ்சாபில் அவசர நிலை ஆட்சியைப் பிரகடனப் படுத்துவதற்கான அதிகாரத்தை அரசாங்கத்துக்கு வழங்குகிறது. இது 1988-இல் நிறைவேற்றப்பட்டது. இதை எதிர்த்து எதிர்க்கட்சிகள், மாநிலங்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பலம் பெற்றிருந்தன. ஆனால் இந்த 59-வது திருத்தம் மாநிலங்களவையில் வோட்டெடுப்புக்கு வந்த முக்கியமான சமயத்தில் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் இல்லாமற் போகவே அது மிகவும் எளிதாக நிறைவேறியது.

இதே மாதிரியான இந்தியத் தபால் அலுவலகச் சட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தத்தை பல கட்சிகளும் எதிர்த்தன; நாடாளுமன்றத்தில் அது நிறைவேறியதைத் தொடர்ந்து அரசுத் தலைவர் கியானி ஜெயில் சிங் ஒப்புதல் தர மறுத்தபோது பிரபலமானது. ஆனால் அது நாடாளுமன்றத்தில் நிறைவேறியபோது 542 உறுப்பினர்களில் 20 பேர் மட்டுமே அவையில் இருந்தனர்; விவாதம் முழுவதுமே 40 நிமிடங்களுக்கும் குறைவாகத்தான் நடந்தது.

1985 ஆகஸ்டில் அத்தியாவசிய சேவைத் துறைச் சட்டம் (1980) மேலும் ஒரு ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. பல பத்து லட்சம் உழைக்கும் ஆண்களையும் பெண்களையும் பாதிக்கும் இச்சட்டம் மீதான விவாதம் இரண்டு நாட்களில் மூன்று மணிநேரம் ஒதுக்கப்பட்டு நடந்தது. பதிமூன்றே உறுப்பினர்கள்தான் விவாதத்தில் பங்கேற்றனர். விவாதத்தின் இறுதிப் பகுதி உணவு இடைவேளை நேரத்தில் நடந்தது. அப்போது அமல் தத்தா( டைமண்ட் ஹார்பர் தொகுதி சி.பி.எம். உறுப்பினர்) எழுந்தார். ''ஐயா, அவையில் கோரம் இல்லை என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்'' என்று அவை நடப்பதற்கு தேவையான குறைந்தபட்சம் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர் எண்ணிக்கைப் பிரச்சினையை எழுப்பினார். ''உணவு இடைவேளையின் போது கோரம் பிரச்சனையை எழுப்பாமலிருப்பதுதான் அவையின் மரபு'' என்று அதற்குப் பதிலளித்தார் உள்துறை அமைச்சர் திரு. சவாண். பிறகு சபாநாயகர் கோரத்துக்கான மணி அடித்தார். சில உறுப்பினர்கள் உள்ளே வந்தார்கள். சட்டம் நிறைவேறிய போது 147 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர்; அதிலேயும் 17 பேர்கள் தான் எதிர்கட்சியினர்.

பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் (சிறப்பு வழக்கு மன்றங்கள்) சட்டத்துக்கு 1985 ஆகஸ்டில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. 50 பேர்கள் மட்டுமே இருந்த அந்த அவையின் 59 நிமிட விவாதத்தில் நான்கே பேர்கள்தான் பங்கேற்றனர். ஆலோசனைக் குழுவின் ஒப்புதலின்றி சில வழக்குகளில் ஒருவரை ஆறு மாதங்கள் வரை சிறையிலடைக்கும் அதிகாரத்தை அந்தத் திருத்தம் அரசாங்கத்துக்கு வழங்குகிறது. அது சில வழக்குகளில் தடுப்புக் காவலில் வைக்கும் காலத்தை அதிக பட்சம் இரண்டு ஆண்டுகளுக்குகூட நீட்டிக்கும் அதிகாரத்தையும் தருகிறது. அதற்காக மக்களவையில் நடந்த 82 நிமிட விவாதத்தில் எட்டே உறுப்பினர்கள்தான் பங்கேற்றனர். மொத்தம் அவையில் இருந்தவர்களே நூறு பேர்கள் தான்.

1988 மே மாதத்தில், மத்திய அரசாங்கத்துக்கு ஒரு புதிய ஆயுதப் படை பிரிவு அமைக்கப்பட்டது; 'இந்திய பிரதமருக்கு நெருக்கமான பாதுகாப்பு' தருவதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு பாதுகாப்புப் படைக் குழு (எஸ்.பி.ஜி). அச்சட்டத்தை விவாதித்து நிறைவேற்றுவதற்கு மக்களவை எடுத்துக் கொண்ட நேரம் 19 நிமிடங்களே. (மேற்கண்ட எல்லா விவரங்களும் மக்களவை விவாதங்கள் தொகுப்பு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை)

இவ்வாறு அவசரத்தோடும் அலட்சியத்தோடும் அசிரத்தையோடும் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் எல்லாம் மக்களுக்கு எதிராகக் கொடூரமாகவும் பலாத்காரமாகவும் அமுலாக்கப்பட்டு இருக்கின்றன. எட்டாவது நாடாளுமன்றம் நிறைவேற்றிய இப்படிப்பட்ட எல்லாச் சட்டங்களிலும் அலாதியாக, தூக்கலாக நிற்பது பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் -(TADA). அரசியல் நிர்ணயச் சட்டம் உத்திரவாதமளிக்கும் ஒவ்வொரு பாதுகாப்பு, சோதித்துச் சரிகட்டுவதற்காக அது

*பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் பொய்யாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மட்டுமில்லை; பத்திரிகையாளர்கள், குடியுரிமை இயக்கத்தவர்கள், கல்வியாளர்கள், மலைவாழ் -ஆதிவாசிகள், தொழிலாளர்கள், விவசாயிகளும் கூட இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.*



படிப்பகம்

www.padippakam.com

உருவாக்கியிருக்கும் ஒவ்வொரு அமைப்பு செயல்முறை, தாராளவாத நீதியியலின் ஒவ்வொரு நெறிமுறை, இயற்கையான நீதியியலின் ஒவ்வொரு லட்சியம், நமது மக்கள் பல்லாண்டு காலமாகப் போராடிப் பெற்ற ஒவ்வொரு ஜனநாயக உரிமை — ஆகிய எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு விடுவதில் சம்பந்தப்பட்டவர்கள் இடையே ஏற்பட்ட கூட்டணி, பல்வேறு அரசியல் கட்சிகளும் மேற்கொண்ட நிலைப்பாடுகளும் அவர்கள் பச்சோந்திகளைப் போல மாற்றிக் கொண்டவைகளும் ஆகிய இவை அனைத்தும் எதிர்காலம் எப்படிப் பட்டதாயிருக்கும் என்பதைக் குறிக்கின்றன; இனிவருவது ''ரௌடி ராஜ்ஜிய''த்தின் ஆண்டுகளாகவே இருக்குமென்பதைக் குறிக்கின்றன. எல்லா கருப்புச் சட்டங்களைப் போலவே இதையும் பச்சைப் பொய்களைச் சொல்லித்தான் கொண்டு வந்தார்கள்.

1985 மே இரண்டாவது வாரம், டில்லி மற்றும் பிற இடங்களில் அடுத்தடுத்துச் சிறு வானொலிப் பெட்டிக் குண்டுகள் வெடித்தன. பொது இடங்களில் அப்பாவி மக்கள் பலர் மாண்டு போயினர். அதன் பிறகு ஓரிரு நாட்களிலேயே இந்தச் வெடிச்சம்பவங்களைக் காரணமாகக் காட்டி 1985 மே 17 ம் தேதி பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது. இந்த நாட்டில் அமுலுக்கு வந்த இச்சட்டம் மேலே குறிப்பிட்டவாறு முன்னெப்போதையும் விட அசாதாரணமானதாகும். ஆனால், 'பயங்கரவாத அபாயத்தை' எதிர்க்க வேண்டுமானால் போலீசுக்கும் அரசுக்கும் அசாதாரணமான சட்டங்கள் அவசியமாய் இருக்கின்றன என்கிற அரசின் வாதத்தை வழக்கமான சிலரைத் தவிர விதிவிலக்கின்றி மக்கள் பலரும் உடனே ஏற்றுக் கொள்ளும் வகையில் பயங்கரவாத வன்முறைச் சூழல் நிலவியது. உண்மையில் நாடாளுமன்றத்தில் அச்சட்டம் ஏறக்குறைய ஒருமனதாக நிறைவேறியது.

1985 மேயிலேயே, சிறு வானொலிப் பெட்டி வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரான கே.எஸ். நாராங், மெக்ந்தர்சிங் கல்சா, மொகிந்தர் பால்சிங், ஜகதீஷ்சிங் நரேலா ஆகியோர் டில்லி-கரோல்பாக் மற்றும் பட்டேல் நகர் போலீசு நிலையங்களில் கொல்லப்பட்டனர் என்பது இச்சட்ட நிறைவேற்ற நிகழ்ச்சிப் போக்கில் யாருமே கவனிக்கவில்லை. குற்றஞ்சாட்டப்பட்ட இன்னொருவரான தல்ஜித் சிங் பிறகு 1986 ஜனவரியில் சித்திரவதை செய்து கொல்லப் பட்டார்.

இச்சட்டத்தைக் கொண்டு வருவதற்குக் காரணமாக பஞ்சாப், அரியானா, உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், ஆகிய நான்கு மாநிலங்களிலும் சண்டிகார், டில்லி ஆகிய இரு யூனியன் பிரதேசங்களிலும் நடந்த பயங்கரவாதச் செயல்களையும்கூட அரசாங்கம் காட்டியது. ஆனால் இச் சட்டம் நாடு முழுவதற்கும் செல்லுபடியாகத் தக்கதாக இருக்கிறது. ஆனால் பஞ்சாப் பிரச்சினையினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாத தொலை தூரத்தில் உள்ள தென்னிந்தியாவிலும், வடகிழக்கிந்தியாவிலும் கூட இச்சட்டம் உடனே அமலுக்கு வந்து விட்டது. இச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட மொத்தப் பேரில் பெரும்பான்மையினர் (10,568 பேர்) அரசாங்கம் காரணங்காட்டிய மாநிலங்களைச் சாராதவர்கள் என்பதை அதற்குரிய பட்டியலில் இருந்தே காணமுடியும்.

''வரைமுறையற்ற படுகொலை, சொத்துக்களை கொள்ளையிடுவது, சூறையாடுவது மற்றும் பிற கொடிய கிரிமினல் குற்றங்களில் ஈடுபடும் பயங்கரவாதிகளை'' விசாரிப்பதும் தண்டிப்பதுவுமே பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் நோக்கம். ஆனால் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 19,286 பேரும் எத்தகையவர்கள்?

தங்கள் வாழ்க்கைக்காக போராடும் மத்திய வனப்பிராந்தியங்களைச் சேர்ந்த ஆதிவாசிகளும் கூட இதில் அடங்குவர். ஆந்திரா, மராட்டியம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுத்தடுத்துள்ள மலைவாழ், ஆதிவாசிகளும் ''பயங்கரவாதிகள்'' ஆனார்கள்! மொத்தம் ஆந்திராவின் அதிலாபாத்தில் 450 பேர், ம.பி.யில் பஸ்தாரில் 100 பேர், மராட்டியத்தின் கச்சிரோலியில் 100 பேர் இச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டனர். குஜராத்தில் அம்பாணியின் ரிலையன்சு குரூப்பினுடைய விமல் ஆலைகளில் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

மற்றொரு புறம் குடியுரிமைப் போராளிகளும் இச்சட்டத்திற்குப் பலியானார்கள். கர்நாடகா குடியுரிமை கமிட்டியைச் சேர்ந்த நகரி பாப்பையா, ஆந்திரா குடியுரிமையைக் கமிட்டியின் தலைவர் டாக்டர் கே. பாலகோபால் ஆகியோர் இச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டனர். பத்திரிக்கையாளர்களும் கல்வியாளர்களும் கூட இதன் கீழ் தடுப்புச் சிறையில் அடைக்கப் பட்டனர். ஆந்திராவில் சுர்ஜனா ஏட்டின் ஆசிரியரும் கவிஞருமான வரவரராவ் சிறையில் அடைக்கப்பட்டார். டெல்லியில் ஷாயித் சித்திகி (ஆசிரியர், நயாதுனியா), அல்ஹஜ்நாஜ் அன்சாரி (மாஷிக் இ ஆவாஜ் - ஆசிரியர்), காலித் அன்சாரி (மிட் டே, ஆசிரியர்), பெங்களூரில் வி.டி. ராஜசேகர் (ஆசிரியர், தலித் வாய்ஸ்), மணிப்பூரில் ஆரியபட்டா ஏட்டின் ஆசிரியரும் இணை ஆசிரியரும், சுக்தேவ் சிங் (ஆசிரியர், டிகினிட்டி) ஆகியோர் தடுப்புச் சிறையில் வைக்கப்பட்டோரில் அடங்குவர். பேராசிரியர் ஜக்மோகனும் தாலிப் சிங்கும் (பம்பாய் பல்கலைக்கழகம்) தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட கல்வியாளர்களில் பிரபலமானவர்கள்.

-தொடரும்

**1985 ஆகஸ்டில் அத்தியாவசிய சேவைத்துறைச் சட்டம் மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட போது, அவையில் 147 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். அதிலேயும் 17 பேர்தான் எதிர்க்கட்சியினர்!**

# 'ராசா'க்களின் வாழ்வும்! 'அடிமை'களின் அவலமும்!

காமராஜர் மாவட்டம் ராசபாளையம் நகரில் 'இராசாக்கள்' எனும் பணக்கார மேட்டுக்குடி கும்பலின் ஆதிக்கம்தான் உள்ளது. 'ஜெயராம் குரூப் மோட்டார் சர்வீஸ்' கம்பெனியின் முதலாளி 'பாப்பா' என்கிற ரெங்கராசாவும் (காங். கட்சிக்காரர்) இவர்களில் ஒருவர். 10 பஸ், லாரிகளோடு தனது தொழிலைத் தொடங்கியவர் தொழிலாளர்களின் உழைப்பை அடிமாட்டு விலைக்குச் சுரண்டி மூலதனத்தைப் பெருக்கினார்.

இன்று 70-க்கும் மேற்பட்ட பஸ், லாரி, வேன்களுக்குச் சொந்தக்காரராகவும், பல கார், பங்களா, தொழிற்சாலைகள், அச்சகங்கள், பெட்ரோல் பங்குகளுக்குச் சொந்தக்காரராகவும் வலம் வருகிறார்.

மறுபுறம், இவரது கம்பெனி தொழிலாளர்களின் வாழ்வோ சொல்லொணா துயரத்தில் சிக்கிக் கிடக்கிறது. ஜெயராம் மோட்டார் தொழிலாளர்கள் ஒருநாளைக்கு 8 மணி நேரமல்ல; 12 மணிநேரம் உழைக்கிறார்கள். 1500 ரூபாய்க்கு கையெழுத்துப் போடும் தொழிலாளி கையில் வாங்குவது 300, 400 ரூபாய்தான். வாகனம் விபத்துக்குள்ளானால் சேதத்திற்கு தொழிலாளிதான் பொறுப்பேற்று நஷ்டஈடு தரவேண்டும் என்றும் இது தொடர்பான வழக்குகளையும் தொழிலாளர்களே சந்திக்க வேண்டும் என்றும் தொழிலாளர்களின் குரல்வளையை நெறிக்கும் தனிச் சட்டங்களும் இக்கம்பெனிக்கு உண்டு.

ஏறத்தாழ 200 தொழிலாளர்கள் வேலை செய்யும் கம்பெனியில் 70 தொழிலாளர்கள் இன்று வீதிக்கு வீசப்பட்டுள்ளார்கள். ''ஜெயராம் குரூப் போக்குவரத்து தொழிலாளர் கழகம்'' தொடங்கினார்கள் என்பதாலேயே கம்பெனி இவர்களை பழி வாங்கியுள்ளது. 25 வருடகாலம் பணிபுரிந்த இத்தொழிலாளர்கள் இன்று குடும்பத்துடன் நடுவீதியில் பட்டினிப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பணியிழந்து 2 மாத காலங்களாக தொழிலாளர் நலத்துறை அதிகாரியிடமும், காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் முறையிட்டும் இதுவரை நடவடிக்கை யில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# முன்னுதாரணமிக்க ஒரு தோழர்!
# முன்னேற்றப் பாதையில் ஒரு கிராமம்!

விழுப்புரம் அருகே உள்ள அரசூரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது காரப்பட்டு கிராமம்; மற்ற கிராமங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக நிற்கிறது.

மற்ற கிராமங்களைப் போலவே சாதி பேதம் பார்ப்பது இங்கு முன்பு இருந்தது. ஆனால் இன்று சாதி-மத பேதம் பார்ப்பதை அவமானமாக கருதுவதோடு சாதி மத வெறியர்களை இனங்கண்டு புறக்கணிக்கிறார்கள் இக்கிராம மக்கள். சாதாரணமாக வாய்தவறி சாதி மத பேதம் பொருள்பட பேசிவிட்டால்கூட வெட்கப் படுகிறார்கள்.

திருமணம், காதணிவிழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு மட்டுமில்லாமல், சாதாரண நாட்களிலும் ஒருவரை ஒருவர் சாதி வித்தியாசமின்றி தங்கள் வீட்டிற்கு அழைப்பது; ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுவது, பரிமாறிக் கொள்வது இங்கு வழக்கமாகிவிட்டது.

தாழ்த்தப்பட்டவர்கள் தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்காலங்களில் மேல்சாதிக்காரர்களது வீட்டில் உணவு - பொருள் வேண்டி நிற்பதை எல்லாம் இங்கு பார்க்க முடியாது. அடுத்தவர் வீட்டு வாயிலில் நின்று யாசிப்பதை இழிவாகக் கருதும் நிலை வளர்ந்து வருகிறது.

பஞ்சம், வறுமை, வேலையின்மை, வன்முறை மற்றும் ஆபாசத்தை விதைக்கும் பத்திரிக்கை - திரைப்படங்கள் போன்றவற்றிற்கு மத்தியில்... சாராயம் காய்ச்சுவதோ, விற்பதோ, குடித்து வந்து வம்பு செய்வதோ சூதாடுவதோ, திருடுவதோ, வழிப்பறியோ, விபச்சாரமோ, பாலியல் வக்கிரங்களோ எதுவும் இக்கிராமத்தில் இல்லை.

காரப்பட்டில் நடக்கும் பஞ்சாயத்துகளில் ஆண்களுக்கு சமமாக பெண்களும் கலந்து கொள்கிறார்கள். பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என யார் சொன்னாலும் சரியான கருத்துக்களை கணக்கிலெடுத்துக் கொண்டு தீர்ப்பு வழங்குகிறார்கள். அரிதாக ஒன்றிரண்டு வழக்குகள் ஆதிக்க சக்திகளின் தூண்டுதலால் திசைமாறியோ தவறாகவோ நடந்தால் அவை பஞ்சாயத்தில் முறைப்படுத்தப் படுகிறது அல்லது திரும்பப் பெறப் படுகிறது.

இக்கிராம மக்கள் அரசு அதிகாரிகளையோ போலீசு நிலையத்தையோ நாடிச் செல்வது என்பது மிகவும் அரிது. நிலத்தை வாங்குவது; விற்பது,குத்தகை - வாரத்திற்கு விடுவது போன்றவற்றிற்குகூட பதிவு அலுவலகத்தையோ கோர்ட்டையோ அணுகுவதில்லை. வாய்மொழி மூலமாகவே கொடுக்கல் வாங்கல்களை வைத்துக் கொள்கிறார்கள். ஏதாவது பிரச்சினை வந்தால் பஞ்சாயத்திலோ தங்களுக்குள்ளாகவோ பேசி தீர்த்துக் கொள்கிறார்கள்.

அதே சமயம் அரசிடம் இருந்து பெற வேண்டிய உரிமைகளையும் விட்டுவிடுவதில்லை. போராடிப் பெறுகிறார்கள். உதாரணத்திற்கு,குடிநீர் பிரச்சனை பல ஆண்டுகளாக போக்கப்படாமல் இருந்தது. பல போராட்டங்கள் நடத்தியும் சட்டம், நிர்வாகம் , நிதி பிரச்சனைகளைக் காரணம் காட்டி அரசு புறக்கணித்தே வந்தது. எனவே, கிராம மக்களே முன்நின்று கிணற்றை ஆழப்படுத்தினர். ஊர் பொதுப் பணத்தில் நீர் மூழ்கி மோட்டார் போட்டனர். பின்பு இதற்கான செலவை அரசிடமிருந்து போராடி பெற்றுவிட்டனர்.

அதுசரி, எப்படி இக்கிராமம் இப்படி மாறியது? தராசு, நக்கீரன், ஜூனியர் விகடன் முதலான கிசுகிசுக்கும் பத்திரிக்கைகளில் வருவது போல் அல்லது அவை முன்னிறுத்துவது போல் ஒரு போலீசு அதிகாரியோ, கலெக்டரோ, டாக்டரோ, சமூக சேவகரோ செய்த சீர்திருத்தங்களினாலா?

இல்லவே இல்லை. வெற்று சீர்திருத்தங்களினால் அல்ல; தொடர்ச்சியான அரசியல் இயக்கத்தினால்! மக்கள் மீதும் பொதுவுடைமை தத்துவத்தின் மீதும் ஆழ்ந்த பற்று கொண்ட ஒரு தோழரின் முன்முயற்சியால் விளைந்ததே இது! ஆம்; ரெங்கநாதன் என்னும் முதுபெரும் தோழரே அவர்! 40 ஆண்டு காலமாக வர்க்கப் போராட்டத்திலே ஊன்றி நின்று போராடியவர் ரெங்கநாதன். சரியான அரசியல் பாதையில் தன்னை மட்டுமில்லாமல் தன் கிராம மக்களையும் இணைக்க பெரிதும் முயற்சியெடுத்தவர்.

1952ல் இந்திய பொதுவுடைமை கட்சியில் (சி.பி.ஐ.) சேர்ந்து காரப்பட்டில் விவசாயிகள் சங்கத்தை கட்டினார். திரிபுவாத பாதையில் - வர்க்க சமரச பாதையில் சி.பி.ஐ. சென்றதைக் கண்டு எதிர்த்து உட்கட்சி போராட்டத்தை நடத்திக் கொண்டே சரியான வர்க்க சமரசமற்ற நடைமுறையில் தம் பகுதியில் ஊன்றி செயல்பட்டார்.



தோழர் ரெங்கநாதன்

இதனாலேயே உள்ளூர் கம்பத்துக்காரர்கள் (பண்ணையார்கள்) போலீசு உதவியுடன் 50க்கும் மேற்பட்ட பொய் வழக்குகளை தன்மீதும் கிராம மக்கள் மீதும் போட்ட பொழுது அஞ்சாமல் உறுதியுடன் போராடினார். ஆதிக்க சக்திகள், மக்களில் சிலரை கருங்காலிகளாக்கி பயன்படுத்திக் கொண்டிருக்கையில் கருங்காலிகளானவர்களை முறையோடு அணுகி பலரை மக்கள் பக்கம் கொண்டு வந்தார்.

இந்திய கம்யூனிச இயக்கத்தின் சரியான வளர்ச்சிப் போக்கில் தம்மை நெருங்க பிணைத்துக் கொண்டார். 1964-ல் சி.பி.எம்.(மார்க்ஸிஸ்ட் கட்சி) தோன்றிய பொழுதும் 1969-ல் இந்திய பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்டு - லெனினிஸ்டு) தோன்றிய பொழுதும் தன்னை அதனுடன் இணைத்துக் கொண்ட அதே சமயம் 'மார்க்சிஸ்டு' கட்சியின் திரிபுவாதப் பாதையையும், மார்க்சிஸ்டு - லெனினிஸ்டு கட்சியின் ' அழித்தொழிப்பு கொள்கை' யையும் எதிர்த்து உட்கட்சிப் போராட்டம் நடத்தினார். உதாரணத்திற்கு, ஒரு தேர்தலின் போது உள்ளூர் நிலப்பிரபுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை ஆதரித்துவந்த 'மார்க்சிஸ்டு' கட்சிக்காரர்கள் அந்நிலப் பிரபுவிடமே தேர்தல் நிதியும், பிரச்சாரத்திற்கு காரும் பெற்றனர். அப்பொழுது இது விஷயமாக கட்சியில் போராடியதோடு மக்கள் மத்தியிலும் கட்சியின் நடவடிக்கையை அம்பலப்படுத்தினார்.

இறுதியாக, சரியான மக்கள் திரள் பாதையில் வர்க்க சமரசம் இன்றி புரட்சிக்கு மக்களை திரட்டிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணியில் 1983-ல் தம்மை இணைத்துக் கொண்டு இன்று வரை செயல்பட்டு வருகிறார்.

ஆமாம்; ரெங்கநாதன் தனிமனிதராகவோ தலைவராகவோ தனித்து நிற்கவில்லை; கிராம மக்களோடு மக்களாக கலந்து நிற்கிறார். இதுவரை - 40 ஆண்டுகளாக சாதியத்திற்கு எதிராக போராடிவரும் தி.க. போன்ற கட்சிகளும் பல சிறிய அமைப்புகளும் சாதிக்காத நடைமுறை ஒன்றை வி.வி.மு., காரப்பட்டில் சாதித்துக் காட்டியுள்ளது. ஏன், தோழர் ரெங்கநாதன் கூறுவதையே கேளுங்களேன்.

''ஆஸ்துமா மற்றும் சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டு சாவை எதிர்நோக்கியிருக்கிற இந்நிலையில் நான் பெருமைப்படுகிற விஷயம் ஒன்றுதான். வர்க்கப் போராட்டத்திற்கு மக்களை வழிநடத்தக்கூடிய சரியான அமைப்பான வி.வி.மு.வில் நானும் எனது பகுதி மக்களும் தம்மை இணைத்துக் கொண்டதே அது! இல்லையெனில் பல ஆண்டுகளாக நாங்கள் காத்துவந்த மக்கள் ஜனநாயக நடைமுறையை, சாதி பேதமற்ற மக்கள் ஒற்றுமையை, சமூக விரோத செயல்களற்ற முறையான வாழ்வை இக்கிராமம் தக்க வைத்திருக்கவே முடியாது''

இது வெறும் புகழ்ச்சியில்லை. உண்மை! அனுபவ உண்மை!

- தகவல்: வி.வி.மு.,
திருவெண்ணெய்நல்லூர் வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com




● **நாடுகள் சிறிது சிறிதாகப் பிரிந்திருப்பதால்தான் அனாவசியப் பாதுகாப்புச் செலவுகள், போர்கள் நடக்கின்றன. இந்நிலையில் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று நீங்கள் வாதிடுவது ஏன்?**

**— வசந்தன், பண்ருட்டி,**

★ நாடுகள் - தேசங்கள் சிறிது சிறிதாகப் பிரிந்திருக்க வேண்டும் என்பது நமது பொதுவான விருப்பமோ, நோக்கமோ கோரிக்கையோ இல்லை. அப்படிப் பிரிந்திருப்பதால் பாதுகாப்புச் செலவுகள், போர்கள், அனாவசியமாக ஏற்படுவது மட்டுமல்ல; அவற்றின் அறிவியல் - தொழில் நுட்பம், பொருளாதாரம் போன்ற அவசியமான முன்னேற்றங்களும் பாதிக்கப்படுகின்றன. ஆனால், பல்வேறு நாடுகள் - தேசங்கள் இணைந்திருப்பதை சுதந்திரமான, ஜனநாயக பூர்வமான சுயவிருப்பத்தின் அடிப்படையில்தான் சாதிக்க வேண்டும். ஆனால், பெரும் தேசிய இனவெறியர்களும், விரிவாக்க வாதிகளும், எந்தவொரு நாட்டின் - தேசத்தின் மக்களது ஜனநாயகப்பூர்வமான விருப்பத்துக்கு விரோதமாக பலாத்காரமாக அடக்கி ஒடுக்கி இணைத்து வைத்திருக்கக் கூடாது என்கிறோம். வெவ்வேறு தேசிய இனங்கள் இணைந்து வாழும் ஒரு நாட்டில் இருந்து பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை என்பது அவற்றுக்கிடையிலான ஜனநாயக உறவை உத்திரவாதப் படுத்தும் உரிமையாகும். அதாவது தான் ஒடுக்கப்படுவதாக உணரும்போது எந்த ஒரு தேசிய இனமும் பிரிந்து போகும் உரிமையைப்பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் அது இணைந்து வாழ முடியும். எந்த ஒரு தேசிய இனம் பிரிந்து போகும் உரிமையைப் பயன்படுத்தி விடக்கூடும் என்கிற எச்சரிக்கையின் காரணமாக அதன்மீது ஒடுக்குமுறையைப் பிரயோகிக்காது ஜனநாயகப்பூர்வமாக நடந்து கொள்ளுபடி பெரிய தேசிய இனங்களை நிர்ப்பந்திப்பதாகவும் அவ்வுரிமை விளங்கும். ஆகவேதான், தேசிய இனங்கள் - நாடுகளது ஒற்றுமைக்காக நிற்கும் நாம் அவற்றிற்கு பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமை வேண்டும் என்கிறோம்.

● ***முஸ்லீம்களின் பள்ளிவாசல், கிறிஸ்தவர்களின் தேவாலயம் போன்றவற்றில் கைவைக்காத இந்திய அரசு, இந்துக்களின் கோவில்களில் இருந்து வரும் பணத்தை மட்டும் கைவைப்பது ஏன்? இந்தச் செயல் எந்த வகையில் நியாயமானது? இந்த அநீதியை எதிர்த்துத்தானே ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி, ஆலய மீட்புக் கமிட்டி போன்ற மதப்பற்றுள்ள அமைப்புகள் போராடுகிறார்கள். தட்டிக் கேட்கிறார்கள். இது நியாயம்தானே? குறிப்பாக முஸ்லிம், கிறிஸ்துவர்களுக்கெல்லாம் மதத்தை வளர்க்க, மதத்தைப் பிரச்சாரம் பண்ண வெளிநாடுகளில் இருந்தும், தனிநபர்களாலும் கோடிக்கணக்கில் பணம் வருகிறது. ஆனால், இந்துக்களுக்கு எங்கிருந்து பணம் வருகிறது? முஸ்லீம், கிறிஸ்துவ மதமாவது பல தேசங்கள், பல கண்டங்கள் என்று பரவிக்கிடக்கும் போது இந்து முன்னணியின் அகண்ட பாரதம் ஒரு வழியில் பார்த்தால் நியாயமானது தானே? அவசியம்தானே? ஒவ்வொரு சாதாரண இந்துக் குடிமகனின் பிரதிபலிப்புத்தானே ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி, விஸ்வ இந்து பரிசத், பஜ்ராங்தள்... போன்றவைகளின் கிளர்ச்சி? ஒப்பீடு சரியாக இருந்தால் நீங்கள் ஆதரிக்க வேண்டியதுதானே? அல்லது பாதிக்கப்படும் இந்துக்களின் மன உணர்வைத் தாங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லையா?***

**— வேலாயுதசாமி, கம்பம்.**

> ''அரிசனங்களை'' அர்ச்சகராக்கக் கோரும் திராவிட இயக்கங்கள் கூட இந்த திராவிடப் பண்டாரங்கள் - திராவிடப் பார்ப்பனர்களின் இடத்திற்கு, தாழ்த்தப்பட்ட, சூத்திரசாதியினர் வருவதற்கான உரிமை குறித்து மூச்சு விடுவதில்லை.

★ முஸ்லீம், கிறித்துவ மதங்களைப் போல இந்து மதத்தவர்கள் அனைவருக்கும் மத - ஆன்மீக உரிமை கிடையாது. அதாவது சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பஞ்சமர்கள் ஆகிய பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களுக்கு பூசை செய்யவும், கோவிலுக்குள் நுழைந்து வழிபடவும், கோவில் சொத்துக்களை நிர்வகிக்கும் 'அறங்காவலர்' அதிகாரமும் - பதவியும் கிடையாது. கோவில்களையும் அதன் சொத்துக்களையும் உழைத்து உருவாக்கிய இந்த மக்களுக்கு இந்த மத உரிமை மட்டுமின்றி, ஏழு ஏழு பிறவிக்கும் 'ஜென்ம விமோச்சனமும்' கிடையாது: அதாவது கடவுளை அடையவும், வீடு பேரடையவும் பிறவியின் காரணமாக அவர்களுக்கு கிடையாது. ஆனால், சில மேல்சாதிக்காரர்களுக்கு, அவர்கள் எவ்வளவு 'பாவம்' செய்தாலும் இந்த உரிமைகள் உண்டு. இப்படிப்பட்ட மத - சமூக அமைப்பைக் கொண்டுள்ள இந்து மதத்தில் கோவில்களையும், அவற்றின் சொத்துக்களையும் இந்துமத குருமார்களிடமும், 'அறங்காவலர்' - புரவலர்களிடமும் விட்டு வைக்க கோருவது எந்த வகையில் நியாயம்? அப்படிச் செய்வது பொதுச் சொத்தான கோவில்களில் இருந்து வரும் பணம் சில மேல்சாதிக்காரர்களான அவர்களுக்கு மட்டுமே பயன்படுவதாகாதா?

''கடவுளின் முன்பு அனைவரும் சமம், இந்து மதத்தில் வருண - சாதி வேறுபாடுகள் கிடையாது'' என்று நைச்சியமாகப் பேசியும், மத - நியாயவுரிமை கோரியும் வரும் ஆர்.எஸ்.எஸ், இந்துமுன்னணி போன்ற இந்து மத அமைப்பினர் இந்து மதத்தவர் அனைவருக்கும் மத - ஆன்மீக உரிமை அளிக்கவும் சமமாகப் பாவிக்கவும் தயாரா? அதாவது 'அரி'சனங்களை அர்ச்சகராக்கவும் ஆலயப் பிரவேசங்கள் நடத்தவும் ஒப்புக் கொள்வதில்லையே ஏன்? சீக்கிய மதத்தில் இருப்பதைப்போல, இந்துமதக் கோவில்களையும், சொத்துக்களையும் நிர்வகிப்பதற்கான ஒரு பொது அமைப்பைத் தேர்ந்தெடுக்கவும், பங்கேற்கவும் இந்து மதத்தவர் அனைவருக்கும் உரிமையளிக்கத் தயாரா? அதாவது 'அரி'சனங்களை அறங்காவலர்களாகவும், சங்கராச்சாரிகளாகவும் நியமிப்பதில்லையே ஏன்?

இப்போதும் குறிப்பிட்ட அளவு சொத்து மதிப்புடைய - வருமானமுடைய கோவில்களை அரசு - அறநிலையத்துறை ஏற்றுக் கொண்டாலும், சில மேல்சாதிகளின் ஆதிக்கம் - உரிமை மட்டும்தான் அங்கும் உள்ளது. இன்னமும் பரம்பரை ''அறங்காவலர்கள்'' உரிமையும், 'அறங்காவர்' குழுத் தலைமைப் பதவியும் மேல் சாதிகளுக்கும், அர்ச்சகர் பதவி உரிமை பார்பனர்களுக்கும்தான் இருக்கிறது. அரசு - அறநிலையத் துறையினால் நியமிக்கப்படும் அதிகாரிகளும் ஊழியர்களும் கூட மேல்சாதிக்காரர்களாகப் பார்த்து கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். சங்கர, ஜீயர் மடங்களில் பார்ப்பனர்கள்தான் மடாதிபதிகளாக உள்ளதைப்போலவே திருவாடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், குன்றக்குடி, மதுரை ஆகிய மடங்கள், ஆதீனங்களுக்கும் சைவ வேளாள சாதிக்காரர்கள்தான் மடாதிபதிகளாகவும் ஆதீன கர்த்தாக்களாகவும் நியமிக்கப்படுகின்றனர். ''அரிசனங்களை'' அர்ச்சகராக்கக் கோரும் திராவிட இயக்கங்கள் கூட இந்த திராவிடப் பண்டாரங்கள் - திராவிடப் பார்ப்பனர்களின் இடத்திற்கு தாழ்த்தப்பட்ட, சூத்திர சாதியினர் வருவதற்கான உரிமை குறித்து மூச்சு விடுவதில்லை. இவர்களும் வருண - சாதிக் கண்ணோட்டத்தில் இருந்து மாறுபடவில்லை என்றே கருதுகிறோம்.

ஆகவே, இது மத - நியாயவுரிமை விவகாரம் மட்டுமல்ல. இந்து மதக் கோவில்கள், சொத்துக்களை நிர்வகிப்பதற்கு திராவிட இயக்கத்தவர்களும் இப்போது வந்து விடுகிறார்கள்; அதற்குப் பதிலாக பார்ப்பனர்களின் ஏகபோகமாக அவற்றை மாற்றிவிட வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி, ஆலயப் பாது



படிப்பகம்

www.padippakam.com

காப்புக் கமிட்டி போன்றவற்றின் நோக்கமாகும். தமிழ் நாடு போன்ற ஒரு சில மாநிலங்கள் தவிர பெரும்பாலான இடங்களில் குறிப்பாக வடக்கே இந்துக் கோவில்கள் தனியார் சொத்துக்களாகவே உள்ளன. அம்மாதிரி இங்கேயும் மாற்றிவிடுவதே அவர்களின் நோக்கமாகும்.

முஸ்லீம், கிறிஸ்துவ மதங்களைப் போலவே மேலை நாடுகளிலும், இங்கேயும் வாழும் பல பெரும் முதலாளிகளும், பெரும் நிலப்பிரபுக்களும் இந்து மதத்தை வளர்க்கவும், பிரச்சாரம் செய்யவும் ஏராளமாக நிதியளிக்கின்றனர். அயோத்தி விவகாரத்துக்கு மட்டும் விசுவ இந்து பரிக்சத் 300 கோடி ரூபாய் திரட்டியது தெரியாதா? இந்துக்கள் மற்றும் இந்நாட்டவர்கள் மட்டுமல்ல; அமெரிக்கா, பிரான்சு, பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடுகள் நேரடியாகவும், சமூக சேவை நிறுவனங்கள் மூலம் மறைமுகமாகவும் இந்துமத அமைப்புகளுக்கு நிதியளிக்கின்றன.

முஸ்லீம், கிறித்துவ, புத்த மதங்களைப்போல, இந்து மதத்தவர்களில் அனைவருக்கும் மத - ஆன்மீக உரிமையும், பொதுவான நெறிமுறைகளும், மதச் சமத்துவமும் கொண்டிருக்குமானால்தான் இந்துமதம் பல தேசங்கள், பல கண்டங்களுக்குப் பரவியிருக்க முடியும். ஆனால், தனது ''சொந்த'' மதத்தவர்களிலேயே பெரும்பான்மையினருக்கு இந்த உரிமைகளை மறுத்து மத - சமூகரீதியில் அடக்கி ஒடுக்கும் மதம் எவ்வாறு பரவ முடியும். அன்பையும் - கருணையையும் போதித்து, மத - சமூக சமத்துவத்துக்காகப் போராடி, ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டி பல தேசங்கள், பல கண்டங்களுக்குப் பரவுவதற்கு இந்து மதம் முயலுமானால், அது ஒரு வகையில் நியாயமானதாக இருக்கும். ஏனெனில், அது மத நம்பிக்கையை, ஆளுமையை ஜனநாயக பூர்வமாகப் பரப்பும் முயற்சி. ஆனால், ஆர்.ஆர்.எஸ். காங்கிரசு, இந்துமுன்னணி, பாரதீய ஜனதா ஆகியவற்றின் அகண்டபாரதம் மதவெறி, ஆக்கிரமிப்பு, விரிவாக்கம் ஆகிய சூலாயுதம் கொண்டு சாதிக்க முயலுவதாகும். இது எந்த வகையிலும் நியாயமாகாது.

சாதாரண இந்துக் குடி மக்களின் மத உரிமைகளையும், மன உணர்வுகளையும் ஒருபோதும் இந்துமதம் மதித்தது கிடையாது; ஆகவே ஆர்.எஸ்.எஸ். இந்து முன்னணி, விசுவ இந்து பரிக்சத் போன்ற இந்துமதவெறி அமைப்புகளின் கிளர்ச்சி அவனது பிரதிபலிப்பாக இருக்க முடியாது. பார்ப்பன மற்றும் பிற மேல்சாதிகளின் மதவெறியர்களின் பிரதிபலிப்புத்தான் அவை. இல்லை என்றால், சாதாரண இந்துக்குடிமகன் ஏன் மதமாற முடிவு செய்கிறான்? அவனை மீட்டுக் கொண்டுபோக இந்துக்குடிமகன் ஏன் துரத்துகிறான்?

''பாதிக்கப்படும் இந்துக்களின் மன உணர்வு'' என்பதே செயற்கையாக உருவாக்கித் துண்டி விடப்படுவதுதான். ஏற்கனவே இங்கு ஆயுதப் பூசை முதல் ஆலைகள் பெயர்வைப்பு - திறப்பு வரை எல்லாவற்றையும் ஆச்சாரம் - சடங்கு தவறாமலும் இந்து, இந்தி, இந்துஸ்தான் என்கிற அடிப்படையிலும் தானே அரசே நடத்துகிறது! ஏகாதிபத்தியம், தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் கொள்ளையினால்தான் வறுமையும் வேலையின்மையும் பெருகி வருகிறது. ஆனால், இதெல்லாம் முஸ்லீம், கிறித்துவ, சீக்கிய மதச்சிறுபான்மையினரால்தான் ஏற்படுகின்றனதென்றும், பாதிக்கப்படுபவர் இந்துக்கள்தான் என்றும் தவறாக திசை திருப்புகின்றன, இந்து மதவெறி அமைப்புகள். இதற்கு ஒருபெரும் கூட்டம் திரண்டு வருகிறது என்பதற்காக ஆதரிக்க முடியுமா?

மதம் ஒரு தனிநபர் விவகாரம், அரசுக்கும் அதற்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கக்கூடாது என்பதுதான் நமது பொதுவான கோட்பாடு. ஆனால் இந்து மதம் தனிநபர் விவகாரமாக இல்லாமல் சமூக ஒடுக்குமுறைக் கருவியாக இருக்கும்வரை இக்கோட்பாட்டைப் பிரயோகிக்க முடியாது. இந்துமத சமூக ஒடுக்குமுறை நீடிக்கும்வரை அதற்கு எதிரான அரசியல் தலையீடும் போராட்டமும் அவசியமெனக் கருதுகிறோம். அதேபோல இந்துமத சமூக ஒடுக்குமுறையின் பிரதிபலிப்பாக, பாதிப்பாக இசுலாமிய ஜமாத் என்கிற மத பஞ்சாயத்தும், கிறிஸ்துவ மதத்திலும் சாதிய சமூக ஒடுக்குமுறையும் இருக்கின்றன. அவற்றையும் எதிர்த்துப் போராட வேண்டுமெனக் கருதுகிறோம். ஆனால் அவை அம்மதங்களின் பொது அடிப்படை அம்சங்களாக இல்லை.

● *தொடர்ந்து வந்த புதிய ஜனநாயகம் இதழ்களில் இருந்தும் மற்ற பல பத்திரிக்கைகளைப் படித்தில் இருந்தும் அல்பேனியா தன்னுடைய சொந்தக் கட்சியான அல்பேனியத் தொழிலாளர் கட்சியின் மூலம் புரட்சியை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றியது. இன்று உலகில் ஏகாதிபத்தியங்களை எதிர்த்து எந்த விதத்திலும் நாட்டிற்கு தீங்கு நேராமலும் தன் சுயாதிபத்தியத்தைக் காத்துக் கொண்டிருக்கிறது. மார்க்சிய - லெனினியத்துக்கு விசுவாசமாக இருக்கிறது. டிட்டோ, டிராட்ஸ்கி, குருச்சேவ் ஆகியோருக்கு எதிராக தீவிரமாகப் போராடியது அல்பேனியத் தொழிலாளர் கட்சி. இப்படிப்பட்ட நிலையில் உங்கள் அமைப்பு அல்பேனியா பற்றியும் அல்பேனியத் தொழிலாளர் கட்சி பற்றியும் மற்றும் அதனுடன் தொடர்பு கொண்டுள்ள சர்வதேசிய மார்க்சிய - லெனினியக் கட்சிகள் பற்றியும் உங்கள் நிலைப்பாடு என்ன?*

(நீண்டகாலத்துக்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வி)

*— சுகாஜீ, கிண்டி.*

★ இரண்டாம் உலகப் போரின்போது நாஜி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகத் தொடுத்த தேச பக்தப் போரில் வென்று சோசலிச அல்பேனியாவை அல்பேனியத் தொழிலாளர் கட்சி நிறுவியது. டிட்டோ, குருச்சேவ் மற்றும் டிராட்ஸ்கியவாதிகளுக்கு எதிராக மார்க்சிய - லெனினியத்தையும், சர்வதேசப் புரட்சிக்கும், ருசிய சோசலிசம் நிர்மாணத்திற்கும் ஸ்டாலினது பங்களிப்புகளையும் காப்பதற்காக சமரசமின்றிப் போராடியது. இந்த வகையில் அல்பேனியாவையும், அதன் தொழிலாளர் கட்சியையும் சரியானதென ஏற்கிறோம்.

ஆனால், சோசலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பதில் ஸ்டாலின் சில தவறுகளைச் செய்துள்ளார். ருசிய, சீன அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்ட மாசேதுங் சோசலிச நிர்மாணத்தின் பல பிரச்சினைகளை ஆக்கப் பூர்வமாகத் தீர்த்தார். பாட்டாளி வர்க்க சோசலிச சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது என்கிற புதிய சிந்தனையை மாவோ முன்வைத்தார். அதாவது, பல பண்பாட்டுப் புரட்சிகள் மூலம் அடுத்தடுத்து அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு மாற்றங்கள் செய்து படிப்படியாக சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவதற்கான வழிகாட்டுதல்கள், சித்தாந்தத்தை உருவாக்கினார். அவ்வாறு செய்யவில்லையானால், சோசலிச சமுதாயத்திலும் புதிய முதலாளிகளாக கட்சிக்குள் ஒளிந்து கொண்டு அதிகாரவர்க்க முதலாளிகள் தோன்றி ஒரு வர்க்கமாக அமைந்து முதலாளித்துவத்தை மீட்டு விடுவார்கள் என்றார் மாவோ. இப்படி வந்தவர்கள்தான் குருச்சேவ் - பிரஷ்நேவ் கும்பல். மாவோவின் மேற்கண்ட போதனையை ஏற்க மறுத்த அல்பேனியாவும் அதன் ஆளும் கட்சியும் சோசலிசம் என்பது பாட்டாளி மக்கள் அனைவரது ஆக்கபூர்வமான பங்கேற்புடன் கூடிய சர்வாதிகாரம் என்பதற்குப் பதில் ஒரு சிறு ''இடது'' சந்தர்ப்பவாதத் தலைமையின் சர்வாதிகாரமாக மாற்றிவிட்டன. இது இன்னொருவகை அதிகாரவர்க்க முதலாளித்துவம்தான்.

மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்துக்கு பல்வேறு துறைகளிலும் மகத்தான பங்களிப்பான மாவோ - சிந்தனையையும், இறுதியாக மாவோ முன்வைத்த மூன்றுலகக் கோட்பாட்டையும் கூட அல்பேனியாவும் அதன் ஆளும் கட்சியும் நிராகரித்து எதிர்த்தது; இதனால் சோசலிச நிர்மானத்திலும், சர்வதேச அரசியல் - வர்க்க சக்திகளின் புதிய அணி சேர்க்கைக்குப் பொருத்தமான சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியிலும் இடது சந்தர்ப்பவாதத் தவறுகள் இழைத்தது. மாவோ உயிரோடிருந்தவரை அவரையும் சோசலிச சீனத்தையும் ஏற்றிப்போற்றிய அல்பேனியாவும், அதன் ஆளும் கட்சியும் மாவோ இறந்தவுடன் திடீரென சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியாகவும், மாவோ ஒரு கம்யூனிசத் தலைவராகவும், சீனா ஒரு சோசலிச நாடாகவும் ஒருபோதும் இருந்ததே இல்லை என்று அவதூறு பொழிந்தன; சீனாவின் மக்கள் ஜனநாயகப் புரட்சியையே கொச்சைப்படுத்தின. அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பும் கூட பாட்டாளிவர்க்க சர்வதேசப் புரட்சிகரக் கடமைகள் அடிப்படையிலானவை அல்ல; 'இடது' சந்தர்ப்பவாத சித்தாந்த அடிப்படையிலான தனிமைவாதம்தான். இப்போது அதையே வலது திரிபுவாத தெங்சியாவோ பிங்கின் பாணியிலானதாக மாற்றியமைக்க அல்பேனியத் தலைமை முயலுகிறது. எனவேதான் சீனத்தைப் பின்பற்றிய முதலாளித்துவத்தை நிறுவுவதற்கான சீர்திருத்தங்களைக் கொண்டு வருகிறது. அல்பேனியாவும், அதன் ஆளும்கட்சியும் செய்துவரும் இத்தவறுகளை விமர்சன ரீதியில் அணுகாது, மாவோவுக்குப் பிறகு ஒரு மாற்றுத் தலைமை எண்டதற்காகத்தான் சில குழுக்கள் அதனுடன் தொடர்பு கொண்டு ஒரு ''சர்வதேசியம்'' அமைத்துள்ளன. மாவோ சிந்தனையை நிராகரிக்கும் இக்குழுக்கள் சர்வதேசப் புரட்சியின் குறிப்பாக, இந்தியா போன்ற ஒடுக்கப்படும் நாடுகளின் புரட்சியின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு தீர்வு காணவும் முடியாது. ●



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

கேராளாவிலுள்ள ஐயப்ப சாமி கோவிலுக்குள் 10லிருந்து 50 வயதுக்குட்பட்ட பெண்கள் நுழையக்கூடாதென நீண்ட காலமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது பெண்களின் வழிபாட்டு உரிமையை மறுக்கும் செயல் என்று காங்கிரசு கட்சியைச் சேர்ந்த சரஸ்வதி அம்மாள் என்பவர் உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.

இதற்கு ஆதரவாக பல மகளிர் அமைப்புக்களும் இந்து மட சன்னியாசினிகளும், எம்.எல்.ஏ.- எம்.பி. களும் திரண்டெழுந்துள்ளனர்.

அதிகார முறைகேடுகளின் மூலம் தனது கட்சிக்காரர்களை தேவஸ்தான கமிட்டிகளில் அமர்த்தி ஆதாயம் அடைந்த 'மார்க்சிஸ்ட்' கட்சி, இது மதவிவகாரம் என்று இப்போது நழுவிக் கொள்கிறது. ''மண்டல் - சமூக நீதி பற்றி பேசும் மார்க்சிஸ்டுகளே, மகளிர் உரிமையை மறுப்பு ஏன்?'' என்று இந்த அமைப்புகள் கேள்வி எழுப்புகின்றன. அம்பலப்பட்ட 'மார்க்சிஸ்டுகள்' தேர்தலில் இது முக்கிய விவகாரமாகிவிடுமோ என்று கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர்.

இடைக்கால அரசின் உள்துறை இணை அமைச்சராக உள்ள சுபோத்கான் சகாய் கடந்த மார்ச் இறுதியில் தொலைக்காட்சி தொடர்களில் நடிக்கும் துணை நடிகையான ரேகா என்பவரை திருப்பதியில் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஒரு வாரத்திலேயே அவரது மனைவி தேசிய திரைப்பட விருதுக் கமிட்டியின் நடுவர் குழுவில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இது பழைய கதை. இப்போது மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கும் (CRPF) எல்லைப் பாதுகாப்புப் படைக்கும் (BSF) ஆளெடுக்க வேண்டுமென அவசர உத்திரவு போட்டு, தனது ராஞ்சி தொகுதியில் வேலையில் சேர விண்ணப்பிப்பவர் களிடமிருந்து ஒரு நபருக்கு ரூ 15,000 வீதம் வசூல் வேட்டையிலும் இறங்கிவிட்டார்.

ராஜீவின் பினாமியான லலித்சூரி என்பவரது ஜோஸ்தானா ஹோல்டிங் என்ற நிறுவனத்துக்கு பெட்ரோலிய குழாய் பேரத்தில் சுமிடோமா என்ற ஜப்பானிய பன்னாட்டுக் கம்பெனி 6 கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்தது ராஜீவ் ஆட்சியில் வெளியான இந்த ஊழலையடுத்து புதிதாக ஆட்சிக்கு வந்த தேசிய முன்னணி அரசு, சுமிடோமா நிறுவனத்துக்குத் தடை விதித்து இந்தியாவில் பெட்ரோலியத் துறையில் அதன் செயல்பாட்டை முடக்கியது. சுமிடோமோவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இதர 5 ஜப்பானிய கம்பெனிகள் மீதும் இவ்வாறு தடை விதிக்கப்பட்டது. இப்போது அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக ஜப்பானிடம் இந்தியா அவசரகால கடனாக 500 கோடி ரூபாய் வாங்கியுள்ளது. அதற்கு முன் இக் கம்பெனிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டுமென ஜப்பான் விதித்த நிபந்தனையை இந்திய ஆட்சியாளர்கள் உடனே ஏற்றுக் கொண்டு காலில் விழுந்துள்ளனர்.

இலியாஸ் உசைன் என்ற பீகார் அமைச்சர், பாட்னாவிலுள்ள கார்மல் மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்தார். பள்ளியின் வளர்ச்சிக்காக ரூ 20,000 நன்கொடை தருவதாக மேடையில் அறிவித்த அவர், தனது பெட்டியைத் திறந்து கத்தை கத்தையாக நோட்டுக்களை எடுத்து பள்ளி நிர்வாகியிடம் கொடுத்து பெருமையடித்துக் கொண்டார். உடனே பெற்றோர் சங்கத்தினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ''உங்களது மாத வருமானம் அதிகபட்சம் ரூ.7000 தான். எங்கிருந்து உங்களுக்கு இவ்வளவு பணம் கிடைத்தது என்று கணக்கு காட்ட வேண்டும். இது கருப்புப் பணம்; வாங்க மாட்டோம்'' என்று மறுத்து விட்டனர். அம்பலப்பட்ட மந்திரி மன்னிப்பு கேட்டு கருப்புப் பண பெட்டியுடன் திரும்பிவிட்டார்.




தனது கட்சி ஊழியர்கள் சட்டத்தை மதித்து நடப்பவர்கள்; கட்டுப்பாடு மிக்கவர்கள் என்று பாரதீய ஜனதா பீற்றிக் கொள்கிறது. ஆனால் கடந்த ஏப்ரல் 4ந் தேதியன்று டெல்லியில் ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்டு திரும்பிய ராமபக்தர்கள் ரயிலில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்தனர். ரிசர்வ் செய்யப்பட்டிருந்த படுக்கை அடுக்குகளை ஆக்கிரமித்துக் கொண்டு பயணிகளை விரட்டியடித்தனர். இன்னும் சில ராமபக்தர்கள் கூட்ட நெரிசலை சாதகமாக்கிக் கொண்டு பிக்பாக்கெட் அடித்தனர். ராம பக்த வானர சேனைகளின் அட்டகாசத்தால் பல ரயில்கள் 12 மணிநேரம் தாமதப்பட்டன. கட்டுப்பாடு மிக்க கட்சியின் லட்சணம் இதுதான்.

பீகாரின் மாதேபுரா தொகுதியிலுள்ள கல்லூரி மாணவர்கள் இத் தேர்தலில் வேட்பாளர்களிடம் புதிய கோரிக்கை ஒன்றை வைத்துள்ளனர். கல்லூரி பொதுத் தேர்வில் காப்பியடித்து எழுத சட்ட பூர்வமாக உரிமையளிக்கும் கட்சிக்கே வாக்களிப்போம் என்று அவர்கள் நிபந்தனையும் விதித்துள்ளனர். காப்பியடிப்பது எங்கள் பிறப்புரிமை என்ற முழக்கத்துடன் ஊர்வலமும் நடத்தியுள்ளனர். ஓட்டுக்காக பீகாரின் லல்லு பிரசாத் யாதவ் அரசு அவர்களது கோரிக்கையை பரிசீலிப்பதாக கூறியுள்ளது.

அரியானாவிலுள்ள குருச்சேத்திர தொகுதி வாழ் மக்கள் வரப்போகும் தேர்தலில் வேட்பாளர்களைப் புதுமையான முறையில் வரவேற்கக் காத்திருக்கிறார்கள். வாக்குறுதிகளை அளித்துவிட்டு அதை நிறைவேற்றாத எம்.எல்.ஏ.; எம்.பி.க்களை வரவேற்க பழைய செருப்புக்களை மாலையாகக் கட்டி தயாராக வைத்துள்ளனர். 1987 தேர்தலின் போதும் இவ்வாறு பல வேட்பாளர்களுக்கு மாலை அணிவித்துள்ளனர். இதனால் பல வேட்பாளர்கள இத்தொகுதியிலுள்ள கிராம மக்களை சந்திக்கவே அஞ்சுகிறார்கள்.

கலைக்கப்பட்ட ஒன்பதாவது பாராளுமன்றத்தில் படித்தவர்கள் அதிகமாக எம்.பி.க்களாக இருந்துள்ளனர். அதிலும் இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சிப்பட்டம் பெற்ற உயர்கல்வியாளர்கள் 74% பேர். 1952-ல் இவர்களது விகிதம் 55% தான். அதே போல் உயர்நிலைப் பள்ளி வரை படிக்காத எம்.பிக்களின் விகிதம் 1952ல் 23% ஆக இருந்தது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அது 6.8% ஆக குறைந்து விட்டது. அதாவது கடந்த காலத்தை ஒப்பிட்டு பார்க்கும் போது இப்போது உயர்கல்வி கற்றவர்கள்தான் எம்.பி.க்களாக உள்ளனர். ஆனால் நாடாளுமன்ற ரௌடித்தனம் இதனால் குறைந்து விடவில்லை. முன்னைவிட அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த லட்சணத்தில் நாடாளுமன்ற புனிதத்தைக் காக்க படித்தவர்களை தேர்ந்தெடுக்குமாறு



படிப்பகம்

www.padippakam.com

சோ, உதயமூர்த்தி வகையறாக்கள் உபதேசிப்பது நல்ல வேடிக்கை!

ஜப்பானில் வேலை செய்யும் இதர ஆசிய நாட்டுப் பெண்களை ஜப்பானிய பணக்காரர்கள் மணம் முடித்து பின்னர் கைவிடுவதென்பது இப்போது பெருகிவிட்டது. இலங்கையைச் சேர்ந்த பிரியா என்ற இளம்பெண் கம்ப்யூட்டர் உயர்கல்வி கற்க ஜப்பானுக்கு வந்து ஒரு சிறு தொழில் அதிபரை மணந்து கொண்டார். மூன்று மாதங்களுக்குப் பின் அவர் கணவரால் கைவிடப்பட்டார். இதை எதிர்த்து அவர் தொடுத்த வழக்கு இன்று ஜப்பானில் பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இளம் பெண்களை கீழை நாடுகளிலிருந்து ஜப்பானுக்கு இறக்குமதி செய்வதற்கென்றே 700 க்கும் மேற்பட்ட புரோக்கர் நிறுவனங்கள் ரகசியமாக இயங்குகின்றன என்று இப்போது அம்பலமாகியுள்ளது. கைவிடப்பட்ட பல பெண்கள் விபச்சாரத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாகரீகத்தைப் பற்றி கதைக்கும் ஏகாதிபத்திய உலகம் மிகவும் கொடியது. அது மனித உறவுகளைக் கூட சந்தைப் பொருளாக்கிவிட்டது.

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில், அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது ராணுவ தளத்தை அமைக்க முயற்சித்து வருகிறது. இதை மறைத்து, போதை மருந்து ஒழிப்பு நடவடிக்கையை மேற்பார்வையிடுவது என்ற பெயரில் 100 அமெரிக்க ராணுவ ஆலோசகர்கள் ஏப்ரல் முதல் வாரத்தில் பொலிவியாவுக்கு வந்தனர். இதை எதிர்த்து, ''நாட்டை அமெரிக்காவுக்கு அடிமையாக்காதே! அமெரிக்காவே, பொலிவியாவில் வாலாட்டாதே!'' என்று வட பகுதியிலுள்ள பெனி எனும் நகரத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் அப்பிராந்தியத்திலுள்ள விவசாயிகளும் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணித்து ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். பொலிவியா மக்களின் வீரஞ்செறிந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை கண்டு பீதியடைந்த அமெரிக்கா, தனது நடவடிக்கையிலிருந்து இப்போது தற்காலிகமாக பின்வாங்கியுள்ளது.

இந்தியாவிலிருந்து 1967 விருந்து 85க்குள் நாட்டை விட்டு வெளியேறிய தொழில் நுட்ப வல்லுநர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் பல லட்சம் பேர். இதனால் இந்தியாவுக்கு 10,000 கோடி ரூபாய் மதிப்புடைய மனித அறிவு மூலதன இழப்பு ஏற்பட்டுள்ளது. 1988 க்குள் இது இரு மடங்காக அதிகரித்துள்ளது. ஏழை நாடுகள் ஆண்டுக்கு 50% மருத்துவர்கள், விஞ்ஞானிகளை இப்படி மூளை வடிகால் மூலம் இழப்பதாக ஐ.நா.சபையின் புள்ளிவிபர அறிக்கை கூறுகிறது. இருப்பினும் இதை ஈடுகட்ட ஏராளமான பொருளாதார உதவிகளைச் செய்வதாக அமெரிக்க கூறுகிறது. ஆனால் 1970 ல் அமெரிக்கா ஏழை நாடுகளுக்குச் செய்த உதவியின் மொத்த மதிப்பு ஏறத்தாழ 5000 கோடி ரூபாய். ஆனால் அதே ஆண்டில் ஏழை நாடுகளிலிருந்து விஞ்ஞானிகளை இறக்குமதி செய்த வகையில் அது அடைந்த ஆதாயம் ஏறத்தாழ 8000 கோடி ரூபாய்!.




கர்நாடகத்தில் குடகு பிராந்தியத்தைச் சேர்ந்த பழங்குடியினர் சுயாட்சி உரிமை கோரி போராடி வருகின்றனர். குடகு பிராந்தியத்தை தனித் தொகுதியாக ஏற்க்கக்கூட தேர்தல் கமிஷன் மறுத்து விட்டது. ஓட்டுக் கட்சிகளும் அவர்களது கோரிக்கையை புறக்கணித்து விட்டன. தொடர்ந்து பின்தங்கிய நிலையில் இருத்தி வைத்து அடக்கி ஒடுக்கி சுரண்டுவதை இனிமேலும் அனுமதிக்க மாட்டோம் என்று இப்போராட்டத்தை தலைமையேற்று நடத்தும் குடகு விடுதலை முன்னணி, வரப்போகும் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக எச்சரித்துள்ளது.




கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஓட்டுப் பொறுக்க பீகாருக்குச் சென்றார் ராஜீவ். மாதேவ் புரா எனும் கிராமத்தில் அவரது பாதுகாப்புக்காக சென்ற போலீஸ் ஜீப், மோசமான சாலையின் காரணமாக நிலை தடுமாறி ஒரு வீட்டின் வேலியின் மீது மோதி சேதப்படுத்திவிட்டது. உடனே ராஜீவ் மக்கள் முன்னே தனது சூரத்தனத்தை காட்டும் நோக்குடன், அப்போலீசாரைக் கண்டித்து ஜீப்பின் சாவியை உருவிக் கொண்டு திருப்பித்தர மறுத்ததோடு டெல்லிக்கும் சென்று விட்டார். இந்த அத்துமீறிய செயலை எதிர்த்து பாட்னா நகர போலீசார், சாவியை உடனடியாக திருப்பித் தராவிட்டால் ராஜீவ் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்வோம் என்று எச்சரித்தனர். அரண்டு போன காங்கிரஸ் எடுபிடிகள் ராஜீவிடமிருந்து சாவியை வாங்கி ஒப்படைத்துள்ளனர்.



ராம் மனோகர் லோஹியாவின் நூறாவது பிறந்தநாளை கோலகலமாகக் கொண்டாட முடிவு செய்த பீகார் அரசு, முதல்வர் லல்லு பிரசாத் யாதவின் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து விழா ஏற்பாடுகளைச் செய்து வந்தது. மார்ச் 3ம் தேதியன்று விழா நடைபெறும் என்று பல வண்ண அழைப்பிதழ், போஸ்டர், பத்திரிக்கைகளில் விளம்பரம், விழா மேடை அலங்கரிப்பு என அனைத்தும் தயாராகிவிட்டன. கடைசியில் லோஹியாவின் பிறந்த நாள் மார்ச் 3 ம்தேதி அல்ல; மார்ச் 23 தான் என்று தெரிய வந்ததும் அனைத்தையும் பீகார் அரசு அவசரமாக தள்ளிவைத்தது. தாங்கள் லோஹியாவின் கொள்கை வழியில் நடப்பவர்கள் என்று பீற்றிக் கொள்கிறது ஜனதாதளக் கட்சி. ஆனால் அவரது பிறந்த நாளைக் கூட நினைவில் கொள்ளாத பிழைப்புவாத கும்பல்தான் அது என்பதை இச் சம்பவம் தெளிவாகவே காட்டிவிட்டது.

சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ.எம்.எப்) கடன் வாங்கும் ஒவ்வொரு முறையும் இந்தியா தனது சுயாதிபத்திய உரிமைகளை இழப்பதென்பது வாடிக்கையாகிவிட்டது. உலக வங்கியின் நிர்ப்பந்தத்தால் அதன் கையாளான மான்டெக்சிங் அலுவாலியா வர்த்தக அமைச்சகத்தின் முக்கிய பொறுப்பில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார். இப்போது புதிதாக கடன் வாங்கியதையடுத்து இதர பொருளாதார நிபந்தனைகளுடன் மான்டெக்சிங்கின் ஏற்பாட்டின்படி அவரது விசுவாசிகள் அரவிந்த் விர்மானி, சீனிவாஸ் மாத்தூர் ஆகியோரையும் நிதித்துறை அமைச்சகத்தில் நியமிக்குமாறு ஐ.எம்.எப் நிர்ப்பந்திக்கிறது. இப்பொறுப்பில் அமர்த்த முறைப்படி அவர்கள் தகுதி பெற்றவர்கள் அல்ல என்று இந்திய அரசு வாதிட்ட பிறகு, தற்போதைக்கு திட்ட கமிஷனில் அமர்த்துமாறு ஐ.எம்.எப். கட்டளையிட்டுள்ளது. போகிற போக்கை பார்த்தால் இந்திய நிதித்துறை - வர்த்தகத் துறை அமைச்சகங்கள் இனி அமெரிக்காவில் இயங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# ஆதிக்க சக்திகளின் பகடைக்காய்

**நூறாண்டு கால போராட்ட வரலாற்றைக் கொண்ட குர்திஷ் இன மக்களின் போராட்டம், மீண்டும் ஏகாதிபத்தியம் மற்றும் அராபிய பெருந்தேசிய இனவெறிக்கு பகடைக் காயாக்கப்பட்டு விட்டது.**

வானிலிருந்து குண்டு மழை; தரையிலிருந்து பீரங்கித் தாக்குதல். இனி இந்த மண்ணில் வாழ முடியாது என்று உயிருக்கு அஞ்சி அவர்கள் ஓடினார்கள். கரடு முரடான மலைப்பாதை; கொட்டும் பனி; வாட்டும் குளிர். ராணுவம் எந்த நேரம் தாக்குமோ என்று ஊரைவிட்டு ஓடிவந்த அவர்கள் திறந்த வெளியில் குழந்தை குட்டிகளுடன் குடும்பம் குடும்பமாக அவதிப்பட்டார்கள். ஒருவரல்ல, இருவரல்ல; லட்சக்கணக்கான குர்திஷ் இன மக்கள் அவர்கள்!

உண்ண உணவில்லை; குடிக்க நீரில்லை; குழந்தைக்குப் பாலில்லை. பிஞ்சுக் குழந்தைகள் குளிரில் விறைந்து அடுத்தடுத்து ஆயிரக் கணக்கில் மாண்டு போயின. மற்றவர்கள் நோய் தாக்கி சுருண்டு விழுந்து இறந்தனர். அவர்கள் நடந்து வந்த பாதையெங்கும் இடுகாடாகியது. அண்டை நாடுகள் தங்களை ஆதரிக்கும் என்று அகதிகளாக அங்கே ஓடினார்கள். கிஞ்சித்தும் மனிதாபிமானமின்றி அந்நாடுகளும் அவர்களை விரட்டியடித்தன.

ஆறு வார காலத்துக்கு நீடித்த வளைகுடாப் போரைத் தொடர்ந்து, ஈராக்கில் சர்வாதிகாரி சதாம் உசைனுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த குர்திஷ் இன மக்களின் அவலக் கதை இது. மீண்டும் அவர்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டம் மிருகத்தனமாக நசுக்கப்பட்டு விட்டது. ஏகாதிபத்தியங்கள் மற்றும் அராபிய இனவெறியர்களின் ஆதிக்க நோக்கங்களுக்கு குர்திஷ் மக்கள் மீண்டும் பகடைக் காயாக்கப்பட்டு நிர்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

### நூறாண்டு கால அடக்குமுறை

ஏறத்தாழ இரண்டரை கோடி மக்கட் தொகையைக் கொண்ட குர்திஷ் இனம், அராபிய இனத்திலிருந்து வேறுபட்டது. அவர்கள் ஈரான், ஈராக், துருக்கி, சிரியா ஆகிய நாடுகள் சந்திக்கும் எல்லையோர மலைப் பகுதியில் நெருக்கமாக வாழ்கிறார்கள். ரஷியாவில் காகசஸ் பிராந்தியம் வரை அவர்கள் விரிந்து பரவியுள்ளார்கள். இவர்கள் ''சன்னி'' முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள்; ஆனாலும் அராபிய மொழி, கலாச்சாரத்திலிருந்து வேறுபட்டவர்கள்.

துருக்கியில் 1.1. கோடிப்பேரும், ஈரானில் 60 லட்சம் பேரும், ஈராக்கில் 35 லட்சம் பேரும் எஞ்சியுள்ளோர் சிரியா, ரஷியாவிலுமாக குர்திஷ் மக்கள் பிரிந்துள்ளனர். அவர்களுக்கென பொதுவான மொழியும் கலாச்சாரமும் இருந்த போதிலும், சொந்தமான நாடு இல்லை; சுயநிர்ணய உரிமையும் இல்லை.

குர்ஷித் இன மக்களின் சுயநிர்ணய உரி. மைக்கான போராட்டம் நூறாண்டு வரலாற்றைக் கொண்டது. 1918-ல் துருக்கியில் ஒட்டாமான் பேரரசு வீழ்ச்சியடைந்ததும், அதுவரை உரிமை கோரி போராடி வந்த குர்திஷ் மக்களுக்கு தனியே ஒரு நாட்டை உருவாக்குவதென துருக்கி அரசு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. நவீன துருக்கியின் தந்தையாக சித்தரிக்கப்படும் முஸ்தபா கமால், இந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து குர்திஷ் பிராந்தியத்தை துருக்கியின் காலனியாக்கினார். இதை எதிர்த்து குர்திஷ் மக்கள் தொடர்ச்சியாக பல பேராட்டங்களை நடத்தினர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் நெருக்கடியைச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் ஈரானின் வட பகுதியில் குர்திஷ் மக்கள் 'கலகம்' செய்தனர். ஈரான் மன்னர் ஷா இப்போராட்டத்தை மிருகத்தனமாக அடக்கினார். அதே நேரத்தில் முல்லா முஸ்தபா பர்ஜானி என்பவர் சிறிய படையொன்றை கட்டியமைத்து குர்திஷ் மக்களின் உரிமைக்காக ஈராக்கில் போராடினார். ஈராக்கின் அன்றைய முடியாட்சி அதை நசுக்கியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது வான் படைகளைக் கொண்டு குண்டுவீசி ஈராக்குக்கு உதவியது.

பர்ஜானியின் தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக 1961-ல் குர்திஷ் மக்கள் சில சலுகைகளைப் பெற்றனர். பின்னர் 70களில் குர்திஷ் பிராந்தியம் ஈராக்கின் சுயாட்சி மாநிலமாக ஏற்கப்பட்டு, அப்பகுதியில் குர்திஷ் மொழியை தாய்மொழியாக ஏற்க சதாம் உசைன் ஒப்புக் கொண்டார்.

வளைகுடா பிராந்தியத்தில் ஈராக் ராணுவ ரீதியில் ஆதிக்க சக்தியாக வளர்வதைக் கண்ட அமெரிக்காவும், அன்றைய ஈரானின் மன்னர் ஷாவும் இஸ்ரேலுடன் கூட்டு சேர்ந்து அதை முறியடிக்க குர்திஷ் போராட்டத்தை ஒரு கருவியாக பயன்படுத்தினர். குர்திஷ் போராட்டத் தலைவர் பர்ஜானிக்கு ஈரான் ரகசியமாக உதவி செய்தது ஆனால் ஷாவும் சதாமும் எல்லை தாவா குறித்து ஒரு உடன்பாடு செய்து கொண்ட பிறகு, ஈரான் இந்த உதவியை நிறுத்திவிட்டது.

### சதாமின் காட்டுமிராண்டிதனம்

பின்னர் 1980-ல் ஈரான் ஈராக் யுத்தம் மூண்ட போது, அதைச் சாதகமாக்கிக் கொண்டு ஈராக்கிலுள்ள குர்திஷ் மக்கள் 'கலகம்' செய்தனர். 1985-ல் முஸ்தபா பர்ஜானியின் மகன் மசூத் பார்ஜானிக்கும், கொரில்லா படைத் தலைவர் தலபானிக்கும் ஈரான் ரகசியமாக உதவி செய்தது. அதைத் தொடர்ந்து 1988-ல் குர்திஷ் இதுவரை காணாத கொரில்லா தாக்குதல்களை நடத்தி, 10,000 சதுர கி.மீ. அளவுக்கு விடுதலைப் பிரதேசத்தை நிறுவனர்.

ஆனால் ஈரானுக்கு எதிராக இதர அரபு நாடுகள் அளித்த பெருமளவு நிதியுதவியைக் கொண்டு வலுவான ராணுவத்தைக் கட்டியமைத்திருந்த சதாம். அடுத்த சில நாட்களிலேயே குர்திஷ் போராட்டத்தைக் காட்டுமிராண்டித்தனமாக அடக்கினார். 1988-ல் ஹாலப்ஜா நகரில் விஷவாயு கண்டுகளை ஏவி பல்லாயிரக்கணக்கான குர்திஷ் மக்களைக் கொன்றொழித்தார். இது தவிர ராணுவத் தாக்குதலில் 10,000 பேர் மாண்டனர் 50,000 பேர் வீடிழந்தனர்.

### துருக்கியில் ஒரு தென்னாப்பிரிக்கா

ஈராக்கிய மக்கட் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினராக உள்ள குர்திஷ் மக்கள் எதிர் கொள்ளும் அடக்குமுறையை விட, துருக்கியிலுள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குர்திஷ் மக்கள் அனுபவிக்கும் அடக்குமுறை மிகக் கொடூரமானது. குர்திஷ் மக்கள் தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டார்கள் என்று கூறி அவர்களின் தாய்மொழியையே துருக்கி அரசு தடை செய்தது. குர்திஷ் இலக்கியங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. குர்திஷ் இன மார்க்சியத் தொழிலாளர் கட்சி நடத்

***எந்த ஆதிக்க சக்தியையாவது சார்ந்து நின்று வெற்றியைச் சாதிக்கலாம் என்ற எண்ணமே குர்திஷ் போராட்டத் தலைவர்களிடம் மேலோங்கி நிற்கிறது. இத்தகைய குட்டி முதலாளித்துவ வர்க்கத் தன்மையின் காரணமாக குர்திஷ் மக்களின் நியாயமான போராட்டம் மீண்டும் மீண்டும் தோல்வியடைகிறது.***



படிப்பகம்

www.padippakam.com

திய பல்வேறு வீரஞ்செறிந்த போராட்டங்கள் ரத்தவெள்ளத்தில் நசுக்கப்பட்டன.

சில மனித உரிமைக் குழுக்களின் கூற்றுப்படி அவர்கள் தென்னாப்பிரிக்க கருப்பின மக்களைவிட கொடூரமாக ஒடுக்கப்பட்டார்கள். ஈராக்கிலுள்ள பெயரளவிலான உரிமைகள் கூட துருக்கியில் கிடையாது. எப்போதும் ராணுவக் கண்காணிப்பின் கீழ் குர்திஷ் இனமக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

துருக்கியைப் போலன்றி, ஈரான் சிரியா ஆகிய நாடுகளில் வாழும் குர்திஷ் மக்களுக்கு ஈராக்கில் உள்ளதைப் போல பெயரளவிலான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருப்பதால் அவர்கள் ஐக்கியப்பட்டு போராட்டங்களை நடத்த முடிவதில்லை. இந்நாடுகளை விட ரஷியாவின் காகசஸ் பிராந்தியத்தில் வாழும் குர்திஷ் மக்கள் ஒப்பீட்டளவில் கூடுதலாக சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றுள்ளார்கள்.



குர்திஷ் அகதிகள்; சதாம் உசேன் அரசின் கோர தாக்குதலுக்கு ஆளானவர்கள்.

### ஈராக்கின் இனவெறி பயங்கரவாதம்

வளைகுடாப் போரில் சதாம் அரசு பலவீனப் பட்டதையடுத்து மீண்டும் குர்திஷ் இனமக்கள் தமது சுயநிர்ணய உரிமைப் போரைத் துவக்கினர். மார்ச் மத்தியில் எண்ணெய் வயல் நகரமான கிர்குக்கை போராளிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தனர். அர்பில், தாஹுக், அமாதியா ஆகிய சிறு நகரங்கள் போராளிகளின் கோட்டையாகியது. நீண்ட காலமாக அடக்கியொடுக்கப்பட்டு வந்த குர்திஷ் மக்கள் தமக்கென ஒரு தாயகத்தை நிறுவி விடுவார்கள் என்றே பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அந்த நம்பிக்கை மீண்டும் மணற்கோட்டையாக சரிந்துவிட்டது. ஈராக்கிய ராணுவம் குர்திஷ் பிராந்தியத்தை சுற்றி வளைத்து குண்டுமாரி பொழிந்தது. அதிநவீன ஆயுதப் பயிற்சி பெற்ற சதாமின் குடியரசு காவற்படை குர்திஷ் மக்கள் மீது பாய்ந்து குதறியது. எதிரிநாட்டுப் படைகளுடன் மோதுவது போல சதாம் உசைன் தாக்குதலைத் தீவிரமாக்கினார். அப்பாவி சிவிலியன்கள் மீது நடத்தப்பட்ட இந்தக் கொடூரத் தாக்குதலில் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். லட்சக் கணக்கானோர் வீடுகளை, உடமைகளை இழந்து அகதிகளானார்கள்.

### ஆதிக்க வெறியர்களின் பகடைக்காய்

வளைகுடாப் போர் தொடங்கியதும் சதாம் உசைனுக்கு எதிராக கலகம் செய்யுமாறு ஈராக் மக்களைத் தூண்டினார், அமெரிக்க அதிபர் புஷ். குர்திஷ் மக்கள் உரிமைகளின்றி அடக்கப்படுவதாக நீலிக்கண்ணீர் வடித்தார். அமெரிக்க அடிவருடி துருக்கி அரசு, சதாமுக்கு எதிராகப் போராடுமாறு குர்திஷ் மக்களுக்கு ரகசிய உதவிகளைச் செய்தது. சௌதி அரேபியாவில் ஜெட்டா நகரில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ ரகசிய வானொலி நிலையம் அமைத்துக் கொடுத்து குர்திஷ் போராட்டத் தலைவர்களின் பிரச்சாரத்துக்கு உதவியது. நாடு கடந்து வாழும் குர்திஷ் போராட்டத் தலைவர்களை அழைத்து சதாம் ஆட்சியைக் கவிழ்க்கப் போராடுமாறு அமெரிக்கா கேட்டுக் கொண்டது.

ஆனால், வளைகுடாப் போரில் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் வெற்றி பெற்றதும், குர்திஷ் விவகாரத்தை அவர்கள் கைகழுவி விட்டனர். தமது நோக்கங்கள் நிறைவேறியதும் குர்திஷ் மக்களை கறிவேப்பிலையாக தூக்கியெறிந்து விட்டனர்.

எந்த நிவாரண உதவியுமின்றி அல்லற்படும் குர்திஷ் மக்களின் அவலக்குரல் உலகெங்கும் எதிரொலிக்கத் தொடங்கியதும், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் மீது உலக மக்கள் வெறுப்பை உமிழ்ந்தனர். மேலைநாடுகளைச் சேர்ந்த சில சமூக சேவை நிறுவனங்கள் தாமாக முன்வந்து உதவி செய்யத் தொடங்கின. இந்நிலையில் உலக மக்கள் முன் மேலும் அம்பலப்படுவதற்குள் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் அவசரமாக குர்திஷ் மக்கள் மீது திடீர் கரிசனையைக் காட்டினர். உடனடியாக நிவாரண உதவிகள் குர்திஷ் பிராந்தியத்துக்குப் பறந்தன. அமெரிக்காவும் துருக்கியும் தமது படைகளை குர்திஷ் பகுதியில் கொண்டு போய் குவித்தன.

ஈராக்கிய படைகளிடமிருந்து குர்திஷ் மக்களைக் காக்கவே இந்த நடவடிக்கை என்று தமது அத்துமீறிய ஆக்கிரமிப்பை அமெரிக்கா நியாயப் படுத்தியது. அகதிகளின் நிலையைக் காரணம் காட்டி எந்த நாட்டிலும் தலையிட்டு ஆதிக்கம் செலுத்தலாம் என்பதை ஏகாதிபத்தியங்கள் இதன் மூலம் புதிய மரபாக்கியுள்ளன.

வளைகுடாப் போரினாலும் உள்நாட்டில் ஷியா பிரிவு முஸ்லீம்கள் மற்றும் குர்திஷ் மக்களின் போராட்டங்களால் சதாமின் ஆட்சி கவிழும் என்றே மேலைநாடுகள் எதிர்பார்த்தன. ஆனால் சதாம் தனது அதிகாரத்தை தக்க வைத்து கொண்டதோடு, போராட்டங்களை அடக்குவதிலும் தற்காலிகமாக வெற்றியும் பெற்றுள்ளார். எனவே சதாமுக்கு மீண்டும் தொல்லை கொடுக்கும் நோக்குடன் குர்திஷ் போராட்டத்தை அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் பகடைக்காயாக பயன்படுத்த முயற்சிக்கின்றனர். மேலும் குர்திஷ் போராட்டம் தீவிரமானால் அது சிரியா, துருக்கி ஆகிய அமெரிக்க அடிவருடி நாடுகளுக்கு பெரும் தலைவலியாகி விடும் என்று அஞ்சுகின்றனர்.

கடைசியில் குர்திஸ்தான் லட்சியம் கானல் நீராகிவிட்டது. குர்திஷ் பிராந்தியத்திலுள்ள போரிடும் அமைப்புகள் இன்று வரை ஐக்கியப்படாமல் 20க்கும் மேற்பட்ட குழுக்களாகப் பிளவுபட்டுக் கிடக்கின்றன. பார்ஜானி, தலபானி போன்ற முன்னணித் தலைவர்களிடம், யாரையாவது சார்ந்து நின்று அவர்களது தயவில் வெற்றியைச் சாதிக்கலாம் என்பதே மேலோங்கி நிற்கிறது. இதற்காக ஆதிக்க வெறியர்களின் தீய நோக்கங்களுக்கு குர்திஷ் போராட்டத்தை பகடைக்காயாக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இத்தகைய குட்டி முதலாளித்துவ வர்க்கத் தலைமையின் காரணமாக குர்திஷ் மக்களின் நியாயமான போராட்டம் மீண்டும் மீண்டும் நசுக்கப்பட்டு வருகிறது.

ஐந்து நாடுகள் சந்திக்கும் எல்லைப் பகுதியில் வாழ்வது என்பதே குர்திஷ் மக்களுக்கு பூகோள - ராணுவ ரீதியில் சாதகமானது. அனைத்து நாடுகளிலுமுள்ள குர்திஷ் மக்கள் ஐக்கியப்பட்டு போராடியிருந்தால் எப்போதோ வெற்றியைச் சாதித்திருக்க முடியும். ஆனால், அவர்கள் தமது சொந்தக் காலில் நிற்பதை விடுத்து, ஒவ்வொரு முறையும் ஆதிக்க வெறியர்களின் தீய நோக்கங்களுக்குப் பலியாகி, பகடைக்காயாக்கப்பட்டு தொடர்ந்து தோல்வியடைகிறார்கள். அவர்களது நூறாண்டுகால வரலாறு இதையே நிரூபித்துக் காட்டுகிறது. எந்தவொரு தேசிய இனப் போராட்டமும் தமது மக்களைச் சார்ந்து ஐக்கியப்பட்டு போராடாதவரை விடுதலையை ஒருக்காலும் சாதிக்க முடியாது என்ற அரிய படிப்பினையை மீண்டுமொரு முறை உலகிற்கு உணர்த்தியுள்ளது, குர்திஷ் மக்களின் போராட்டம்!

● மனோகரன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: செ.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com




கனவுலக காட்சி அல்லது இது! ஜனதா தள் கட்சியின் தேர்தல் பிரச்சார மேடை! 11 மாதமே ஆட்சியில் இருந்த கட்சியே பணத்தை இப்படி கொட்ட முடியும் என்றால் மற்ற கட்சிகளின் தேர்தல் செலவை எப்படி வர்ணிப்பது? விண்ணுலக தேவர்களும் தாரகைகளும் மண்ணுலகுக்கு வருவது சினிமாவில் மட்டுமா? தேர்தல் சமயங்களில் ஓட்டுக்கட்சித் தலைவர்களும் அப்படித்தானே வருகின்றார்கள்? பிரம்மாண்டமான மேடைகளில் ஒளி வெள்ளத்தின் நடுவே தோன்றுகிறார்கள். கருணாநிதி தமிழ் மாமன்னர்களின் வாரிசாக கோட்டை, கொத்தளம் போன்ற மேடைகளிலிருந்து செங்கோலுடன் காட்சி தந்தால்... ஜெயலலிதா - ராஜீவ் திராட்சை குலைகளும் பூக்களும் தொங்கும் அரண்மனை அந்தப்புரம் போன்ற மேடைகளில் தோன்றுகிறார்கள்.

இதோ, வீதியோரம் பிறந்து வாழ்ந்து இறந்து போகும் கோடான கோடி உழைப்பாளி குடும்பங்களில் ஒன்று! இவர்களுடைய ரத்தமும் சதையும் உழைப்பும் கௌரவமும் யாரால் சூறையாடப்பட்டது? இந்த அவலம் எப்படி நேர்ந்தது? அதைப் பற்றி யாருக்கு கவலை! உயிரோடு ஒரு தாய் குலம்! ஒரு ஓட்டு கிடைத்துவிட்டது என்று பேரம் பேசுகின்றன ஓட்டுக்கட்சிகள்! வெற்று வாக்குறுதிகள் மீண்டும் கொடிகட்டி பறக்கின்றன.

'ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் போய் ஆண்டுக்கு ஒரு முறை இப்போது புதுபுது ஜனநாயக கூட்டணிகளோடு மக்களின்' பெயரால் நாட்டை சூறையாடுகின்றனர். ஆடம்பர, ஆபாச வக்கிர வாழ்க்கையில் திளைக்கின்றனர்.

இந்த உண்மை கண்ணெதிரே தெரிந்தும் இன்னும் இந்த போலி ஜனநாயகத் தேர்தலில் நாம் வாக்களிப்பதா? நமக்கு நாமே இந்த நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் அசிங்கத்தை எடுத்து பூசிக்கொள்வதா?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்